Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E-Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3110)

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 22 செவ்வாய்க்கிழமை (08.10.2013) பக்கங்கள் 20 ஓசை - 008

# ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றார் விக்கி



(கொழும்பு)

வடக்கு மாகாண முதலமைச்சராக தெரிவுசெய்யப்பட்ட சி.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்றைய தினம் சத்தியப் பிரமாணம் செய்து பதவியை ஏற்றுக்கொண்டார்.

நேற்று முற்பகல் 9.30 மணியளவில் அலரிமாளிகையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியை ஏற்றார்.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோருடன், புளொட் தலைவர் தர்ம லிங்கம் சித்தார்த்தன் மற்றும் முதலமைச்சரின் குடும்ப அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த பதவியேற்பு நிகழ்வில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## அரசுடன் ஒத்துழைத்தால் அபிவிருத்தி தொடரும்

### விக்கியிடம் மகிந்த

(கொழும்பு)

அரசாங்கத்துடன் ஒத்துழைத்து செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாரென்றால் வடக்கின் அபிவிருத்தி, மேம்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்க தாம் தயாரென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடமாகாண முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் பதவியேற்றதன் பின்னர் இடம்பெற்ற தேநீர் விருந்துபசார நிகழ்வில் சகஜமாக ஜனாதிபதி கலந்துரையாடும்போதே இப்படிக் கூறியதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

நான் இந்த நாட்டின் அனைத்து பிரதேச மக்களுக்கும் உரித்தான

(19) ஆம் பக்கம் பார்க்க

## இன சந்தேகத்தை அகற்றவே ஜனாதிபதி முன் பதவிப் பிரமாணம்

### விளக்குகிறார் முதல்வர் விக்கி

(கொழும்பு)

இனங்களுக்கிடையே எழுந்துள்ள சந்தேகங்களை அகற்றுவது காலத்தின் தேவையாக அமைந்துள்ளது. அதன் ஒரு அலகாகவே நாட்டின் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்ய தீர்மானிக்கப்பட்டதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பதவியேற்பின் பின்னர் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

என்னுடைய பதவியின் செயல பண்புகளையும் கடப்பாடுகளையும் நான் நேர்மையுடனும் நம்பிக்கையுடனும் இயற்றுவேன் என்றுதான் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டேன்.


என்னுடைய பதவி வடமாகாண மக்கள் எனக்களித்த பதவி. தூரநோக்கின் அடிப்படையிலும் கிட்டியநோக்கின் அடிப்படையிலும் கடமையாற்றும்படி அவர்கள் எனக்கு ஆணை வழங்கியுள்ளார்கள்.

தூரநோக்கு எமது தனித்துவத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. அதனை அடைய நாம் எமது கடந்த காலப் போராட்டங்கள், அரசியல் அணுகுமுறைகள், அனுபவங்கள் யாவற்றிலிருந்தும் பாடங்களைக் கற்றே முன்னேற வேண்டி உள்ளது.

எமது செயற்பாடு ஐக்கிய இலங்கைக்குள்ளேயே நாம் அரசியல் தீர்வொன்றை எதிர்

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு முதல்வருக்கு ஜனாதிபதியின் பரிசு



(கொழும்பு)

வடக்கு மாகாண முதலமைச்சராகப் பதவியேற்ற சி.வி.விக்னேஸ்வரனுக்கு, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விநாயகர் சிலை ஒன்றைப் பரிசாக வழங்கியுள்ளார்.

நேற்றுக் காலை அலரி மாளிகையில் நடந்த பதவியேற்பு நிகழ்வு முடிந்ததும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மரத்தினாலான அழகிய விநாயகர் சிலை ஒன்றை

(19) ஆம் பக்கம் பார்க்க

## அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு தேசிய நல்லிணக்கத்தை தரும்

### இந்திய அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வின்மூலம் நாட்டின் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்க முடியும் என்பதை கொழும்பு தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும் என்றும் இவை இரண்டும் இப்போது இலங்கை அரசுக்கு அவசியம் என்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்தார்.

நேற்று கொழும்பு வந்துள்ள குர்ஷித் அங்கு வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் இணைந்து கூட்டாக செய்தியாளர் சந்திப்பு ஒன்றை கொழும்பில் நடத்தினார். அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிதாக ஆட்சி அமைத்துள்ள வடமாகாணசபை அரசாங்கம், மத்திய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை எட்டும். இலங்கையின் வடக்கில் நடந்த தேர்தல்கள் அங்குள்ள மக்களுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்தும்.

இலங்கை விவகாரங்களில் இந்தியா தீர்மானங்களை எடுக்காது. எனினும், தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் முனைப்புக்களுக்கு இந்தியா

(19) ஆம் பக்கம் பார்க்க

06



அபிவிருத்தி மோகம்

## அரசியல் தீர்வை ஏற்படுத்த அரசுடன் நல்லுறவு அவசியம்

### கூறுகிறார் சம்பந்தன்

(கொழும்பு)

போருக்கு பிந்தைய சமூகத்தில் தமிழ் மக்களுக்கு உடனடியாக கவனிக்கப்படவேண்டிய பல தேவைகள் இருக்கும் நிலையில், அந்தத் தேவைகளை பூர்த்தி செய்ய, ஒரு அரசியல் தீர்வு அவசியம், இதை அடைய மத்திய அரசுடன் ஒரு நல்லுறவும் அவசியம், எனவே தான் ஒரு சுமுகமான சமிக்ஞையைத் தரும் வண்ணம், வடமாகாண

(19) ஆம் பக்கம் பார்க்க

09



பதக்க வேட்டை

## நடைமுறைக்கு வருகிறது மனித உரிமை கல்வித் திட்டம்

(கொழும்பு)

மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பான கல்வித்திட்டம் ஒன்றை நடத்த இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை, இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகளை சந்தித்து இவ்வாறான யோசனை ஒன்றை முன்வைத்திருந்தார்.

அவரது

(19) ஆம் பக்கம் பார்க்க

11



இப்போது அதிகம்

## பதவிப்பிரமாணம் சிறந்த சமிக்ஞை அமைச்சர் டக்ளஸ் வாழ்த்து



(கொழும்பு)

ஜனாதிபதி முன்னிலையில் வடமாகாண முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் பதவிப் பிரமாணம் செய்தது சிறந்த சமிக்ஞையெனவும், இவ்வாறு மாகாணசபையையும் முன்னெடுத்துச் செல்வதில் இணைந்து செயற்பட வேண்டுமெனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை அலரிமாளிகையில் ஜனாதிபதி முன்னிலையில் வடக்கு முதல்வராக சி.வி. விக்னேஸ்வரன் பதவிப் பிரமாணம் செய்துகொண்டதையடுத்து

(19) ஆம் பக்கம் பார்க்க

## இரணைமடு குடிநீர் விநியோகத் திட்டம்; 90 ஆயிரம் இணைப்புக்கள் வழங்க ஏற்பாடு

### ஆசிய அபிவிருத்தி வங்கி ஆலோசகர் கூறுகின்றார்



(கிளிநொச்சி)

இரணைமடுக்குளம் புனரமைக்கப்பட்டதன்பின்னர் நீரின் அளவு 13 ஆயிரத்து 529 ஏக்கர் அடியாக அதிகரிக்கும், இருப்பினும் குடிநீர் திட்டத்திற்காக பயன்படுத்தப்படும் நீரின் அளவைத்தவிர 400 ஏக்கருக்கு நீரை மேலதிகமாக வழங்க முடியும் என எ.டி.பி. திட்ட ஆலோசகர் குரூஸ் தெரிவித்துள்ளார்

நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இரணைமடு குடிநீர் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இத்திட்டம் குறித்து அவர் மேலும் குறிப்பிடுகயில்,

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தை புனரமைப்பதனூடாக மேற்கொள்ளப்படும் குடிநீர் விநியோகத்திட்டத்திற்கமைவாக கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி மற்றும் பளை பிரதேசத்துடன், யாழ்ப்பாண மாவட்டத்தையும் உள்ளடக்கி 90 ஆயிரம் குடிநீர் இணைப்புகளை வழங்க முடியும்.

ஆனால் திட்டத்திற்கமைவாக 90 ஆயிரம் இணைப்புக்களையும் வழங்குவதற்கு 20 வருடங்கள் எடுக்கும், அதற்கமைவாக முதல் வருடத்தில் 10 ஆயிரம் இணைப்புகளும், இரண்டாம் வருடத்தில் 8 ஆயிரம் இணைப்புகளும், பின்னர் 5 ஆயிரம் இணைப்புகளும் என சராசரி 20 வருடங்களாக அதனுடைய கால எல்லை அமையும்.

குளத்தினுடைய நீரின் அளவு 34 கனஅடியாக உயர்த்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில், குடிநீருக்காக பயன்படுத்தப்படுதல், நீரின் ஆவியாதல் போன்ற விரையமாகும் காரணிகள் உள்ளடங்கலாக, 630 ஏக்கர் அடிநீரே நடைமுறைப்படுத்தப்படவுள்ள குடிநீர் விநியோகத்திற்காக பயன்படுத்தப்படும்.

குளத்தில் தற்போதுள்ள நீரின் கொள்ளளவு ஒரு இலட்சத்து 6 ஆயிரத்து 500 ஏக்கர் அடியே ஆகும் ஆனால் குளத்தின் நீர் மட்டத்தை 36 அடியாக உயர்த்துகின்ற சந்தர்ப்பத்தில் ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 975 ஏக்கர் அடி மேலதிகமாக கிடைக்கும், நீரின் அளவு 13 ஆயிரத்து 529 ஏக்கர் அடியாக அதிகரிக்கும் எனவே இதனடிப்படையில் 400 ஏக்கருக்கு நீரை மேலதிகமாக வழங்கமுடியும்.

எனவே இத்திட்டத்தின் மூலம் கிளிநொச்சி மக்கள் நன்மைகளையே எட்டுவர் கடந்த 2007 ஆம் ஆண்டு குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அன்றே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு சாத்திய மான திட்டமென தீர்மானிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கால்பந்தாட்டம் ஒத்திவைப்பு

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியினால் முன்னாள் அதிபர் அமரர் ஜெயரட்ணசிங்கத்தின் பிறந்த நாளை முன்னிட்டு யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்டு வந்த கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் மின்னொளியில் இடம்பெற ஏற்பாடாகியிருந்தது.

தவிர்க்க முடியாத காரணத்தினால் இப்போட்டி பிற்போடப்பட்டுள்ளதாகவும், போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளார். (முன்னர் வந்த செய்தி 9ஆம் பக்கத்தில்) (93)

## யோகக் கலை பயிற்சிப் பட்டறை

யாழ்.யோக அரங்கம் நடாத்தும் யோகாசனப் பயிற்சிப் பட்டறை அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் (நல்லூர் தேரடி அருகே) நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மாலை 5.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை பயிற்சிப்பட்டறை நடைபெறவுள்ளது.

அனுபவமுள்ள யோகா போதனாசிரியர்களால் இப் பயிற்சிப்பட்டறை நடாத்தப்படுவதுடன் கையேடுகளும் வழங்கப்படும். ஆர்வமுடைய அனைவரும் இணைந்து பயன்பெறலாம் என்று 'யாழ்.யோக அரங்கம்' அறிவித்துள்ளது.

## வருடாந்த விளையாட்டு விழா

(பொலிகண்டி)

பொலிகை ஒற்றுமை விளையாட்டுக்கழகம் நடாத்தும் இந்த ஆண்டுக்கான மாபெரும் விளையாட்டுப்போட்டி பொலிகண்டி ஆலடிச்சந்திக்கு அருகாமையில் எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

செ.செல்வமனோகர் தலைமையில் முதல்நாள் நிகழ்வுகள் காலை 7 மணிக்கு ஆரம்பமாகும். இரண்டாம் நாள் நிகழ்வுகளும் காலை 7 மணிக்கு மரதன் ஓட்டத்துடன் ஆரம்பமாகும்.

விளையாட்டுக்களில் பங்குபற்றவிரும்புவோர் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொண்டு விளையாட்டுக்களில் பங்குபற்றலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

## நவக்கிரியில் நாசவேலை தீயில் கருகின தென்னங்கன்றுகள்

(நவக்கிரி)

நவக்கிரி கந்தசாமி கோயிலுக்கு அருகில் உள்ள தனியார் காணி ஒன்றின் வேலிக்கு விசமிகள் தீயிட்டுள்ளனர்.



இது தொடர்பாக தெரிய வருகையில்,

நவக்கிரி பகுதியில் உள்ள இராசதுரை செல்வரட்ணம் என்பவருடைய தென்னங் காணிக்குள் இரவு வேளை புகுந்த விசமிகள் வேலிக்கு பெற்றோல் ஊற்றி தீ வைத்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த மூன்றாம் திகதி இரவு 1.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. வேலி தீயிட்டு எரிவதைக் கண்ட அயலவர்கள் உரிமையாளருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து, தீயினை அனைக்க முற்பட்ட சமயம் அனைத்து வேலியும் எரிந்து நாசமாகியுள்ளது.

இத்தீயிடல் சம்பவத்தின் போது வேலியின் அருகில் காணப்பட்ட பயன்தரு தென்னங்கன்றுகளும் எரிந்து கருகின.

இது தொடர்பாக கா[illegible] உரிமையாளரால் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. ஏற்கனவே காணி உரிமையாளருக்கும் அயலவர் ஒருவருக்கும் காணப்பட்ட தனிப்பட்ட விரோதம் காரணமாக இச்சம்பவம் இடம் பெற்றிருக்கலாம் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (15)

## பொலிஸ் வாகனம் மீது கல்வீச்சு யாழ்.நாயன்மார்கட்டில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாயன்மார்கட்டுப் பகுதியில் இடம்பெற்ற தகராறு சம்பவத்தை தடுக்கச் சென்ற பொலிஸ் வாகனத்தின் மீது கல்வீச்சுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு நாயன்மார்கட்டுப் பகுதியில் இளைஞர்களுக்கிடையே ஏற்பட்ட தகராற்றைஅடுத்து பொது மக்களினால் 119 பொலிஸ் பிரிவுக்கு அறியத்தரப்பட்டதாகவும், இதனையடுத்து ஸ்தலத்திற்கு பொலிஸார் வாகனத்தில் சென்றுள்ளனர். வாகனத்தில் சென்ற பொலிஸாரின் மீதே கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் பொலிஸ் வாகனம் சேதமடைந்துள்ளது. இது தொடர்பில் யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)

## இருள் கவ்வும் தம்பாலை சந்தி; இரவு நேரப் பயணிகள் சிரமம்

(அச்சுவேலி)

தம்பாலைச் சந்தியிலிருந்து மேற்குப் பக்கமாகச் செல்லும் விமான நிலைய வீதிப்பகுதியில் மின் விளக்குகள் எவையும் பொருத்தப்படாமையால் வீதிப் பகுதியானது இருளில் மூழ்கிக் காணப்படுவதாக பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

எனவே இரவு நேரங்களில் இந்த வீதியை பல்வேறு வாகனங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் பயணிக்கும் வேளையில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இரவு வேளைகளில் இருள் சூழ்ந்த இந்த வீதிப் பகுதிகளில் கட்டாக்காலியாகத் திரியும் நாய்கள் படுத்து உறங்குவதனால் துவிச்சக்கர வண்டிகளில் பயணிப்போர் விபத்துக்களை எதிர் நோக்கவேண்டிய அபாய நிலை காணப்படுவதாகவும் பயணிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கட்டாக்காலி நாய்கள் துவிச்சக்கரவண்டியில் பயணிப்போரை பின் தொடர்ந்து சென்று கடிப்பதற்கு எத்தனிப்பதாகவும், இதனால் அவர்கள் தமது துவிச்சக்கர வண்டிகளை வேகமாகச் செலுத்திச் செல்வதால் இருளில் எதிரே வரும் வாகனங்களையும் இனங்காண முடியாதுள்ளதாகவும் துவிச்சக்கர வண்டிகளில் விழுந்தெழும்பிச் செல்வதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக ஏற்கனவே பத்திரிகைகள் மூலம் தெரியப்படுத்தியும் சம்பந்தப்பட்டவர்கள் எவரும் இது தொடர்பாக அக்கறை எடுக்கவில்லை.

எனவே பயணிகள் எதிர்நோக்கும் பல்வேறு இன்னல்களையும் துன்பநிலையையும் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் குறித்த வீதிக்கு மின் விளக்குகளைப் பொருத்தி இருளில் மூழ்கிக் கிடக்கும் வீதிக்கு ஒளியை வழங்க முன்வர வேண்டும் எனப்பலரும் கோரிக்கை விடுக்கின்றனர். (85)

## மானம்பூ திருவிழா; திங்கள் கோலாகலம்

(யாழ்.நிருபர்)

எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை விஜயதசமி பூசை ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை கும்பம் வைக்கும் நிகழ்வுடன் நவராத்திரி பூசைகள் ஆரம்பமாகின. பல்வேறு கல்வி நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் நவராத்திரி விழா இம்முறை சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

பெரும்பாலான பாடசாலைகள் கடந்த சனிக்கிழமை பாடசாலை நாளாக அறிவித்து நவராத்திரி பூசையை கும்பம் வைத்து சிறப்பாக ஆரம்பித்திருந்தன.

எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமையும் பாடசாலை நாளாக அறிவிக்கப்பட்டு நவராத்திரி விழாவைச் சிறப்பாக கொண்டாடுவதற்கு இப் பாடசாலைகளின் இந்து மன்றங்கள் ஏற்பாடுகளை செய்து வருகின்றன. (10)

## நீரில் மூழ்கி சிறுமி பலி வவுனியாவில் சோகம்

(வவுனியா)

வவுனியா, அட்டம்பகஸ்கட வாவியில் நீராடிக்கொண்டிருந்த மூன்று சிறுவர்கள் நீரில் மூழ்கியதில் சிறுமியொருவர் பலியாகியதுடன் ஏனைய இருவரும் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என மாமடு பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வவுனியா மீள்குடியேற்ற கிராமமான செலலிஹினி பகுதியில் மீள்குடியேறிய குடும்பமொன்றைச் சேர்ந்த அஹின்சா நில்மினி (வயது - 12) என்ற சிறுமியே சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

அச்சிறுமியின் சகோதரர்களான அபிஷேக் தில்ஷான் (வயது 13) மற்றும் உமயங்க தில்ஷான் (வயது - 10) ஆகிய இருவருமே காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தனது தாயாருடன் வாவியில் நீராடச் சென்ற இச்சிறுவர்கள், தாமரைப் பூ பறிக்க முற்பட்ட போதே நீரில் மூழ்கியுள்ளனர் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மாமடு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தேவை பொது மண்டபம் பொது மக்கள் கோரிக்கை

தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வசாவிளான் கிராமத்திற்கு பொது மண்டபம் ஒன்று இல்லாததால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக கிராம அபிவிருத்தி சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

தற்போது மிள்க்குடியேறியுள்ள 75 குடும்பங்கள் தமது தேவைகள் தொடர்பாக கிராம அபிவிருத்தி கூட்டங்களைக் கூட்டி கலந்தாலோசிப்பதற்கு ஒரு பொது நோக்கு மண்டபம் இல்லாமல் மரநிழலில் கூடுவதாக மேலும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தனியார் நிறுவனம் ஒன்றால் அபிவிருத்தி சங்கத்திற்கென கொடுக்கப்பட்ட கதிரைகளினை வைப்பதற்கு இடம் இல்லாமல் பொது நபர்களின் வீட்டில் வைப்பதாகவும் இதனால் தாம் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் அபிவிருத்தி சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். எனவே இது தொடர்பாக ஏதேனும் ஒரு தொண்டு நிறுவனம் முன்வந்து பொது மண்டபத்தை அமைத்து தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (15)

## பூநகரி பிரதேச சபையின் உள்ளூராட்சி வார வேலைத்திட்டம்

(முழங்காவில்)

உள்ளூராட்சி வாரத்தை யொட்டி பூநகரி பிரதேச நிர்வாகத்தினர் பல்வேறு வேலைத் திட்டங்களை எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் முன்னெடுக்க உள்ளதாக அறிவித்துள்ளார்கள்.

இதன்படி எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் முக்கொம்பன் கிராம மக்களின் நலன்கருதி அக்கிராமத்தில் ஆயுர்வேத நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

22 ஆம் திகதி பணியாளர்கள், சபை உறுப்பினர்கள் இணைந்து சபைக்கு வரவேண்டிய நிலுவைகளை அறவீடு செய்யும் பணியில் வெளிக்களத்தில் ஈடுபடுவர்.

மேலும் 23 ஆம் திகதி பல்வேறு பகுதிகளில் சிரமதானப் பணிகள் நடைபெறவுள்ளன. 24 ஆம் திகதி பூநகரி பகுதி சன சமூக நிலையங்களுக்கான வலுவூட்டல் போட்டியும் 25 ஆம் திகதி சுற்றாடல் மற்றும் பொது இடங்களில் ஆயுர்வேத மூலிகை மரங்கள் நாட்டல் என்பன இடம்பெறவுள்ளது.

26 ஆம் திகதி கல்வி, நூலக அபிவிருத்தி பாடசாலை மாணவர்களுக்கான நூலக விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளும இடம்பெறவுள்ளன. (112)

## சிறுவர் மீதான கவனிப்பும் அவதானமும் இன்றைய காலத்தின் தேவையாகவுள்ளது

### யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்



(யாழ்ப்பாணம்)

எது தவறானது , எது சரியானது என்பது இளம்பராய சிறுவர்களுக்குத் தெரியவராது இவற்றை முதலில் பெற்றோரும் ஆசிரியர்களும் தெளிவான முறையில் அவர்களுக்குப் புகட்ட முன்வரவேண்டும் என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி . ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்,

வலி.மேற்கு சங்கானைப் பிரிவில் சர்வதேச சிறுவர் , முதியோர் , மாற்றுவலுவுடையோர தினம் அண்மையில் இப் பிர்தேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றபோது நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் ,சிறுவர்களின் வயதிற்கேற்றவாறு அவர்களுக்கு அறிவியல் , ஒழுக்கப் பண்புகள் உடல் ரீதியாக ஏற்படும் மாற்றங்கள், பிரச்சினைகளை அறிந்து அவர்களை நல்வழிப்படுத்த முனைய வேண்டும் .

கவனிப்பும் அவதானமும் சிறுவர்களுக்கு இன்றியமையாதது இவற்றைப் பெற்றோரும் ஆசிரியர்களும் ஆசானாகச் செயற்படுத்த வேண்டும் . பண்பு , பாசம், உணவுத்தேவை , கல்வித் தேவை என்பனவற்றை அவர்களுக்கு வழங்கவேண்டும் . முதலில் பெற்றோருக்கும் பின்பு ஆசிரியர்களுக்கும் சமூக மட்ட நிறுவனங்களுக்கும் இப் பொறுப்பு உண்டு என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.மேலும் முதியோரையும் மாற்றுவலுவுடையோரையும் கனம் பண்ணவேண்டும். கௌரவம் அளிக்க வேண்டும். இவர்களுக்கான உதவிகளை மனமுவந்து செய்து அவர்களின் நலன்களைப் பேண வேண்டும் என்றார் .

பிரதேச செயலர் அ . சோதிநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் , முதியோர்கள் ,பொதுமக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். நடனம், நாடகம்,முதியோர் கௌரவிப்பு போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## கசிப்பு விற்பனை! ஒருவர் கைது

கரவெட்டி துன்னாலைப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக கசிப்பு விற்பனை செய்த நபரை நெல்லியடி பொலிஸார் கையும் மெய்யுமாக கைது செய்துள்ளனர்.

குறித்த பகுதியில் நேற்று முன்தினம் கசிப்பு விற்பனையில் இந்த நபர் ஈடுபட்டு வந்த நிலையில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து பொலிஸார் தேடுதலை மேற்கொண்டு இவரை கைது செய்துள்ளனர்.

மேலும் இந்தப் பிரதேசத்தில் சட்டவிரோத செயற்பாடுகள் எவையேனும் இடம்பெற்றால் உடனடியாக பொலிஸாருக்கு இரகசியமாக அறிவிக்குமாறு நெல்லியடிப் பொலிஸார் பொதுமககளை கேட்டுக்கொள்கின்றனர். (18)

## வதிரி பூவற்கரை வீதி புனரமைப்பு எப்போது?

(கரணவாய்)

கரணவாய் வதிரி சமூக ஜோதி.ஏ.எம்.செல்லத்துரை வீதியிலிருந்து பூவற்கரைவீதி வரையான 2 கிலோமீற்றர் வீதி நீண்டகாலமாக புனரமைக்கப் படாது மிகமோசமாக சேதமடைந்துள்ளது.

இதனூடாக பயணத்தை மேற்கொள்ளும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

40 வருடங்களாக திருத்தப்படாமல் உள்ள இந்த வீதி தற்போது குண்டும் குழியுமாக சேமடைந்துள்ளதுடன் போக்குவரத்துக்கு உதவாத வீதியாக இந்தவீதி காணப்படுகிறது.

குறிப்பாக இந்த வீதியால் பாடசாலை மாணவர்கள் அரச அலுவலர்கள் ஆலயத்துக்கு செல்வோர் எனப் பலர் தமது பயணத்தை மேற்கொள்கின்ற நிலையில் இந்த வீதி திருத்தப்படாமல் இருப்பது கவலையளிப்பதாக பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மழைகாலம் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த வீதியில் வெள்ள நீர் தேங்கி போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்துவதுடன் பாதசாரிகள் பயணிக்க முடியாத நிலையும் ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே மிகமோசமாக சேதமடைந்துள்ள இந்த வீதியை புனரமைக்க கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேச சபை தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை வயலூர் முருகன் தீருவில் சிவசுப்பிரமணிய தேவஸ்தான பொதுக் கூட்டமும் பரிபாலன சபைக்கான நிர்வாகத்தெரிவும் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பொதுச் சபை உறுப்பினர்கள், திருவிழா மற்றும் ஏனைய உற்சவ உபாயகாரர்கள், முருகன் பக்த அடியார்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஆலய பரிபாலன சபியினர் அறிவித்துள்ளனர். (109)

## பாலுணவு பொருட்களின் உற்பத்திக்கு புதிய கட்டடம்

(பூநகரி)

பூநகரி வாடியடி நகர்ப்பகுதியில் பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று பாலுணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காகவும் பால் சேகரிப்பிற்காகவும் புதிய கட்டடம் ஒன்று ஐ.ஓ.எம் நிறுவனத்தால் அமைக்கப்பட்டு நிறைவடைந்துள்ளது.

20 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடம் வெகு விரைவில் திறந்து வைக்கப்பட்டு உற்பத்தியும் விற்பனையும் நடைபெறவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (112)

## நூற்றாண்டு விழாவுக்கு ஆயத்த நடவடிக்கை

புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகாவித்தியாலயம் தனது நூற்றாண்டு விழாவினை வெகு விமர்சையாக எதிர்வரும் 2014 ஜனவரி மாதம் கொண்டாடுவதற்குத் தயாராகி வருகிறது.

இந்த நூற்றாண்டு விழாவினையொட்டி ஞாபகார்த்த மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. அத்துடன் பாடசாலையில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

மலர்க் குழுவானது பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினரிடமிருந்து தரமான ஆக்கங்களை எதிர்பார்க்கின்றது.

பாடசாலை தொடர்பான பழைய நிழற்படங்கள் இருப்பின் தந்துதவினால் பிரதியாக்கம் செய்த பின் திருப்பி ஒப்படைக்கப்படுமென்றும் மலராசிரியர் த.தவரூபன் தெரிவித்துள்ளார். (10)

## வெளிநோயாளர்களுக்கு சிகிச்சை நேரம் அறிவிப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சை நேரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரையான 5 நாட்களும் காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையிலும், சனிக்கிழமைகளில் காலை 7 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 7 மணி முதல் முற்பகல் 10 மணி வரையில் வெளி நோயாளரகளுக்கான சிகிச்சை இடம் பெறும் என யாழ்போதனா வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. (இ)

## மீன் விலையில் வீழ்ச்சி

யாழ்குடாநாட்டில் தற்போது மீன்களின் விலையில் வீழ்ச்சி யேற்பட்டுள்ளது.

தற்போது நவராத்திரி காலம் ஆரம்பமானதாலேயே இவ் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (இ)





கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வு அண்மையில் முன்பள்ளியில் இடம்பெற்ற போது திருமதி சுரேஸ்குமார் கலாரஜனி சிறுவனுக்கு பரிசில் வழங்குவதையும், முன்பள்ளி சிறார்களுடன் ஆசிரியர்கள் நிற்பதையும் காணலாம். (51)

நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்படாதே, இன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள உழை. - மூர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, th u@live.com
Online : www.thinamurasu.net

## முதலமைச்சரின் முற்போக்கு அறிக்கை!

நேற்றுக் காலை அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் வடமாகாண முதலமைச்சராக முன்னாள் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் பதவிப்பிரமாணம் செய்துகொண்டிருக்கிறார். தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள் சிலரும், வடமாகாண ஆளுநரும் அந்நிகழ்வில் கலந்துகொண்டிருக்கின்றனர்.

விக்கினேஸ்வரன் அவர்கள் வடமாகாண முதலமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டபின் ஊடகங்களுக்கு விசேட அறிக்கை ஒன்றினை விடுத்துள்ளார். அது தேர்தல் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரப்புரைகள் ஏற்படுத்தியிருந்த அச்சத்தைப் போக்குவதாகவும், தமிழ் மக்களுக்கும் ஒட்டுமொத்தமாக இந்த நாட்டுக்கும் இன்றைக்கு மிக அவசியமான அரசியல் அணுகுமுறை எதுவோ அதை வலியுறுத்தும் ஆரோக்கியமான வார்த்தைகளைக் கொண்டுள்ளதாகவும் அவரது அறிக்கை அமைந்திருக்கிறது.

முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தமது அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:

"இனங்களுக்கிடையே எழுந்துள்ள சந்தேகங்களை அகற்றுவது காலத்தின் தேவையாக அமைந்துள்ளது. அதன் ஒரு அலகாகவே நாட்டின் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்யத் தீர்மானித்தோம். எமது செயற்பாடு ஐக்கிய இலங்கைக்குள்ளேயே நாம் அரசியல் தீர்வொன்றை எதிர்பார்க்கின்றோம் என்ற எமது மனோநிலையை எடுத்து காட்டக்கூடியதாய் அமைந்துள்ளது. இங்கு வன்முறைக்கு இடமில்லை. வலோத்காரத்திற்கு இடமில்லை. புரிந்துணர்வு ஒன்றே எம்மை சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் நோக்கிச் செல்ல வழிவகுக்கும்..."

இந்த நேரத்தில் தேர்தல்கால பரப்புரைகளை நினைவுபடுத்திக் காட்டிக் கருத்துரைப்பது நாகரிகமல்ல. ஆனால் அப்போது நமக்குண்டான அச்சங்களைப் போக்கும் விதமாக முதலமைச்சரின் எதிர்காலச் செயற்பாடுகளை உணர்த்தவல்லது என நம்பக் கூடிய அவரது இந்த அறிக்கையைப் பாராட்டியே ஆகவேண்டும்.

தங்கள் பூகோள அரசியல் பொருளாதார பாதுகாப்பு நலன்களையே முதன்மைப்படுத்தி நமது பிரச்சினையில் மூக்கை நுழைக்கும் சர்வதேச அரசுகளை நம்பியிருப்பதோ அல்லது உள்நாட்டில் மீண்டுமொரு போருக்கான எச்சரிக்கைகளை விடுவதோ நமது மக்களை மீண்டும் ஆபத்திலும் அவலத்திலும் தள்ளிவிடும் செயலாகவே அமையும் என, ஆவேசங்களை விலக்கிச் சிந்திக்கும் அறிஞர்கள் தொடர்ந்து எச்சரித்தே வருகின்றனர்.

நாம் விரும்பியோ விரும்பாமலோ தவிர்க்க முடியாதவகையில், பெரும்பான்மையான சிங்கள சமூகத்தினர், அச் சமூகத்தின் முற்போக்குவாதிகள், முஸ்லிம் சமூகத்தினர், மற்றும் மலையகத் தமிழர்கள் ஆகியோரைப் பிரநிதித்துவப்படுத்துவோர் இலங்கை அரசில் அங்கம் வகிக்கின்றனர். எனவே, இலங்கை அரசாங்கத்துடன் எல்லாவற்றிற்கும் முரண்பட்டுக் கொண்டிராது, அரசின் நல்ல காரியங்களை ஏற்று இணக்க அரசியல் அணுகுமுறையை கடைப்பிடிப்பதன் மூலமே இந்த முட்டுச் சந்திலிருந்து வெளியே வர முடியும் என்பதையே அரசுசாரா சர்வதேச ராஜதந்திரிகளும் கூறுகின்றனர்.

மத்திய அரசுடன் தொடர்ந்து பேசி, மாகாண முறைமையைச் செயற்படுத்தி அதன் அதிகாரங்களை வலுப்படுத்துவதன் மூலமே நமது மக்களின் அரசியல் அபிலாசைகளைச் சென்றடைய முடியும் என்பதுதான் யதார்த்தம். அரசாங்கம், பெரும்பான்மை மக்களான சிங்கள மக்கள், இதர முஸ்லிம் சமூகம் ஆகியவற்றுடன் நல்லுறவை வளர்க்காமலும், இணக்கப்பாட்டை ஏற்படுத்தாமலும் இது சாத்தியமில்லை.

முதலமைச்சராகி தனது முதலாவது அறிக்கையில் விக்கினேஸ்வரன் அவர்கள் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளார். கிடைத்த மாகாண சபையை நமது மக்களுக்குப் பயன்தரும் விதத்தில் நடத்திக் காட்டுவதையே நாமும் இந்த நாடும் சர்வதேசமும் கூட எதிர்பார்க்கிறது.

– ஆசிரியர்

# முஸ்லிம் காங்கிரஸின் வெற்றியை குறைத்து மதிப்பிட முடியாது

### - அமைச்சர் ஹக்கீம் -

(கொழும்பு)

எமது கட்சியின் வெற்றியை யாரும் குறைத்து மதிப்பிடக் கூடாது. நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் உறுப்பினர்கள் எண்மரில், நால்வர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஊடாகவே வெற்றியடைந்துள்ளனர் என்று முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அலுவலகமொன்றை கொழும்பு, கொம்பனி தெரு, ஸ்டுவர்ட் வீதியில் கடந்த சனிக்கிழமை மாலையில் திறந்து வைத்து உரையாற்றிய போதே அமைச்சர் ஹக்கீம் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனிப் பெரும் இடத்தை வகிக்கின்றது. எத்தனையோ சவால்களுக்கு முகம் கொடுத்தவாறே எமது கட்சி தனது அந்தஸ்தை தக்க வைத்துக் கொண்டிருக்கின்றது.

அண்மையில் நடந்த மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸலிம் காங்கிரஸ் பின்னடை வைச் சந்தித்துள்ளதாக சிலர் ஊடகங்களில் எழுதி வருகின்றனர். காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அவர்கள் எமது கட்சியின் வெற்றியை குறைத்து மதிப்பிட முயற்சிக்கின்றனர். அதில் உண்மையில்லை..

இந்த மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம்கள் எட்டுப் பேர் தான் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஏனைய இருவர் தேசியப்பட்டியல் மூலமேநியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, மக்களால் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் மாகாண சபை உறுப்பினர்கள் எண்மரில் சரி அரைவாசியினரான நால்வர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எங்களைப் பொறுத்தவரை 2002 ஆம் ஆண்டு முக்கியமான வருடம். அப்போதைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு வழிகோலி, ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் அமர்த்துவதற்கு நாங்கள் காரணமாக இருந்தோம் என்றார்.

# ஐ.தே.க.வின் நலனுக்காகவே தலைமைப் பதவியில் உள்ளேன்

### - ரணில் -

கட்சியின் நலன் கருதியே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்து வருவதாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

எகலியகொட பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டத்தில் உரை யாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் பதவியில் ஏன் தொடர்கிறேன் என்று சிலர் குற்றம் சுமத்தி வருகின்றனர். கட்சியின் நலனுக்காகவே நான் தலைவராக இருந்து வருகிறேன். வேறு எவராவது கட்சியின் தலைவர் பதவியில் இருந்திருந்தால் அவர் மீது சுமத்தப்படும் இப்படியான அவதூறு குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியில் கட்சியை கைவிட்டு சென்றிருப்பார்.

ஐக்கிய தேசியக் கட்சியை கைவிட்டு நான் சென்று விட்டால் இந்தக் கட்சியை பொறுப்பேற்க எவருமில்லை. எனது நலனுக்காக நான் கட்சியின் தலைவராக இருக்கவில்லை. கட்சியின் நலனுக்காகவே தலைவர் பதவியில் இருக்கின்றேன். என்னை கட்சியின் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று கூறுபவர்களை வழிநடத்தும் அரசாங்கத்தின் சூழ்ச்சி இருக்கின்றது. இதற்கு சில ஊடகங்கள் உறுதுணையாக இருப்பது கவலையை ஏற்படுத்துகிறது.

நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து புதிய பயணத்தை மேற்கொண்டு புதிய முறையின் வழியாக கட்சியை வெற்றியை நோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். சிலர் என்னை விமர்சிக்கின்றனர். சிலர் என்னை சிறந்தவர் என்கின்றனர். என்மீது குற்றம் சுமத்துபவர்கள் எனது அலுவலக அறைக்கு வந்து குற்றச்சாட்டு என்ன என்பதை கூற முடியும்.

நான் வெளிப்படையாவன். பிரச்சினைகள் இருந்தால் பேசி தீர்த்து கொள்ள முடியும். ஹெர்மன் குணரட்ன தொடர்பில் நான் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தேன். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் அவர் சம்பந்தப்படுவார் என நான் நினைத்திருக்கவில்லை. எமது மாகாண சபை உறுப்பினரான கிறிஸ்சாந்த புஷ்பகுமாரவுக்கு துப்பாக்கி சூட்டுக் காயம் ஏற்பட்டுள்ளது.

அவரை சென்று பார்த்த போது அவர் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் நோக்கும் பொழுது அரசாங்கத்தின் ஆலோசகர் ஒருவரும் இதில் சம்பந்தப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து எமது குறைகளை நிவர்த்தி செய்து கொள்வோம். அடுத்த சில தினங்களில் நான் எடுக்கப்போகும் நடவடிக்கைகளை பற்றி அறிவிப்பேன் என்றார்.

# பேரணி மீது தாக்குதல்; விசேட விசாரணை ஆரம்பம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து ரணில் விக்ரமசிங்க, விலக வேண்டும் என வலியுறுத்தி தெவிநுவரவிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட எதிர்ப்புப் பேரணி மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பொறுப் பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தலை மையில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் இடம்பெற்றபோது பொலிஸார் தமது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றத் தவறியதாக சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்களின் உண்மைத் தன்மையை கண்டறிவதே இதன் நோக்கம் என பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய குறித்த சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் தலைமையிலான விசேட பொலிஸ் குழு மாத்தறைக்குச் சென்று ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். தெவிநுவரவிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட எதிர்ப்பு பேரணியின் மீதுதாக்குதல் நடத்துவதற்காக மாத்தறை மாநகர சபைக்கு அருகில் சிலர் கூடியிருப்பதாக தகவல் கிடைத்திருந்தும் பொலிஸார் அதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என எதிர்ப்பு' பேரணி ஏற்பாட்டாளர்களான சட்டத்தரணி மைத்திரி குணரத்ன மற்றும் சட்டத்தரணி ரால் லக்திலக்க ஆகியோர் குற்றம் சுமத்தியிருந்தனர்.

# பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் 'சைப்பிரஸ்' கலந்துகொள்ளும்


பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதாக சைப்பிரஸ் உறுதியளித்துள்ளது.


கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாடடில் கலந்து கொள்ள எதிர பார்த்திருப்பதாக சைப்பிரஸ் ஜனாதிபதி நிகோஸ் அனாஸ்டேசியாடேஸ் தெரிவித்துள்ளார். இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீஎல். பீரிஸ், சைப்பிரஸ் ஜனாதிபதியை அரவது மாளிகையில் சந்தித்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கான அழைப்பை விடுத்தார்.

அமைச்சர் பீரிஸை வரவேற்ற சைப்பிரஸ் ஜனாதிபதி, அமைச் சரின் வருகையானது இலங்கைக் கும் சைப்பிரசுக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள ஏற்படுத்தப்பட்டு 50 வருடம் பூர்த்தியாகும் நிலையில் முக்கியத்துவம் வாய்ந்தது என தெரிவித்துள்ளார். இலங்கையில் 1976 ஆம் ஆண்டு நடைபெற்ற அணிசேரா நாடுகளின் மாநாட்டில் சைப்பிரசின் முதலாவது ஜனாதிபதியான பேராயர் மக்காரியோஸ் கலந்து கொண்டதை இதன் போது அமைச்சர் பீரிஸ் நினைவுகூர்ந்தார்.

இலங்கையின் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சர் பீரிஸ், சைப்பிரஸ் ஜனாதிபதிக்கு விளக்கியுள்ளார். அதேவேளை இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கும் சைப்பிரஸ் வெளிவிவகார அமைச்சர் லோனிஸ் கோஸ்சசோலி டேஸ இடையில் இடம்பெற்ற இருதரப்புப் பேச்சுவார்த்தைகளின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்தும் உடனடியான பொறிமுறை கட்டமைப்பொன்றை ஏற்படுத்த சைப்பிரஸ் வெளிவிவகார அமைச்சர் இணக்கம் வெளியிட்டுள்ளார்.

இதனைத் தவிர இரட்டை வரிவிதிப்பு மற்றும் விமான சேவைகள் தொடர்பான உடன்படிக்கைகளை மேற்கொள்ளவும் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# குடும்பத்திலிருந்து வெளியேறிய வொயேஜர்!

**வொயேஜர் 600 கோடி கிலோ மீற்றர் தூரம் போன பிறகு சூரியக் குடும்பம் முழுவதையும் ஒரு குரூப் ஃபோட்டோ எடுத்தது. புகழ் பெற்ற இந்தப் படத்தில் பூமி எங்கே என்று தேடினால், ஒரு பழுப்புத் தீற்றலின் நடுவே வெளிர் நீலத்தில் ஒரே ஒரு புள்ளிதான் பூமி! அவ்வளவுதான் நாம். இதற்குள்ளா இவ்வளவு ஆட்டம் போடுகிறோம்?**

ராமன் ராஜா

ஒரு வருஷத்துப் பழசான செய்தி ஒன்றுதான் இன்றைக்கு விஞ்ஞான உலகத்தில் சுடச் சுட நியூஸ்!

சென்ற ஆகஸ்ட் மாதத்தின் கடைசி வாரத்தில் வொயேஜர் என்ற நாசா விண்கலம் சூரிய மண்டலத்தை விட்டு வெளியேறிவிட்டது. மனிதன் செய்த பொருள் ஒன்று சூரியக் குடும்பத்துக்கு வெளியே காலடி எடுத்து வைப்பது இதுவே முதல் முறை.

போன வருடம் நடந்த விஷயத்தை ஏன் இப்போது மெல்லச் சொல்லுகிறார்கள்? காரணம், இப்போதுதான் தரவு கிடைத்திருக்கிறது!

1977இல் ஏவிவிடப்பட்ட விண்கலம் வொயேஜர். மரைனர் விண்கல வரிசையில் 11-வதாக வந்திருக்க வேண்டியவர் வொயேஜர். ஆனால் வருடக் கடைசியில் அரசாங்கங்களுக்கே உரிய பட்ஜெட் வெட்டு விழுந்துவிட்டது. மரைனர் திட்டத்தை மாற்றி வொயேஜர்-1 என்று பெயர் வைத்து, "குறைந்த செலவில் வியாழனைப் படம் பிடித்து அனுப்பு" என்று ஏவிவிட்டார்கள்.

உண்மையில் இரண்டு வொயேஜர்கள் புறப்பட்டன. வொயேஜர்-2 என்ற தங்கச்சி விண்கலம் வேறொரு திசையில் போய்க்கொண்டு இருக்கிறது. சற்று தாமதமாகக் கிளம்பினாலும் வொயேஜர்-1 சுறுசுறுப்பாக ஓடி முந்திவிட்டது. 79இல் வியாழனையும் அதற்கு அடுத்த வருடம் சனியையும் விஸ்தாரமாகப் படம் பிடித்து அனுப்பியது. இந்த இரண்டு கிரகங்களையும் அவற்றின் துணைக் கோள்களையும் முதல் முறையாக இத்தனை கிட்டத்தில் பார்க்கக் கிடைத்தது.

வொயேஜர் புறப்பட்ட வேளை, ஆச்சரியமான வேளை. குரு, சனி, யுரேனஸ், நெப்டியூன் எல்லாம் சரியாக அதனதன் இடத்தில் வந்து நிற்கப் போகும் அரிதான கடக லக்னம், அமிர்த யோகம். ஒரு கிரகத்தின் அருகில் போய் போட்டோ எடுத்து முடித்த பிறகு, அதன் புவி ஈர்ப்பு விசையே வொயேஜரை இழுத்துக் கவண் கல் போல் சுழற்றி அடுத்த கிரகத்தை நோக்கி உந்தித் தள்ளிவிடும். 175 வருடங்களுக்கு ஒரு முறைதான் இந்த மாதிரி கிரகச் சேர்க்கை அமையும்.

வொயேஜர் அதிக பட்சம் ஐந்து வருடம் உயிரோடு இருக்கும் என்று எதிர்பார்த்துத்தான் அனுப்பினார்கள். ஆனால் விஞ்ஞானி கார்ல் சேகன் "இது ஒரு வேளை செத்த சவமாக மிதந்து வெகு தூரம் போனாலும் போகுமே.." என்று அப்போதே யோசித்தார். முடிவில்லாத விண்வெளியில் வொயேஜர் ஒரு காலக் குமிழி. நமக்குப் பிறகும் பல காலம் இருக்கப் போகிறது. என்றாவது, எங்காவது தலையில் அன்ரெனா வைத்த புத்திசாலி இனம் ஒன்றின் ்கயில் கிடைக்கலாம் அல்லது நம் எதிர்கால சந்ததிகளே கண்டெடுக்கலாம். அவர்களுக்காகத் தங்கத்தில் செய்த கிராம.்.போன் தகட்டில் பாட்டு, பேச்சு, படம் போன்றவைகளைப் பதிவு செய்து அனுப்பி இருக்கிறார்கள்.

நாம் அறிந்த மனித இனம் படைத்த பொருள்களில் இப்போதைக்கு வொயேஜர் மட்டும்தான், வேறொரு அறிவாளி இனத்தின் கையில் கிடைக்க வாய்ப்பாவது இருக்கும் முதல் பொருள். நாம் நமக்கே குழி தோண்டிக் கொள்ளும் வேகத்தைப் பார்த்தால், வொயேஜர்தான் அத்தகைய ஒரே பொருளாக இருந்தாலும் ஆச்சரியமில்லை.

70-களில் என்ன தொழில்நுட்பம் இருந்திருக்கப் போகிறது? அதன் கம்ப்யூட்டரில் இருக்கும் நினைவகம் வெறும் 68 கிலோ பைட்! இந்த அற்ப கம்ப்யூட்டரை வைத்துக்கொண்டே வொயேஜர் சூரிய மண்டலத்தின் கருப்பையைத் துளைத்துக்கொண்டு வெளியேறி இருக்கிறது.

ஹீலியோ ஸ்பியர் என்பது சூரியனை ஆதாரமாகக் கொண்ட ஒரு மகா சப்பை உருண்டை. இதற்குள்தான் எல்லாக் கோள்களும் நாமும் வசிக்கிறோம். இந்தப் பந்துக்கு வெளி-யே சூரியனின் ராஜ்ஜியம் செல்லாது. அதன் கதிர் வீச்சு வலுவிழந்து காந்தப் புலம் திசை திரும்புவதாகக் கருதப்படுகிறது. அதுதான் நம் பிரதேச எல்லை.

இந்த எல்லைக்கு வெளியே என்னதான் இருக்கிறது? வெறும் சூனியமா? இல்லை. ப்ளாஸ்மா என்ற மின்சாரத் துகள் மேகம் இருக்கிறது; எப்போதோ வெடித்துச் சிதறிய நட்சத்திர மத்தாப்பிலிருந்து சிந்திய பொறிகள் அவை. காந்தப் புலமும் உண்டு. இந்த ப்ளாஸ்மாவை அளந்து பார்த்தால் வொயேஜர் இருப்பது சூரிய மண்டலத்துக்கு உள்ளேயா வெளியேயா என்பது தெரிந்துவிடும். வொயேஜரிடமும் ப்ளாஸ்மாவை அளவிடும் கருவி உண்டு. ஆனால், அது பல வருடம் முன்பே வேலை செய்வதை நிறுத்திவிட்டது.

இந்த இடத்தில் எதிர்பாராமல் சூரிய பகவான் உதவிக்கு வந்தார். 2012 மார்ச் மாதத்தில் சூரியனின் வெளிப் புறத்திலிருந்து ஒரு மாபெரும் கொரோனா பிழம்பு கிளம்பி உலகங்களைத் தாண்டி வெகுதூரம் வீசியது. இந்த ஆண்டின் வசந்த காலத்தில் வொயேஜர் வரை சென்று சேர்ந்துவிட்டது. மின் காந்த சக்தியும் எலெக்ட்ரோனும் ப்ரோட்டானுமாக சுனாமி மாதிரி அடித்து வொயேஜரைப் போர்த்தி மூடியபோது, அதைச் சுற்றி இருந்த ப்ளாஸ்மாவில் சலசலப்பு ஏற்பட்டது. இதைக் கப்பென்று பிடித்து அளந்து வைத்துக்கொண்டது வொயேஜர்.

அடுத்த பல மாதங்களுக்கு சுறுசுறுப்பாக வேலை செய்து வொயேஜரின் தகவல் வெள்ளத்தை அலசினார்கள். கடைசியாக, வொயேஜர் சூரியக் குடும்பத்துக்கு வெளியே போய்விட்டது என்பதை உறுதி செய்தது நாசா.

"வொயேஜர் போயிருக்கிற இடம், நமக்கு முற்றிலும் புதிய பேட்டை. அங்கே என்னவெல்லாம் ஆச்சரியம் காத்திருக்கிறதோ" என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

கவனிக்கவும் - வொயேஜர் ஒன்றும் ஊர்ந்து செல்லும் பேருந்து அல்ல. நாள் ஒன்றுக்குப் பதினாறு இலட்சம் கிலோ மீற்றரை விழுங்கி முன்னேறும் விஷ்ஷ......! இப்போது நம்மிடம் இருந்து 1900 கோடி கிலோ மீற்றர் போய்விட்டது. அங்கிருந்து ரேடியோவில் பேசினால் வந்து சேருவதற்கு 17 மணி நேரம் ஆகிறது. வொயேஜர் ரகத் தொலைவுகளில், தகவல் தொடர்பில் ஒரு மிகப் பெரிய சிக்கல் இருக்கிறது: இன்வேர்ஸ் ஸ்குயர் விதி என்பார்கள். தூரம் இரண்டு மடங்காக அதிகரித்தால், வந்து சேரும் ரேடியோ அலையின் சக்தி, நாலில் ஒரு பங்காகக் குறைந்துவிடும். பத்து மடங்கு தொலைவு போகும்போது 99 சதவிகிதம் காணாமல் போய், மிச்சம் இருப்பதை சுரண்டித்தான் தின்ன வேண்டும்.

வொயேஜரில் இனி செலுத்தும் சக்தியை அதிகரிக்க முடியாது. அதுவே பாவம், இப்பவோ அப்பவோ என்று இருக்கிறது. பூமியில்தான் ஏதாவது தொழில்நுட்ப வித்தை காட்ட வேண்டும். ஆரம்பத்தில் கொஞ்ச காலத்துக்கு டிஷ் அன்ரெனாவை இன்னும் இன்னும் பெரிதாக்கி சமாளித்தார்கள். இப்போது அதெல்லாம் போதாமல் போய், ஊர் ஊராக இருக்கும் ரேடியோ டெலஸ்கோப்புகளை வொயேஜரின் பக்கம் திருப்பியிருக்கிறார்கள்.

வொயேஜர் 600 கோடி கிலோ மீற்றர் தூரம் போன பிறகு சூரியக் குடும்பம் முழுவதையும் ஒரு குரூப் .்.போட்டோ எடுத்தது. புகழ் பெற்ற இந்தப் படத்தில் பூமி எங்கே என்று தேடினால், ஒரு பழுப்புத் தீற்றலின் நடுவே வெளிர் நீலத்தில் ஒரே ஒரு புள்ளிதான் பூமி! அவ்வளவுதான் நாம். இதற்குள்ளா இவ்வளவு ஆட்டம் போடுகிறோம்?


36 வயசுப் பெண்ணாக இருந்தாலும் ஒரு கொஸ்மிக் அளவுகோலில் பார்த்தால் வொயேஜர் ஒரு டீன் ஏஜர்தான். அதன் ஒன்றுவிட்ட சகோத-ரிகளான பயனியர் விண்கலங்களும் ஏறக்குறைய இதே சமயத்தில்தான் புறப்பட்டன. ஆனால் அவை பற்றரி தீர்ந்து போய் எப்போதோ மண்டையைப் போட்டாயிற்று. வொயேஜரின் இளமை ரகசியம் அதன் ப்ளூட்டோனிய அணு சக்தி!

ப்ளூட்டோனியம் தனக்குத் தானே சிதைவடையும்போது ஏற்படும் வெப்பத்தை மின்சாரமாக மாற்றுகிறார்கள். அதிகம் இல்லை; ஒரு சின்ன வக்குவம் க்ளீனரை இயக்கும் அளவுக்குத்தான் சக்தி வைத்திருந்தார்கள். ப்ளூட்டோனியம் பழசாக ஆக அதன் வீரியமும் குறைந்துகொண்டே வரும். இப்போது பாதிதான் மீதி இருக்கிறது. இனி முக்கியமானவற்றை மட்டும் வைத்துக்கொண்டு மற்ற கருவி-களை ஒவ்வொன்றாக அணைக்க வேண்டியிருக்கும். 2025ஆம் வருடம் வரை வொயேஜர், எந்திரன் ரஜினி மாதிரி தன் கை கால்களை எல்லாம் மெல்லக் கழற்றிக் கொண்டே வந்து, கடைசியில் ஒரு நாள் பட்டென்று சாய்ந்துவிடும். அதன் பிறகு விண்வெளியில் மௌன ஓடமாக மிதந்துகொண்டே இருக்கும்.

இன்னும் நாற்பதாயிரம் வருடத்துக்குப் பிறகு "ஒட்டகச் சிவிங்கி" என்ற நட்சத்திரக் கூட்டத்துக்குக்கிட்டத்தில் போகும்போது அதில் உள்ள AC +79 3888 என்ற சூரியனை அணுகும். (ஒரே குடும்பத்தில் ஏகப்பட்ட சூரியன்கள் இருந்தால், இப்படி கார் நம்பர் ப்ளேட் மாதிரிதான் பெயர் வைக்க முடியும்).

# அபிவிருத்தியை வலுப்படுத்த தொடர்ந்தும் உதவுவோம்

## பசிலிடம் ஜப்பான் உறதி



இலங்கையில் பொருளாதார ரீதியிலான அபிவிருத்தியை வலுப்படுத்த ஜப்பான் அரசு வழங்கி வரும் உதவியை தொடர்ந்தும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜப்பான் அறிவித்துள்ளது. ஜப்பானிய அரசின் அழைப்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச கடந்த மாதம் ஜப்பானுக்கு விஜயம் செய்திருந்தார். அதன்படி கடந்த மாதம் 25ஆம் திகதி முதல் இம்மாதம் 2ஆம் திகதி வரை தங்கிருந்த அவர் ஜப்பானிய அரசின் உயர் மட்ட அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கடந்த மார்ச் மாதம் ஜப்பானுக்கு விஜயம் செய்திருந்ததுடன் டோக்கியோவில் வைத்து அவர் விடுத்த அழைப்புக்கு அமைய அந்த நாட்டின் உயர் மட்ட பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர். அவர்களின் விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தியுள்ளதாக அமைச்சர் பசில் ராஜபக்ச இந்த பேச்சுவார்த்தைகளின் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் பொருளாதார அபிவிருத்திக்கு மட்டுமல்லாது மின்சாரம், மீன்பிடித் தொழில், வீதி நிர்மாணப் பணிகள் உட்பட ஏனைய அபிவிருத்தி பணிகளுக்கு ஜப்பான் வழங்கி வரும் உதவிகள் தொடர்பிலும் பசில் ராஜபக்ச ஜப்பானிய அதிகாரிகளிடம் நன்றி தெரிவித்துள்ளார் பசில் பிரதி பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், அமைச்சரவையின் பிரதம செயலாளர் உட்பட முக்கியஸ்தர்களை சந்தித்துள்ளதுடன் இலங்கையின் நினைவு பரிசுகளையும் வழங்கியுள்ளார்.

# நுளம்புப்பெருக்கத்தை கட்டுப்படுத்தும் தேசிய டெங்கு ஒழிப்பு வாரம்



டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில், நேற்று முதல் 'தேசிய டெங்கு ஒழிப்பு வாரம்' முன்னெடுக்கப்படுகின்றது.

ஜனாதிபதி டெங்கு ஒழிப்பு செயலணியினால் இந்த வருடத்தில் முன்னெடுக்கப்படும் இரண்டாவது டெங்கு ஒழிப்பு வாரம் இது வாகும்.

கல்வி, உள்ளூராட்சி மன்றம் மற்றும் மாகாண சபைகள், சுற்றாடல், சுகாதாரம், இளைஞர் விவகாரம், பாதுகாப்பு, பொது நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு அமைச்சுக்கள் இணைந்து இதனை முன்னெடுப்பதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்படுகின்ற போதிலும், பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பமாகவுள்ளதால், டெங்கு நுளம்புக் குடம்பிகளின் பெருக்கம் அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

வீடுகளில் இருந்து யோகட் கோப்பைகள், பிலாஸ்டிக் பொருட்கள், உணவுப் பொருட்களை அடைக்கும் பெட்டிகள், பால் பைக்கற்றுக்கள் என்பன வீசப்படும் இடங்களிலேயே 85 வீதமான டெங்கு நுளம்புகள் பெருகுகின்றமை தெரியவந்துள்ளது.

இதேவேளை நாட்டின் டெங்கு நோயாளர்களுக்கான சிகிச்சை சேவைகளை மேம்படுத்துவதன் மூலம் டெங்கு மரணங்களை 0.3 வீதம் வரையும், 2016 ஆம் ஆண்டு 0.1 வீதம் வரையும் குறைப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# மட்டக்களப்பில் பட்டதாரிகளுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

பட்டதாரி பயிலுனர்களுக்கு நிரந்தர நியமனம் விரைவில் வழங்கப்படவுள்ளது. நியமனக் கடிதங்களை தமிழில் தயாரிப்பதிலேயே காலதாமதம் ஏற்பட்டு வருகின்றது என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் அதிகாரிகளுக்கு அவர்களது நியமனக் கடிதங்களை தமிழில் வழங்க வேண்டும் என்பது நியதி. அதனால், அவர்களது நியமனக் கடிதங்களை தமிழில் தயாரிக்க வேண்டிய கடப்பாடு அமைச்சுக்கு உள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகள் தமது நிரந்தர நியமனம் குறித்து மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ். எம்.சாள்ஸை அவரது வாசஸ்தலத்தில் கடந்த சனிக்கிழமை சந்தித்து கலந்துரையாடியபோதே அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

அமைச்சில் போதிய தமிழ்மொழி மூல அதிகாரிகள் இல்லாததினால் நியமனக் கடிதங்களை தமிழில் தயாரிப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. அங்கு நியமனக் கடிதங்களை தமிழில் தயாரிப்பதற்கு துரிதமாக வேவைகள் இடம்பெறுகின்றன.

நியமனக் கடிதங்கள் தயாரிக்கப்பட்டதும் விரைவில் மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரி பயிலுனர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றார்.



இச்சந்திப்பில், மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகள் சங்கத் தலைவர் வை.பிரதீபன், பொருளாளர் எம்.கமலநாதன், உப செயலாளர் எல்.தீபாகரன் மற்றும் மாவட்டத்தின் பதின் நான்குபிரதேச செயலகங்களிலும் கடமையாற்றும் பட்டதாரி பயிலுனர்கள் சார்பாக தலா இரண்டு பேர் வீதம் கலந்துகொண்டனர்.

இதேவேளை, தங்களது கோரிக்கைகள் அடங் கிய மகஜர் ஒன்றையும் இதன்போது அவர்கள் அரச அதிபரிடம் கையளித்துள்ளனர்.

நிரந்தர நியமனம் கோரல் என்ற தலைப்பிலான இவ் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 2500 பேர் பட்டதாரி பயிலுனர்களாக இணைக்கப்பட்டுள்ளனர். ஆறு மாதத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று கூறப்பட்டது. பின்னர் ஒரு வருடம் எனக் கூறப்பட்டது. தற்போது ஒரு வருடமும் மூன்று மாதத்தையும் தாண்டியுள்ள நிலையில் நிரந்தர நியமனம் வழங்குவதற்காக கூறி பட்டதாரி பயிலுனர்கள் பலர் அமைச்சு, திணைக்களங்களில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஆனால் சிலர் இதுவரை அமைச்சுக்களுக்குள்ளோ திணைக்களங்களுக்குள்ளோ உள்வாங்கப்படாமல் உள்ளனர். இவர்கள் குறித்துக் கவனம் செலுத்த வேண்டும். அதேவேளை எமது நிரந்தர நியமனத்தினை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறித்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

# புத்தகயாவிற்கு யாத்திரை செல்ல அஞ்சத் தேவையில்லை

## அஸ்கிரிய பீட மகாநாயக்கர்

இந்தியாவின் புத்தகயா உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்களுக்கான யாத்திரையை மேற்கொள்வது தொடர்பில் அநாவசிய அச்சம் கொள்ளத் தேவையில்லை என அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் உடுகம சிறி புத்தரக்கித்த தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த வழிபாட்டுத் தலங்களுக்கு போதுமானளவு பாதுகாப்பு வழங்கப்பட்டதன் மூலம் இலங்கை பக்தர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசாங்கமும், பீகார் மாநில அரசும் புத்தகயா உள்ளிட்ட வழிபாட்டுத்தலங்களுக்கு பூரண பாதுகாப்பை வழங்கியுள்ளது.

புத்தகயாவில் அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து அநேகமானவர்கள் அங்கு யாத்திரை மேற்கொள்வது தொடர்பில் அச்சம் கொண்டுள்ளனர்.

எனினும் தற்போதைய சூழலில் அதுகுறித்து அநாவசியமாக அச்சம் கொள்ளத் தேவையில்லை என மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் புத்தகயா உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பில் ஆராய்வதற்காக ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டிருந்த மகாநாயக்கத் தேரர் நாடு திரும்பியதன் பின்னர் இந்த கருத்துக்களை வெளியிட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# இடர்முகாமைத்துவ அதிகாரிக்கு விருது




வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கியின் தலைமை இடர் முகாமைத்துவ அதிகாரி சனத் மானதுங்க இந்த ஆண்டின் 'மிகச் சிறந்த பிரதம தகவல் பாதுகாப்பு அதிகாரி' என்ற விருதை வென்றுள்ளார். அமெரிக்காவின் அட்லான்டாவில் இடம்பெற்ற Global CISO மன்றத்தின் வர்த்தக ஆலோசகர்களின் சர்வதேச சபையே அவருக்கு இந்த விருதை வழங்கியுள்ளது.

உலகம் முழுவதும் உள்ள தகவல் பாதுகாப்பின் உண்மையான தூர நோக்காளர்களை Global CISO விருது வருடாந்தம் கௌரவித்து வருகின்றது. தகவல் பாதுகாப்புப் பிரிவில் ஒரு தனிநபரின் அளப்பரிய சேவை, தொழில்சார் வளர்ச்சி, மற்றும் சாதனைகள் என்பனவற்றுக்கான அங்கீகாரமாக இந்த விருது வழங்கப்படுகின்றது. அத்தோடு பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகளில் மிக உறுதியான ஆக்கபூர்வமான கண்டுபிடிப்புக்களையும் இது ஊக்குவிக்கின்றது.

கொமர்ஷல் வங்கியில் வங்கித்துறையில் 24 வருட அனுபவத்தைக் கொண்டுள்ள சனத் மானதுங்க இவ்வாண்டின் CISO ஆக தெரிவு செய்யப்பட்டார். உலகம் முழுவதும் உள்ள பல்வேறு வர்த்தக துறைசார்ந்த தகவல் பாதுகாப்பு தொழில்சார் நிபுணர்கள் மத்தியிலிருந்தே இந்தத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

2012ஆம் ஆண்டு கொமர்ஷல் வங்கி சுதந்திரமான தகவல் தொழில்நுட்ப இடர் முகாமைத்துவ செயற்பாடுகளை அர்ப்பணத்தோடு அறிமுகம் செய்துள்ளது.

இதற்காக வங்கி மேற்கொண்ட முன்னோடி நடவடிக்கைகளுக்கான ஒரு . அங்கீகாரமாகவே இந்த உலகளாவிய விருது வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் குறிப்பிடத்தக்க CISO பங்களிப்பு இல்லாத நிலையில் இத்தகைய முன் முயற்சிகளை மேற்கொண்ட முதலாவது உள்ளூர் வங்கியாக கொமர்ஷல் வங்கி திகழுகின்றது. என்பது குறிப்பிடத்தக்கது.

# கரைவலையில் சிக்கிய 35ஆயிரம் கிலோ பாரை மீன்கள்



மட்டக்களப்பு ஏறாவூர் சவுக்கடி கடல் பிரதேசத்தில் கரைவலை மீன்பிடியின் போது பெருமளவு பாரை மீன்கள் பிடிபட்டுள்ளன.

நேற்று முன்தினம் காலை கரைவலைத் தொழிலில் ஈடுபட்டிருந்த போது சுமார் 35,000 கிலோ கிராம் பாரை மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.இதனை பார்வையிட அப்பகுதி மக்கள் கூட்டம் கூட்டமாக கடற்கரையில் கூடி நின்றனர்.இவற்றின் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

# வீடமைப்பு அதிகார சபையால் இலகு வீட்டுக்கடன் வசதி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 71 அரச ஊழியர்களுக்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் இலகு வீட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி விவேகானந்தநகர் பகுதியில் அமைந்துள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை இந்தக் கடன் வழங்கப் பட்டுள்ளது .

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் "ஜன செவன உபகார '' எமது எதிர்காலம் என்ற திட்டத்தின் கீழ் இந்த இலகு கடன் வழங்கப் பட்டதுடன் , குறித்த வீடமைப்புக் கடனுக்கான காசோலையினை நாடாளுமன்ற உறுப்பினரும் , நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான முருகேசு சந்திரகுமார் வழங்கி வைத்தார் . கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 156 பயனாளிகளில் , கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 38 பேரும் , கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 10 பேரும் , பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 11 பேரும் , பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 12 பேருமாக மொத்தம் 71 அரச ஊழியர்கள் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான வீட்டுத்திட்டத்திற்கான கடன்கள் வழங்கப் பட்டன .

இதற்காக 156 பேருக்கு மொத்தம் 46,800 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் , 71 அரச பயனாளிகளுக்கு 5,130 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. . ஒரு பயனாளிக்கு 5 இலட்சம் ரூபா வீதம் கடன் வழங்கப்பட்டு , 5 தொடக்கம் 10 வருடங்கள் தவணை அடிப்படையில் 13 வீத வட்டியில் இந்த வீட்டுக் கடன் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படுகிறது .

ஏனைய அரச ஊழியர்களுக்கான வீடமைப்புக் கடன்கள் அடுத்த கட்டங்களில் வழங்கப் படும் என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் இப்ராஹிம் தெரிவித்தார் .

# பற்றைக் காணிகளின் துப்புரவு ஒரு மாத காலம் அவகாசம்


(சாவகச்சேரி)

பற்றைக் காணிகளை ஒரு மாத காலத்திற்குள் துப்புரவு செய்யக் காணி உரிமையாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என சாவகச்சேரி நகர சபையின் சுகாதாரக்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பற்றைக்காணிகளை இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் அதன் உரிமையாளர்கள் துப்புரவு செய்ய வேண்டும்.

அவ்வாறு துப்புரவு செய்யாத காணிகளை நகரசபை பொறுப்பேற்றுத்துப்புரவு செய்யும். அக்காணிகளுக்கான பொறுப்பினை நகரசபையே கொணடிருக்கும். மீளவும் அக்காணிகளை உரிமையாளர்கள் பெறுவதாயின் நகர சபைக்கு ஏற்பட்ட செலவினை காணி உரிமையாளர்கள் செலுத்த வேண்டும் எனத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது.

மழைகாலம் ஆரம்பமாகவுள்ளமையால் நுளம்புப் பெருக்கம் அதிகமாகக் காணப்படும். இதனைக் கருத்தில் கொண்டே நுளம்புப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் முகமாகவும் இந்நடைமுறை கொண்டுவரப்படுவதாக சுகாதாரக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (இ)



தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் நவமகாஜனன் சிறீ தெ.து ஜயரத்தினத்தின் நூறாவது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் கல்லூரியில் இடம்பெற்ற மருத்துவமுகாமில் மக்கள் பயன்பெறுவதைக் காணலாம்.

# அரியாலைப் பகுதியில் டெங்கு ஒழிப்பு செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில் யாழ் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு அரியாலை வலயத்திலுள்ள புங்கன குளம் கிளினிக் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

இச்செயற்பாடு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சி.பி கிசோகுமார் தலைமையில் நடைபெறவுள்ளதுடன் இச்செயற்பாட்டில் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், யாழ் .மாநகர சுகாதார பகுதி வெளிக்கள உத்தியோகத்தர்கள் தொண்டர்கள் ஆகியோர் இணைந்து செயற்படவுள்ளனர்.

இதற்கு பொதுமக்கள் பொது அமைப்புக்கள் அரச அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டர் அமைப்புக்கள், கிராம மட்ட குழுக்கள் ஆகியோர் ஒத்துழைப்பை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# சதுர்த்திவிழா

(சாவகச்சேரி)

நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி விநாயகர் ஆலயத்தில் புரட்டாதி மாத சதுர்த்தி விழா இன்று இடம் பெறுகின்றது.

இன்று மு.ப 11 மணிக்கு ஸ்நவ கும்பபூசை இடம்பெற்று திரவிய அபிஷேகம் இடம்பெறும் தொடர்ந்து வசந்த மண்டப பூசை இடம்பெற்று விநாயகர் வீதி உலா வருவார் அத்துடன் மகேஸ்வர பூசை இடம்பெற்று அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. (இ)

# புலமைப்பரிசில் பெறுபேறு

(கரவெட்டி)

அண்மையில் வெளியான தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் யா/வதிரி திரு இருதயக் கல்லூரியில் சித்தி பெற்ற மாணவர்களின் பெயர் விவரங்கள் பின் வருமாறு,

புஸ்பாகரன் மகிர்தன் -188 (கரவெட்டிக் கோட்டத்தில் முதல் இடம்)அகிலன் அபிசாயினி-166,யோகராசா யெறோசினி-166, சுரேசரத்தினம் டொறின்-162, பிரகலாதன் மாதுளன்-162,வேலானந்தன் ஜெயினிகாந்-162. (85)

# பேசும் கொம்புகள் இசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறையும் ஜேர்மன் கலாசார மையமும் இணைந்து நடத்தும் பேசும் கொம்புகள் இசை நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் ஜேர்மன் கொம்பு வாத்தியங்கள். மற்றும் இலங்கைத்தீவின் கண்டிய, வன்னி பறை வாத்தியங்களின் கூட்டிணைவு இசை வெளிப்பாடாக இந்நிகழ்வு அமையவுள்ளது.

இந்நிகழ்வில் இசைஞர்கள், இசையாசிரியர்கள், இசை மாணவர்கள், இசை மற்றும் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு நுண்கலைத்துறைத்தலைவர் பேராசிரியர் அ.நோ. கிருஷ்ணவேணி அறிவித்துள்ளார்.

# தெய்வீகப்பேருரை

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வேங்கடேஷ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு தினமும் மாலை 7.30 மணிக்கு தெய்வீகப் பேருரை நடைபெறவுள்ளது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை தசாவதாரம் என்னும் விடயம் பற்றி ஆசிரியர் செந்தூர்ச் செல்வன் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

# முரசின் இன்றைய பலன்



(08.10.2013 செவ்வாய்க்கிழமை)

விஜய வருஷம் புரட்டாதி மாதம் 22 ஆம் திகதி.சதுர்த்தி விரதம்
விசாகநட்சத்திரம் மரணயோகம் பி.ப 02.32 வரை,சதுர்த்தி திதி
இராகுகாலம 03.02- 04.32 வரை.
சுபநேரம 10.32- 12.02 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** அமங்கல நிகழ்வில் பங்கேற்க வருதல், திருமணத்திற்காக புரோக்கர்களை நாடுதல், காது நோய் குணமடையாது தொடர்ந்தும் வருத்துதல்.

**ரிஷபம்** மனதில் தோன்றும் தீய எண்ணங்களை கைவிட்டதால் நன்மை, குழந்தைப்பேறு கேட்டு மகிழ்வு, நம்பியிருந்த பணம் வராமையினால் சஞ்சலம்.

**மிதுனம்** புதியன சேருவதால் ஆனந்தம், பரீட்சை முழவு நன்றாக வந்தமையினால் கொண்டாட்டம், மங்கல நிகழ்விற்காக கடன்படல்.

**கடகம்** வெளியூர் செல்ல விசா மறுத்ததினால் மனத்துக்கம், வேகக்கட்டுப்பாட்டு இழப்பினால் விபத்துப் பற்றிய அபாயம், தாயாரின் தேக நலம் சுகமடைவதால் மகிழ்வு.

**சிம்மம்** தடைப்பட்ட விவாகம் நிறைவேற பச்சைக்கொழ காட்டுதல், முறை தவறிய காதல் விவகாரத்தால் குடும்பத்தில் களேபரம் ஏற்படல்.

**கன்னி** பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய எச்சரிக்கை. நோய் காரணமாக இளைப்பாறும் யோசனை, இழந்த பொருளை சல்லடை போட்டுத்தேடியதால் கண்டு பிடித்தல்.

**துலாம்** நண்ட காலப் பொழுதாக நிலவி வந்த கடன் தொகை வந்து சேரல், துணைக்கு மக்கள் இல்லை என்ற ஏக்கத்தினால் உளத்தாக்க மேற்படல்.

**விருச்சிகம்** வீட்டுப்பிராணியினால் கடிபடும் அபாயநிலை, வெளியூரிலிருந்து நீண்ட காலத்தின்பின்னர் உறவினர் வருகை தரல், பிணைக்கு நின்றதால் பணம் கட்டும் நிலைப்பாடு

**தனுசு** செய்த முறைப்பாட்டை 'வாபஸ்" வாங்கியதால் தீமைவிலகல், பரீட்சை முழவின் பாதிப்பினால் கல் வியை நிறுத்தும் நிலைப்பாடு, பெற்றோரின் சொல் கேட்டதால் அபாயம் நீங்கிவிடல்.

**மகரம்** ஆள் மாறாட்டம் செய்தமையினால் பயணம் நிறுத்தப்படல். குடும்பப்பிணக்கு சமரசத்தினால் தீர்த்து வைக்கப்படல், மாமன்மாரின் உறவில் சற்று விரிசல் ஏற்படல்.

**கும்பம்** நெரிசலைக் காரணம் காட்டி இடை நடுவில் இறக்கிவிடப்படுவதால் அவதியுறல், அரசுப்பதவி கிடைக்கும் மகிழ்வான செய்தி கிட்டுதல்.

**மீனம்** பகிரங்கசேவை ஒய்வூதியர் நம்பிக்கை நிதியத்தால் பயன் பெறுதல் மைக்ரேன் எனப்படும் ஒற்றைத்தலைவலியால் அவதிப்படல், முற்றாகும் என எதிர்பார்த்த விவாகம் இழுபடல்.

# சீன ஓப்பன்; ஜோகோவிச், செரீனா சம்பியன்





(பீஜிங்)

சீன ஓப்பன் ரென்னிஸ் போட்டித் தொடரின் கிண்ணத்தை ஜோகோவிச் மற்றும் செரீனா வில்லியம் ஆகியோர் கைப்பற்றிக் கொண்டனர்.

சீன ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் பீஜிங்கில் நடைபெற்றது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவில், நடப்பு சம்பியன் நோவாக் ஜோகோவிச், ரபேல் நடாலை (ஸ்பெயின்) எதிர்கொண்டார். தரவரிசைப் பட்டியலில் முதல் இரு இடங்களில் உள்ள இந்த வீரர்கள் மோதிய இறுதிப் போட்டி, மிகுந்த எதிர்பார்ப்புடன் நடைபெற்றது.

ஆனால், ஆரம்பத்திலிருந்தே அதிரடியாக விளையாடிய ஜோகோவிச், நடாலின் சேர்வீஸ்களை முறியடித்து புள்ளிகளைக் குவித்தார். அவரது வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய நடால் 3-6 என்ற கணக்கில் முதல் செட்டை இழந்து பின்தங்கினார். இரண்டாவது செட்டிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் 6-3, 6-4 என்ற நேர் செட்களில் வென்று சம்பியன் பட்டத்தை தக்கவைத்துக் கொண்டார். சீன ஓப்பன் ரென்னிஸ் போட்டியில், கடந்த 5 ஆண்டுகளில் அவர் 4ஆவது முறையாக கோப்பையை வென்றுள்ளார்.

இதேவேளை, ஜோகோவிச், நடால் இடையே இதுவரை 38 போட்டிகளில் இடம்பெற்றுள்ளது. இதில் நடால் 22 போட்டிகளிலும், ஜோகோவிச் 16போட்டிகளிலும் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மகளிர் ஒற்றையர் பிரிவில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டார். இறுதிப் போட்டியில் சேர்பியாவின் ஜெலினா ஜென்கோவிச்சுடன் மோதிய செரீனா 6-2, 6-2 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வென்று அசத்தினார்.

இந்த ஆண்டில் அவர் பெறும் 10ஆவது டபுள்யு.டி.ஏ பட்டம் இது. மகளிர் ரென்னிஸ் சங்கம் (டபுள்யு.டி.ஏ) நடத்தும் போட்டிகளில் செரீனா 56 ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றுள்ளார். இறுதிப் போட்டியின் போது, கடுமையான முதுகு வலியால் அவதிப்பட்ட செரீனா, அதை பொருட்படுத்தாமல் அபாரமாக விளையாடி வென்றார்.



## கிண்ணம் வென்ற போபண்ணா ஜோடி

ஜப்பான் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் ரோகன் போபண்ணா, ரோஜர் வேசலின் (பிரான்ஸ்) ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

இறுதிப் போட்டியின் இங்கிலாந்தின் ஜேமி முர்ரே, ஜோன் பியர்ஸ் (அவுஸ்ரேலியா) ஜோடியுடன் நேற்று முன்தினம் மோதிய போபண்ணா ஜோடி 7-6 (7-5), 6-4 என்ற நேர் செட்களில் வென்று கோப்பையைக் கைப்பற்றியது.

## ஹர்மிஷன் ஓய்வு

(லண்டன்)

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் 34 வயதான ஸ்டீவ் ஹர்மிஷன் முதல்தர உட்பட அனைத்து வகையான கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெறுவதாக் நேற்று முன்தினம் அறிவித்தார்.. அவர் 63 டெஸ்டில் .விளையாடி 226 விக்கெட்டுகளும், 58 ஒரு நாள் போட்டிகளில் 76 விக்கெட்டுகளும் கைப்பற்றியுள்ளார். 2004ஆம் ஆண்டு சிறிது காலம் பந்து வீச்சாளர்களின் தரவரிசையில் முதலிடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மட்ரிட் த்ரில் வெற்றி



(வாலன்சியா)

லெவான்டே அணிக்கு எதிரான லா லிகா கால்பந்துத் தொடரின் லீக் போட்டியில் கடைசி நிமிடத்தில் கோல் அடித்த, கிறிஸ்டியானோ ரொனால்டோ ரியல் மட்ரிட் அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

ஸ்பெயினில் லா லிகா கால்பந்துத் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் லீக் போட்டியில் ரியல் மட்ரிட், லெவான்டே அணிகள் மோதின. போட்டியின் முதல் பாதியில் இரு அணி வீரர்களின் கோல் முயற்சியும் பலிக்கவில்லை.

தொடர்ந்து இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட லெவாண்டே அணிக்கு, பாபா தயாவரா (57ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு ரியல் மாட்ரிட் அணியின் செர்ஜியோ ராமோஸ் (61ஆவது நிமிடம்) பதிலடி கொடுத்தார். தொடர்ந்து லெவான்டே அணியின் நொபில் (86ஆவது நிமிடம்) மற்றொரு கோல் அடித்தார். இதற்கு ரியல் மட்ரிட் வீரர் ஆல்விரோ (90ஆவது நிமிடம்) கடைசி நிமிடத்தில் பதிலடி கொடுக்க, போட்டி சமநிலையை எட்டியது.

விறுவிறுப்பாக நடந்த கூடுதல் நேரத்தில் ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ (90ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். முடிவில், ரியல் மட்ரிட் அணி 3-2 என்ற கோல் கணக்கில் த்ரில் வெற்றி பெற்றது.

## இராசியான ஆண்டாக அமைந்ததில் மகிழ்ச்சி

(புதுடில்லி)

இந்த ஆண்டு மிகவும் இராசியான ஆண்டாக எனக்கு அமைந்திருக்கின்றதுடன் பல கிண்ணங்களைக் கைப்பற்றியிருப்பது மகிழ்ச்சி என இந்திய ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், என் உடற்தகுதி நல்ல நிலை யில் உள்ளது. தவிர, என் சேர்வீசிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டை காட்டிலும் திறமையான வீராங் கனையாக உருவெடுத்துள்ளேன். ஜப்பான், சீன ஓப்பன் தொடரை கைப்பற்றியது மகிழ்ச்சி அளிக்கிறது. கடந்த இரண்டு வாரம் மிகவும் சிறப்பானதாக மாறிவிட்டது. காரா பிளாக் திறமையானவர். முன்னாள் முதல்நிலை வீராங்கனையான இவருடன் விளையாடியது உற்சாகமானது. தவிர, நாங்கள் அடுத்த ஆண்டு முழுவதும் ஜோடியாக பங்கேற்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆப்கானிஸ்தான் அணிக்கு கிளார்க், மக்கலம் பாராட்டு

முதன் முறையாக உலக கிண்ணப் போட்டித் தொடருக்கு முன்னேறிய ஆப்கானிஸ்தான் அணிக்கு, மைக்கல் கிளார்க், பிரண்டன் மக்கலம் ஆகியோர் பாராட்டு தெரிவித்தனர். உலக கிரிக்கெட் லீக் சம்பியன்ஷிப் தொடரில் 2ஆவது இடம் பெற்ற ஆப்கானிஸ்தான் அணி, முதன் முறையாக உலக கிண்ண ஒரு நாள் போட்டித் (2015) தொடருக்கு தகுதி பெற்றது. இதில், இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, இலங்கை உள்ளிட்ட அணிகள் உள்ள ஏ பிரிவில் இடம் பெற்றுள்ளன. இந்நிலையில், உலகக் கிண்ணப் போட்டிக்கு ஆப்கானிஸ்தான் தகுதி பெற்றுள்ளமை குறித்து அவுஸ்ரேலிய அணிக் கப்டன் கிளார்க் மற்றும் நியூசிலாந்து அணிக் கப்டன் மக்கலம் ஆகியோர் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கிளார்க் கூறுகையில், ஐக்கிய அரபு எமிரேட்சில் கடந்த ஆண்டு இந்த அணிக்கு எதிராக விளையாடிய போது, துணிச்சலான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இந்த அணிக்கு உலக கோப்பைத் தொடரில் பங்கேற்கும் தகுதி உள்ளது. முதன் முதலாக இத்தொடரில் விளையாடும் ஆப்கானிஸ்தான் அணிக்கு, என்றும் நினைவில் நிற்கும் வகையில் இருக்கும் என்றார். பிரண்டன் மக்கலம் கூறுகையில், உலக கோப்பை தொடருக்குத் தகுதி பெற்ற ஆப்கானிஸ்தான் அணிக்கு வாழ்த்துக்கள். இது உலக கிரிக்கெட்டுக்கு நல்ல செய்தி தான். எதிர்வரும் 2015, மார்ச் 8இல் நேப்பியரில் இந்த அணியை எதிர்த்து விளையாடவுள்ளது, எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

## ஜாம்பவான்களின் இறுதியாட்டம்



இந்திய கிரிக்கெட்டின் இரு பெரும் ஜாம்பவான்களான சச்சின், ராவிட் நேற்று முன்தினத்துடன் ருவென்ரி-20 போட்டிகளில் இருந்து விடைபெற்றனர். இருவரும் சேர்ந்து அனைத்துவிதமாக கிரிக்கெட்டிலும் 92 ஆயிரம் ஓட் டங்களுக்கு மேல் எடுத்துள்ளனர். இவர்கள் கடைசி முறையாக எதிரணிகளில் பங்கேற்றதால், சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டி மீதான எதிர்பார்ப்பு அதிகரித்திருந்தது.

போட்டி ஆரம்பமாவதற்கு முன்னார் சச்சின் குறித்து ராவிட் கூறுகையில், சச்சினுக்கும் எனக்கும் ஒரே வயதுதான்(40). இரண்டு மாதங்கள் வேண்டுமானால், என்னைவிட இளையவராக இருப்பார். ஆனால், சர்வதேச கிரிக்கெட்டில் எனக்கு சீனியர். ஏழு ஆண்டுகளுக்கு முன் அவர் களமிறங்கிவிட்டார். நான் இந்திய அணியில் அறிமுகமான போது, சச்சின் கப்டனாக இருந்தார். இளம் வீரராக இவரையே ரோல் மொடலாக கொண்டேன். அப்போது முதல் தர கிரிக்கெட் விளையாடியவர்களுக்கு ஊக்க சக்தியாக திகழ்ந்தார். இவரால் முடியும் போது, எம்மாலும் முடியும் என்ற நம்பிக்கை பிறந்தது. இவரோடு ஓய்வறையில் பல விடயங்களை பகிர்ந்து கொண்டேன். அது புது உத்வேகம் அளித்தது. இவரோடு இங்கிலாந்து சென்று போட்டிகளில் பங்கேற்றது மகத்தான அனுபவமாக அமைந்தது என்றார்.

ராவிட் குறித்து சச்சின் கூறுகையில், நுணுக்கமான ஆட்டத்தில் ராவிட் தான் மாஸ்டர். எனது அணியில், துடுப்பாட்ட வரிசையில் இவருக்கு தான் எப்போதும் மூன்றாம் இடம். இந்த நிலையில் களமிறங்கி பல முறை அபாரமாக ஆடியுள்ளார். அணியில் உள்ள மற்ற வீரர்கள் திணறும் போது, இவர் மட்டும் சிரமமின்றி விளையாடுவார். சவாலை சந்திக்க மிகவும் விரும்புவார். இக்கட்டான நேரத்தில் அணிக்கு கைகொடுக்கும் வீரராக ராவிட் விளங்கினார் என்றார்.

## அர்த்தமற்ற தொடர்

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஒரு நாள் தொடர் அர்த்தமற்றது என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வீரர் இயன் சப்பல் அதிருப்தி தெரிவித்துள்ளார். ஆஷஸ் தொடர் விரைவில் ஆரம்பமாக (நவம்பர் 21) குறுகிய காலமே இருக்கையில் இந்திய தொடரில் விளையாட அவுஸ்ரேலிய அணி ஒத்துக்கொண்டது அர்த்தமற்றது. அவுஸ்ரேலிய அணி பணத்துக்குத் தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. ஆஷஸ் தொடரில் தோல்வியைச் சந்தித்து தனது துடுப்பாட்ட பலவீனத்தை வெளிப்படுத்திய அவுஸ்ரேலிய அணி, சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான இந்திய மண்ணில் விளையாட எடுத்த முடிவு தேவையற்றதாகும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பந்து வீச்சாளர்கள் மீது வாஸ் அதிருப்தி

(கொழும்பு)

இளம் வேகப்பந்து வீச்சாளார்கள் மீது இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளர் சமிந்த வாஸ் அதிருப்தி வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளராக இவ்வாண்டு பெப்ரவரியில் பதவியேற்ற சமிந்த வாஸ், இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர்களுடன் இணைந்து தொடர்ச்சியாகச் செயற்பட்டு வருகிறார்.

இந்நிலையில் புதிய வேகப்பந்து வீச்சாளர்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த சமிந்த வாஸ், அவர்களுக்குத் தங்களுடைய எதிர்காலம் குறித்துத் திட்டமிடத் தெரியவில்லை எனக் குறிப்பிட்டார்.

தன்னுடைய காலத்தில் தாங்கள் வலைப்பயிற்சிகளில் பந்துவீசும் போது ஒவ்வொரு தடவையும் ஏதாவதொன்றைப் புதிதாகக் கற்றுக் கொண்டதாகக் குறிப்பிட்டார். தங்களுக்கெதிராக வலைப்பயிற்சியில் துடுப்பெடுத்தாடும் துடுப்பாட்ட வீரரிடம் தங்களது பந்துவீச்சுக் குறித்துக் கேட்டறிந்ததாகவும், தாங்கள் ஏதும் தவறு செய்வதாக உணர்வதாக அவர்களிடம் கேட்டதாகவும், அதன் மூலம் முன்னேற்றமடைய முயற்சித்ததாக அவர் குறிப்பிட்டார்.

ஆனால் தற்போதைய வேகப்பந்து வீச்சாளர்கள் அவ்வாறான வினாக்களைக் கேட்பதில்லை எனக் குறிப்பிட்ட சமிந்த வாஸ், அவர்கள் ஒன்றில் கேட்பதற்கு அச்சப்பட வேண்டும், இல்லாவிடின் அவர்கள் மென்மையானவர்களாக இருக்க வேண்டும், இல்லாவிடில் அவர்களது சிந்தனை செய்யும் முறை வித்தியாசமானது என சமிந்த வாஸ் குறிப்பிட்டார்.

## பயிற்சியாளர் பதவிக்கு ஆறு பேர் விண்ணப்பம்

இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவிக்கு 6 பேர் விண்ணப்பித்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. விண்ணப்பிப்பதற்கான இறுதித்தினம் நேற்று முன்தினமாக அமைந்திருந்த நிலையிலேயே இலங்கை கிரிக்கெட் சபை இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

இலங்கையின் தற்போதைய பயிற்றுவிப்பாளரான கிரஹம் போர்ட் தனது 2 வருட கால ஒப்பந்த முடிவில், அதனைப் புதுப்பிக்காது பதவியிலிருந்து விலகவுள்ள நிலையில், புதிய பயிற்றுவிப்பாளருக்கான விண்ணப்பங்களை இலங்கை கிரிக்கெட் சபை கோரியிருந்தது.

6 பேர் இப்பதவிக்காக விண்ணப்பித்ததை வெளிப்படுத்திய இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியான ஆஷ்லி டீ சில்வா, அவர்கள் யார் என்ற விபரத்தை வெளியிட விரும்பவில்லை எனத் தெரிவித்தார்.

எனினும், இதுவரை வெளியான தகவல்களின் அடிப்படையில், இலங்கையின் முன்னாள் உப பயிற்றுவிப்பாளர் போல் பப்ரேஸ் இப்பதவிக்கு விண்ணப்பித்துள்ளதாகத் தெரிய வருகிறது. 2009ஆம் ஆண்டு பாகிஸ்தானில் வைத்து இலங்கை வீரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தீவிரவாதத் தாக்குதலில் காயமடைந்த போல் பப்ரேஸ், அந்தப் பதவியிலிருந்து விலகியிருந்தார்.

.இவரைத் தவிர, ஷேன் டெப், இலங்கையின் தற்போதைய களத்தடுப்புப் பயிற்றுவிப்பாளர் றுவான் கல்பகே ஆகியோரும் விண்ணப்பித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்தின் முன்னாள் பயிற்றுவிப்பாளர் பீற்றர் மூர்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸின் தற்போதைய பயிற்றுவிப்பாளர் ஸ்ரீபன் பிளமிங் ஆகியோரையும். இப்பதவிக்கு அழைக்க இலங்கை கிரிக்கெட் சபை முயற்சிகளை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழா

# 198 புள்ளிகளைப் பெற்று வடமாகாணம் ஆறாமிடம்


(கொழும்பு)

அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான தேசிய மட்ட விளை யாட்டுப் போட்டியில் வடமாகாணம் 198 புள்ளிகளைப் பெற்று ஆறாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. மேல்மாகாணம் 1088 புள்ளிகளைப் பெற்று முதலா மிடத்தைப் பிடித்துக் கொண்டது.

அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான தேசிய மட்ட . தடகளப் போட்டி கடந்த 2ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் நடை பெற்றது.

இதில் வடமாகாணத்தின் 12 கல்வி வலயங்களைச் சேர்ந்த 450இற்கும் மேற்பட்ட வீர,வீராங்கனைகள் பங்கு கொண்டனர்.

இதில் இறுதி நாள் நிகழ்வின் போது வடமாகாணம் ஆறு பதக்கங்களைக் கைப்பற்றியிருந்தது. இதில் ஆண்களுக் கான 19 வயதுப் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி வீரர் சாள்ஸ் அன்ரனி 4.05 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கம் வென்றார். இதே வயதுப் பிரிவில் அளவெட்டி அருணோயதக் கல்லூரி வீரர் எஸ். நிதுசன் 3.95 மீற்றர் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார். இதேவயதுப் பிரிவில் அதே கல்லூரி-யைச் சேர்ந்த பி. லவணன் 3.85 மீற்றர் பாய்ந்து வர்ண விருது வென்றார். இப்பிரிவில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி வீரர் அன்ரனி பிரசாத் 3.85







மீற்றர் பாய்ந்து வெண்கலப் பதக்கம் வென்றார்.

21 வயதுப் பிரிவு பெண்களுக்கான உயரம் பாய்தலில் உடுவில் மகளிர் கல்லூரி வீராங்கனை கமலினி மில்ஸ் 1.51 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கம் வென்றார். 19 வயதுப் பிரிவு பெண் களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியக் கல்லூரி வீராங் கனை பா. ராஜிதா 36.99 மீற்றர் பாய்ந்து வெள்ளிப் பதக்கம் வென்றார்.

இந்நிலையில் ஒட்டுமொத்தகமாக வடமாகாணம் 24 பதக்கங்களை வென் றுள்ளது. இதில் ஆறு தங்கம், பதி னொரு வெள்ளி, ஏழு வெண்கலப் பதக்கங்களை வென்று ஆறாவது இடத் தைப் பிடித்துள்ளது. அத்துடன் பெரு விளையாட்டுகளில் 15 பதக்கங்களை வடமாகாணம் கைப்பற்றியிருந்தது. இதே வேளை, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மற்றும் அளவெட்டி அருணோ-தயக் கல்லூரி வீர,வீராங்கனைகளே அதிக பதக்கங்களை வடமாகாணம் சார்பாக பெற்றுக் கொண்டமை குறிப் பிடத்தக்கது.

கடந்த வருடம் 18 பதக்கங்களை வென்ற வடமாகாணம் 178 புள்ளிகளைப் பெற்று ஆறாமிடத்தைப் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி நிகழ்வில் விசேட அதிதியாக ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ கலந்து கொண்டார். மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப் பாளர்கள், கல்வி அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகார்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தனர்.

### மாகாணம் பெற்ற புள்ளிகள்

| மாகாணம் | புள்ளி |
|---|---|
| மேல் மாகாணம் | 1088 |
| சப்ரகமுவ மாகாணம் | 0537 |
| வடமேல் மாகாணம் | 0525 |
| மத்திய மாகாணம் | 0524 |
| தென் மாகாணம் | 0236 |
| வடமாகாணம் | 0198 |
| உவா மாகாணம் | 0116 |
| வடமத்திய மாகாணம் | 0110 |
| கிழக்கு மாகாணம் | 0082 |

## மட்டக்களப்பு இந்துக் கல்லூரியிடம்

# வீழ்ந்தது சென். பற்றிக்ஸ்

(மட்டக்களப்பு)

சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கைப் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வய துப்பிரிவு அணிகளுக்கிடையிலான நிலைகள் முறையிலான ஒரு நாள் போட்டி அண்மையில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 28 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டானியல் 30 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் எஸ். திலீபன் நான்கு, ஜெகதீஸ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.


பதிலுக்கு 82 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மட்டக்களப்பு இந்துக் கல்லூரி அணி 27 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ரதீஸ்குமார் ஆட்டமிழக்காது 37, அலஸ்ஷன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பியற்றிக் மூன்று விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

(எஸ்.பி.)

# ஜெயரட்ணம் கிண்ண கால்பந்து மின்னொளியில் இன்று இறுதி



மானிப்பாய் இந்துக் கல்லூரி



ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி

(தெல்லிப்பளை)

ஜெயரட்ணம் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் மின்னொளியில் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் ஜெயரட்ணத்தின் 100ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியினால் நடாத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் இரவு 7.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறவுள்ளது. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல் லூரி அணி மோதவுள்ளன.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான போட்டியும், கண்காட்சிப் போட்டியும் இடம்பெறவுள்ளதாகவும், இதில் மூன்றாமிடத்திற்கான போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும், யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதவுள்ள அதேவேளை, கண்காட்சிப் போட்டியில் மகாஜனக் கல்லூரி அணியும், அதன் பழைய மாணவர் சங்க அணி யும் மோதவுள்ளதாகப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இன்றைய தினம் அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான கரம் போட்டி களும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

(93)

# காந்தியாரும் சமகால இலங்கையும்

- சிறிதரன் (சுகு) -

வெலிவேரியாவில் குடிநீர் நஞ்சாவதை எதிர்த்த மக்கள் மீது துப்பாக்கிச் சூடு, பள்ளிவாசல் - தேவாலயங்கள் - சிறுபான்மையினரின் உடமைகள் மீதான தாக்குதல்கள், கன்னை கட்டி நிற்கும் இனப்பெருமித உணர்வுகள் இவற்றையெல்லாம் பார்க்கும் போது காந்தியடிகளின் அறவிழுமியங்கள் மிச்சமீதியாகத் தன்னும் எம்மிடம் இருக்கின்றனவா என்ற கேள்வி எழுகிறது.

இலங்கையின் வரலாறு கலாசாரம் புரையோடிக் கிடக்கிறது. நெறியான வாழ்வு மருந்துக்கும் கிடையாது. ஊதாரித்தனம் தலைவிரித்தாடுகிறது. உழைப்பில்லாமல் வெளிநாடுகளில் இருந்து வரும் பணத்தை தண்ணீராய் செலவு செய்யும் கூட்டம் உருவாகியிருக்கிறது.

தேர்தல்கள் என்று வந்தால் இனப் பெருமித உணர்வுகளே துருத்திக்கொண்டு நிற்கின்றன. சிறு தேசியங்களின் தேசிய வாதத்தில் ஒரு ஜனநாயக உள்ளடக்கம் இருக்கிறது. ஆனால் சமூகங்கள் ஒரு புரிந்துணர்வுக்கு வருவதற்கு இது ஒரு வரலாற்று தடையாக இருக்கக் கூடாது.

காந்தியம் உருவாக்கிய பாரம்பரியம் சகிப்புத் தன்மை. ஆனால் இலங்கையின் அரசியல் திரும்ப திரும்ப மக்களை நரகப்படுகுழிக்குள் விழுத்திக் கொண்டிருக்கிறது.

அறஞ்சார்ந்த அரசியலை இடதுசாரிகள் முன்னெடுப்பார்கள் என்றால் அவர்களும் மிகவும் பலவீனமான நிலையில் தான் இருக்கிறார்கள். அதிகாரத்தை சார்ந்து இயங்கவேண்டிய நிலையில் பாரம்பரிய இடதுசாரிகள் இருக்கிறார்கள். இதர அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள் தன்னலம் மறுத்தவர்கள் இல்லை. பெரும்பாலானவர்கள் வியாபாரிகள்.

நாக்கில் சமூக அரசியலும் நெஞ்சில் குடும்ப, உற்ற சுற்ற நலன்களையும் ஏந்திநிற்பவர்கள் கனவான்களாக இருக்கிறார்கள்.

காந்தியாரின் அற அரசியல் இருக்கும் என்ற நம்பிக்கை ஆர்வமூட்டுவது.

உண்மையில் காந்தியார் எமக்கொரு கருவூலம். காந்திய சாராம்சம் எமக்கொரு வழிகாட்டியாக இருக்கவேண்டும். "காந்தி பிறந்து நூறு ஆண்டுகாலம் ஆச்சுங்க, காந்தி சொன்ன வழியில் செல்வோர் யாரும் இல்லீங்க" என்று தினபதியில் வந்த வசனம் எனக்கு இன்னும் ஞாபகம்.

60 ஆண்டுகளுக்கு மேலாக நிலவும் இலங்கையின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு காந்தியம் உதவும். ஆனால் காந்திய வழி எமது சமுதாயத்தில் முறையாகப் பின்பற்றப்படவில்லை என்பதே உண்மையாகும். எதிர்மாறான நிலைகள் கடந்த 3 தசாப்தங்களாக நிலவின.

பூராவும் நிகழ்ந்த இனக்கலவரங்களாயினும் சரி, 1990இல் முஸ்லிம் மக்கள் வடக்கிலிருந்து உடுத்த துணியுடன் வெளியேற்றப்பட்ட அவலமாயினும் சரி, இன்று மிக ஆரவாரமாக நிகழ்ந்து கொண்டிருக்கும் பேரினவாத திட்டமிட்ட இனவிரோத நிகழ்ச்சி நிரலாயினும் சரி காந்திய விரோத நிலைப்பாடுகளே.

சமூகங்கள் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் வாழ்வதற்கான நிலைமைகள் இலங்கையில் அறவே அற்றுப்போய்க் கொண்டிருக்கின்றன. சகிப்புத் தன்மை என்பது அறவே கிடையாது. நுகர்வுக் கலாசாரம் ...

இனத்துவ வகைப்பட்ட அரசியல் அத்தகைய சகிப்புத் தன்மை எதையும் கொண்டிருக்கவில்லை. மிகக் கொடூரமாக பெருந்தொகையான மக்களுக்கெதிராக நடத்தப்பட்ட படுகொலைகள் வன்முறைகள் தொடர்பாக பரஸ்பரம் குற்றஞ் சாட்ட விரும்புகிறார்களே ஒழிய தங்கள் தங்கள் தரப்பில் இழைக்கப்பட்டவை பற்றி பேசுவதற்கு தயாரானவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். உண்மைகளைக் கண்டறிவதற்கான இடைவெளி குறைவாகவே காணப்படுகிறது.


இதனால் இனத்துவ வகைப்பட்ட சிங்கள - தமிழ் மக்களை பீதியில் பதற்றத்தில் வைத்திருப்பதற்கு எதிரானது. ஜனநாயக, மனித உரிமை, தார்மீக விழுமியங்களால் நிறைந்தது. சமூகங்களின் ஒற்றுமை, தீண்டாமை நிராகரிப்பு, நிறவெறி எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, வறுமை ஒழிப்பு, பெண்களின் வாழ்நிலையை உயர்த்துவது, இயற்கைப் பாதுகாப்பு, சமாதான சகவாழ்வு இவையெல்லாம் காந்தியத்தின் பிரதான விடயங்களாக இருக்கின்றன.

இன்று உலகளாவிய அளவில் நேசிக்கப்படுபவர் காந்தி. மனிதர்களின் நல்லியல்புகளை வெளிக் கொணர்வது, எந்த மனிதருக்குள்ளும் வெவ்வேறளவில் அது ...

பிரச்சினைகளை இயலுமானவரை மீண்டும் மீண்டும் பேசிப்பார்ப்போம். உறுதியுடன் எடுத்துரைப்போம். ஆனால் எமது பிரச்சினைகள் எவை என்று திட்டவட்டமாக எமக்குத் தெரிந்திருக்க வேண்டும். சாத்தியமாகாத இடங்களில் அஹிம்சை வழியில் போராட முயல்வோம்.

அஹிம்சைப் போராட்டத்திற்கான இடைவெளி எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டும்! மனிதகுலவிரோத சட்டங்கள் நீக்கப்பட வேண்டும்! சகலவிதமான தீண்டாமைகளுக்கும் முடிவு கட்டவேண்டும்!

காந்தியவழி மனித குலத்தின் சுயமரியாதை தொடர்பானது. இதை நாம் மனதில் இருத்தியாகவேண்டும் "நேர்மையாக வாழ வேண்டுமாயின் போராடுவதும் பிழைபுரிவதும் தூக்கியெறிதலும் திரும்பவும் தொடங்குதலும் குழப்பிக் கலங்குதலும் இழப்புக்குள்ளாதலும் இன்றியமையாதவை. மன நிம்மதி அது ஆன்மாவின் இழிநிலை." - ரோல்ஸ்ரோய்



# ஆர்க்கிமிடீஸ் [கி.மு.287-212]


ஒரு பொருளானது தண்ணீரில் மூழ்கினால் அது தன் எடைக்குச் சமமான நீரை வெளியேற்றுகிறது என்ற அரிய உண்மையைக் கண்டறிந்து உலகிற்குக் கூறியவர் ஆர்க்கிமிடீஸ். இந்த அறிவியல் உண்மை அவர் பெயராலேயே "ஆர்க்கிமிடீஸ் கோட்பாடு" என்று அழைக்கப்படுகிறது. கணிதம், பௌதிகம், வானவியல் போன்ற பல துறைகளில் இவர் மேதையாக விளங்கினார். சிசிலித் தீவில் உள்ள சைரக்யூஸ் என்னும் இடத்தில் கி.மு.287 இல் பிறந்தார்.

நெம்புகோல் மற்றும் புவிஈர்ப்பு உருளை ஆகியவற்றைக் கண்டறிந்த வரும் இவரே. "இவ்வுலகை விட்டு வெளியே நிற்க எனக்கு ஓர் இடம் கிடைக்குமானால், பூமிப் பந்தையே நெம்புகோல் கொண்டு என்னால் புரட்டி விட முடியும்! என்று கூறி நெம்புகோல்களின் தத்துவத்தை விளக்கினார்.

புவி ஈர்ப்பு விசையின் பயன்பாட்டின் அடிப்படையில் "தளங்களின் சமநிலை" என்ற நூலை எழுதினார். திரவ நிலையியல் தத்துவங்களை "மிதக்கும் பொருள்கள்" என்ற நூலின் மூலம் விளக்கினார். கேத்திர கணிதத்தில் இவர் கண்டறிந்த உண்மைகள் அளவில்லாதவை.

அன்றாட வாழ்வை வசதியாக்கப் பல எளிய இயந்திரங்களை இவர் உருவாக்கினார். சாய்தளத்தின் அடிப்படையில் திருகுகள் அமைகின்றன என்ற தத்துவத்தின் அடிப்படையில் கீழே தேங்கியுள்ள நீரை மேலேற்ற ஒருவிதத் திருகு போன்ற கருவியையும் கப்பியையும் வடிவமைத்து நீரை மேலே ஏற்றிக் காட்டினார்.

சைரக்யூஸ் நாட்டு மன்னர் ஹீரானுக்கு, அவருடைய கிரீடத்தில் தங்கத்துடன் வெள்ளியை அரண்மனைப் பொற்கொல்லர் கலந்திருப்பாரோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த அந்த கிரீடத்தை உருக்கிப் பரிசோதிக்கவும் மனமில்லாதவராக இருந்தார். அரசர், ஆர்க்கிமிடீஸிடம் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.



தொட்டியில் குளித்துக் கொண்டிருந்த ஆர்க்கிமிடீஸ் "யுரேகா... யுரேகா..." என்று கத்தியபடியே அரண்மனைக்கு ஓடிச்சென்று தாம் கண்டறிந்த உண்மையை விளக்கினார். அதுவே "ஆர்க்கிமிடீஸ் கோட்பாடு" ஆகும். இக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே கப்பல்கள் உருவாக்கப்படுகின்றன.

இவருக்கு எழுபது வயதானபோது ரோமாபுரிக்கும் சிசிலிக்கும் போர் மூண்டது. இரும்பினால் செய்யப்பட்ட பிரமாண்டமான உருளைக் குண்டுகளை, ... வைத்து அடித்து ரோமானியக் கப்பல்களின் மீது வீசி, அவற்றை கடலில் மூழ்கடித்தார்.

மிகப் பெரிய வில்லைகளை உருவாக்கி, அவற்றின் மூலம் சூரிய ஒளியைக் குவித்து, அந்த ஒளிக்கற்றைகளை எதிரி நாட்டுப் பாய்மரக் கப்பல்களின் மீது விழச் செய்தார். இதனால் அந்தப் பாய்மரங்கள் தீப்பிடித்து சேதமடைந்தனவாம்.

ஆனால் இதற்கெல்லாம் ரோமானியர் சளைக்கவில்லை. இறுதியாக சிசிலியைக் கைப்பற்றினர். அவர்கள் முதலில் கைது செய்ய விரும்பியது ஆர்க்கிமிடீஸை மட்டுமே!

ஆர்க்கிமிடீஸ் கணித ஆராய்ச்சியில் மூழ்கிவிட்டால் உலகையே மறந்துவிடுவார். ரோமானியர்கள் சிசிலியைக் கைப்பற்றிய அன்றும் மணலில் ஏதோ கணக்குகளைப் போட்டுக் கொண்டிருந்தார். அவரைக் கண்ட ரோமானிய வீரன் ஒருவன் அவரை வெட்டி வீழ்த்தினான்.


இறக்கும் தறுவாயிலும், "இன்னும் சில மணி நேரம் தாமதமாக வந்திருந்தால் ஓர் அரிய கணித உண்மை உலகுக்குக் கிடைத்திருக்கும்! உங்களால் என் உடலை மட்டுமே எடுத்துச் செல்ல முடியும்... என் அறிவை அல்ல" என்று கூறியபடியே உயிர்நீத்தார் அந்த மாமேதை!

# தொடர்ச்சியாகத் தூங்கும் பெண்!

இங்கிலாந்தைச் சேர்ந்தவர், இமார்ல்ட் டூப்ரே என்ற 23 வயது இளம் பெண். நரம்பு கோளாறால் பாதிக்கப்பட்டுள்ள இவருக்கு, தொடர்ச்சியாக தூங்கும் நோய் ஏற்பட்டுள்ளது. கடந்தாண்டில் மட்டும், 59 நாட்கள் தொடர்ச்சியாக தூங்கியுள்ளார். ஒரு குழந்தை, தூங்கும்போது, எப்படி நடந்து கொள்ளுமோ, அப்படி நடந்து கொள்கிறார்.

தூக்க கலக்கத்திலேயே எழுந்து, தண்ணீர் அருந்துவது, பால் குடிப்பது, சாப்பிடுவது போன்ற வேலைகளைச் செய்கிறார். இவரை பரிசோதித்த மருத்துவர்கள், "இந்த பெண்ணுக்கு, நரம்பில் சில பிரச்சினைகள் உள்ளன. இதனால், தொடர்ச்சியாக தூங்கும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். உலகில், 1,000 பேருக்கு மட்டுமே, இந்த விசித்திர நோய் உள்ளது. இந்த நோயை குணப்படுத்துவது, மிக கடினம்" என்கின்றனர்.

ஆனாலும், இமார்ல்ட் டூப்ரே, தனக்கு ஏற்பட்டுள்ள இந்த விசித்திர நோய், குணமடைந்து விடும் என,. உறுதியாக நம்புகிறார்.



# சினிமா சினிமா



• ஒரே ஹீரோயினை தனது அடுத்தடுத்த படங்களில் நடிக்க வைப்பது விஜய் வழக்கம். தொடர்ந்து இவரது படங்களில் த்ரிஷா ஹீரோயினாக நடித்துள்ளார். இதையடுத்து அசின், பின்னர் காஜல் அகர்வால். கால்ஷீட் சொதப்பல், நேரம் தவறாமை உள்ளிட்ட விஷயங்களாலேயே முன் குறிப்பிட்ட நடிகைகள் விஜய்யுடன் தொடர்ந்து நடித்துள்ளனர். அந்த வரிசையில் “தலைவா” படத்தில் நடித்த அமலாபாலும் இடம்பெறுவார் என்று அவரது அபிமானிகள் எதிர்பார்த்தனர். ஆனால் நடக்கவில்லை. இதனால் அமலாபால் ஏமாற்றம் அடைந்துள்ளாராம்.

• விஸ்வரூபம் படத்திற்கு ஏற்பட்ட எதிர்பார்ப்பும், எதிர்ப்பும் தற்போது, கமல் இயக்கி, நடித்துள்ள அதன் இரண்டாம் பாகத்துக்கும், ஏற்பட்டுள்ளது. விஸ்வரூபம் முதல் பாகத்திற்கு எதிர்ப்புகள் கிளம்பியபோது, ஒரு கட்டத்தில், தான் இந்த நாட்டை விட்டு வெளியேறுவேன் என்று கமல் உணர்ச்சி பொங்க பேசினார். அந்த பேச்சு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பின்னர் ஒருவழியாக “விஸ்வரூபம்” படம் வெளிவந்து பெரும் வசூலைக் குவித்தது. தற்போது அதன் இரண்டாம் பாகத்தை கமல் இயக்கி, நடித்து வருகிறார். இந்நிலையில், நிருபர்களிடம் பேசிய கமல்ஹாசன், “கலைஞன் என்ற முறையில் மீண்டும் எனக்கு மிரட்டல், பிரச்சினை ஏற்பட்டால், நாட்டை விட்டு வெளியேறுவது உறுதி. பின்வாங்க மாட்டேன்...” என்று கூறியுள்ளார்.

• தன் சக தோழன், பரத் திருமணம் செய்து கொண்டதை அடுத்து, ஆர்யாவும் அடுத்த ஆண்டில், திருமணம் செய்து கொள்ள திட்டமிட்டுள்ளார். தடல்புடலாக பெண் தேடும் படலத்தை துவக்கியுள்ளனர், அவரது பெற்றோர். குறிப்பாக, நயன்தாராவுடன் ஆர்யா இணைத்து பேசப்பட்டு வருவதால், அதற்கு முற்றுப்புள்ளி வைக்க, திருமணம் தான் சரியானது என்று, தீவிரம் காட்டுகின்றனர்.

• 80 - 90 களில் தனக்கென தனி ரசிகர் வட்டத்தை உருவாக்கி வைத்திருந்தார் நாகேஷின் மகன் நடிகர் ஆனந்த்பாபு. திடீரென்று காணாமல் போனார். மனநிலை பாதித்த நிலையில் வேலூரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தது தெரிந்தது. அதன் பிறகு 2 வருடங்களுக்கு முன் சூர்யா நடித்த ”ஆதவன்“ படத்தில் ரீ என்ட்ரி ஆனார். ஆனாலும் தொடர் வாய்ப்புகள் இல்லாமல் ஒதுங்கி இருந்தார். 25 வருடங்களுக்கு முன் ஆனந்த்பாபு நடித்த ”பாடும் வானம்பாடி“ என்ற படம் பெரும் வெற்றி பெற்றது. அப்படத்தை இயக்கிய எம்.ஜெயக்குமார் தற்போது தான் இயக்கி வரும் ”ஜமாய்“ என்ற படத்தில் ஆனந்த்பாபுவுக்கும் வாய்ப்பு கொடுத்திருக்கிறார். சிறுவன் ஒருவனுக்கு நடனம் சொல்லி தரும் நடன மாஸ்டர் வேடம்.

• ஹிந்தி சினிமாவில், அசினுக்கு இருந்த வரவேற்பு குறைந்து வருவதற்கு காரணம், அவரது முகம் பொலிவிழந்து விட்டதுதான். ஆரம்பத்தில், பட்டாம்பூச்சியாய் பளபளத்தவர், பின்னர், இரவு பகல் என்று ஓய்வின்றி நடித்ததால், அவரது முக ஜொலிப்பு மங்கிவிட்டது. இதனால், அவருடன் “வெல்கம்” படத்தில் நடிக்கவிருந்த அக்ஷய் குமார், அசினை வேண்டாமென்று சொன்னதோடு, ஸ்ருதிஹாசனுக்கு சிபாரிசு செய்துவிட்டார். இதனால், ஆடிப்போன அசின், தற்போது கேரளாவில் முகாமிட்டு, தன் மேனியில் பளபளப்பு கூட்டும், ஆயுர்வேத சிகிச்சைகளை செய்து வருகிறாராம்.

• இசை அமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் மதயானைக்கூட்டம் என்ற படத்தை தயாரித்து வருகிறார். அடுத்து கௌதம் மேனனின் உதவியாளர் மணி நாகராஜ் இயக்கும் படத்தில் ஹீரோவாக நடிக்கிறார். அந்தப் படத்திற்கு தயாரிப்பாளரும், இசை அமைப்பாளரும் அவர்தான். படத்தின் பெயர் பென்சில். தலைப்பே சொல்வது போல, ஜி.வி.பி பிளஸ்-2 மாணவனாக நடிக்கிறாராம். அவருக்கு ஜோடியாக ப்ரியா ஆனந்த்.

• தெலுங்கில் கைநிறைய படங்கள் வைத்திருக்கும் சமந்தா, சித்தார்த்துடன் இணைத்து வெளியான காதல் கிசுகிசுக்கள் சற்று அடங்கி விட்டதால், இப்போது, தன் சம்பளத்தை கோடிக் கணக்கில் உயர்த்தி, தயாரிப்பாளர்களின் நிம்மதியை கெடுத்து வருகிறார். இப்படி சமந்தாவை இலட்சங்களிலிருந்து கோடிகளுக்கு உயர்த்தியது, அவரைப் பின்னால் இருந்து இயக்கி வரும் சித்தார்த் தான் என்றும், ஒரு புதிய, கிசுகிசு பரவியுள்ளது.

• தமிழில், தசாவதாரம் மற்றும் ஒஸ்தி படங்களில் நடித்தவர், பொலிவுட் நடிகை மல்லிகா ஷெராவத். இவர் அரசியலில் பிரவேசிக்கும் ஆசையில், குஜராத் முதல்வர் நரேந்திர மோடியை, “இந்தியாவின் தலைசிறந்த பிரம்மச்சாரி...” என்று சொல்லி, பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார். அதன்பின்னர் மோடி பா.ஜ.க. வின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப் பட்டிருக்கும் இது தான் சரியான தருணம் என்று, முடிவு செய்த மல்லிகா, சமீபத்தில், அவரது 64ஆவது பிறந்த நாளின் போது, பிரத்தியேக வாழ்த்து சொல்லி, பா.ஜ.க. வுக்கு மனு போட்டு காத்துள்ளார்!


# ஒளிரும் காளான்கள்

- ப. ஜெகநாதன் -

பள்ளிப் பருவத்தில் என் வீட்டுக் கடிகாரத்தின் எண்களும் முட்களும் இரவில் பச்சை நிறத்தில் ஒளிர்வதைக் கண்டு வியந்திருக்கிறேன். வீட்டில் இருந்த வேளாங்கண்ணி மாதாவின் சிறிய இளம்பச்சை நிற விக்கிரகம் இரவில் ஒளிர்வதைக் கண்டு வியந்திருக்கிறேன். பிற்காலத்தில் உயிரில்லாத இப்பொருட்கள் ஒளிர்வதற்கான காரணம் ரேடியம் (radium) என்ற இரசாயனவியல் மூலகம் எனவும், அதைக் கண்டுபிடித்த மேரி க்யூரி - பியர் க்யூரி தம்பதியரைப் பற்றியும் பள்ளிப் பாடப் புத்தகங்கள் வாயிலாக அறிந்துகொண்டேன்.

சிறு வயதில் கோடை விடுமுறையில் கிராமத்துக்குப் போனபோது, இரவு நேரங்களில் பச்சை நிறத்தில் மினுக்மினுக் என விட்டுவிட்டு எரிந்துகொண்டே மெல்லப் பறக்கும் மின்மினிப்பூச்சிகளைக் கண்டு வாய் பிளந்து பார்த்து வியந்திருக்கிறேன். இளஞ்சிவப்பிலும் இளம் பச்சையிலும் ஒளி வீசிக்கொண்டு தரையில் ஊர்ந்து செல்லும் செவ்வட்டை (glowworm) பூச்சியைக் கண்டு கண்கள் அகல விரியப் பார்த்து ஆச்சர்யப்பட்டிருக்கிறேன். இந்த ஒளி உமிழும் நிகழ்வு, உயிர் ஒளிர்வு (bioluminescence) எனவும் அதற்கான காரணி லூசிபெரேஸ் (luciferase) எனும் நொதியே (enzyme) என்பதையும் கல்லூரியில் படித்திருக்கிறேன்.

இந்த ஒளிரும் தன்மை காளான்களுக்கும் உண்டு. உலகில் சுமார் 71 வகையான காளான்கள் இப்படி ஒளி உமிழும் தன்மையைக் கொண்டிருக்கின்றன. இந்தக் காளான்களின் வித்துகள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குப் பரவுவதற்கு உதவும் பூச்சிகளையும் ஏனைய உயிரினங்களையும் கவர்வதற்காகவே இத்தகைய ஒளி உமிழும் தன்மையை இவை பெற்றிருக்கின்றன. இத்தன்மையை இவை எப்படிப் பெறுகின்றன? இவ்வகையான காளான்களின் திசுக்களில் உள்ள லூசிபெரேஸ் எனும் நொதியானது லூசிபெரின் எனும் கரிம மூலக்கூறில் ஒட்சியேற்றத்தை (oxidation) ஊக்குவிக்கிறது. அப்போது, இரசாயனவியல் மாற்றத்தின் விளைவால் ஏற்படும் மேலதிக ஆற்றல் பச்சை ஒளியாக வெளியேறுகிறது. இதுவே அக்காளான்களின் திசுக்களை ஒளிரவைக்கிறது.



அண்மையில், ஒரு மழைக்கால மாலை நேரத்தில் களப்பணியை முடித்துவிட்டு வீடு திரும்பும் வேளையில், சாலையோரமாக வீழ்ந்து கிடந்த மரத்தில் கொத்தாக முளைத்திருந்த காளான்களைக் கண்டதும் உடனே வண்டியை நிறுத்தினேன். அருகில் சென்று பார்த்தபோது அது இரவில் ஒளிரும் காளான் வகை எனத் தெரிந்தது.

ஆனால், இருட்டில் காளான்கள் ஒளிர்வதற்கான எந்த வித அறிகுறியும் இல்லாததைக் கண்டு ஏமாற்றமாக இருந்தது. அந்த இடத்தில் மேகத்தால் மறைக்கப்பட்ட பிறை நிலவின் மெல்லிய ஒளி வீசியது. காளான்கள் வீசும் ஒளி கும்மிருட்டில்தான் நம் கண்களுக்குப் புலப்படும் என்பதை உணர்ந்து மழைக்காக எடுத்துவந்த குடையைப் பிடித்து நிலவொளியை மறைத்துப் பார்த்தேன். அந்தக் கும்மிருட்டில் அவை மெல்லிய இளம்பச்சை நிற ஒளியை உமிழ்வதைக் கண்டு எனக்கு மயிர்க்கூச்செறிந்தது. இயற்கையின் எண்ணிலடங்கா அற்புதங்களில் ஒளி உமிழும் காளானும் ஒன்று. அதைப் பார்த்தது என் வாழ்வின் மறக்க முடியாத அற்புதங்களில் ஒன்று!

# அதிவேக போக்குவரத்து



சீனா, உற்பத்தித் திறனைப் பெருக்குவதில் சிறப்பான கவனம் செலுத்துகிறது. உற்பத்தித்திறன் அதிகரிக்க வேண்டுமானால் போக்குவரத்து இலகுவாகவும் விரைவாகவும் நடக்க வேண்டும் என்பதில் திட்டமிட்டு முன்னேறி வருகிறது சீனா. மோசமான போக்குவரவு வசதிகளால், நாட்டில் எளிதே விநியோகிக்கப்பட வேண்டிய தானியங்கள் கிடங்குகளில் கிடந்து பாழாகின்றன. அவற்றை எலிகளும் பூச்சிகளும் சாப்பிடுகையில் மனிதர்கள் நாடெங்கும் பட்டினி கிடக்கிறார்கள். மக்களின் பெரும்பகுதி வாழ்நாள் பயணச்சிக்கல்களிலேயே கழிந்துவிடுகின்றது. மனிதஉழைப்பின் முழுமையான பயன் கிடைக்காமல் போகிறது. இதை நிவர்த்திப்பதற்காக பிரமாண்ட வீதிகளையும் அதிவேக ஊர்திகளையும் பெருக்கிக்கொண்டே இருக்கிறது சீன அரசு. அதிவேக ரயில்கள் தேவையற்ற ஆடம்பரம் என்று சில எதிர்ப்புகள் இருந்தபோதும் சீன அரசு உறுதியாக போக்குவரத்து வசதிகளைப் பெருக்குவதிலும் விரைவுபடுத்துவதிலும் சாதனைகளைச் செய்துவருகிறது. விளைவு இன்றைய தலைமுறைகளுக்கு நாசகரமாக இருக்கலாம். நாளைய தலைமுறைகளுக்கு வளர்ந்த நாடொன்றில் வாழ்வதான உணர்வைத் தர வாய்ப்பு இருக்கிறது. இந்த சீனாவின் அதிவேக ரயில் பாதைகளால் நன்மைகள் அதிகம் தீமைகள் குறைவுதான் என்று அமெரிக்க அரசுச் செய்தியறிக்கையை மேற்கோள் காட்டி நியூயோர்க் டைம்ஸ் ஒரு விவரணக் கட்டுரையை வெளியிட்டிருக்கிறது. உற்பத்திக்கான அடிப்படை வசதிகளைத் தொடர்ந்து பெருக்குவது (கட்டுமானங்கள் என்று இதைச் சொல்கிறோம்) அதில் முக்கியமாக போக்குவரத்து இலகுவாகுவதில் விசேட கவனமெடுப்பது, சீனாவை விரைந்த வளர்ச்சி காணவைக்கும் என்கிறது அந்தக் கட்டுரை.



# மீள்குடியேற்றத்திற்கு பின்னரான கல்வி வளர்ச்சி பெருமையளிக்கிறது



மீள்குடியேற்றத்தின் பின் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சி பெருமையளிக்கிறது. கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்காக நாம் பல கோணங்களில் பல வியூகங்களை அமைத்து செயற்பாடுகளை முன்னெடுத்தோம். அதன் விளைவாக இன்று மாவட்டத்தின் கல்வித்தரம் முழு வீச்சுடன் முன்னேறிக் கொண்டிருக்கின்றது.என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவைருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கிளி. விவேகானந்தா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சர்வதேச ஆசிரியர்தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்தகால யுத்தத்தினால் வீழ்ச்சி கண்டிருந்த மாவட்டத்தின் கல்வித்தரத்தினை நாம் மீள் குடியேற்றத்தின் பின்னர் மிகக் கடுமையான உழைப்பின் மூலமும் பல சவால்களுக்கு முகம் கொடுத்தும் உயர்நிலைக்கு கொண்டு வந்துள்ளோம். இதற்காக நாம் திட்டமிட்டுபல வியூகங்களை வகுத்து செயற்பட்டோம். கல்வியை மேம்படுத்துவது தொடர்பில் பல ஆய்வுகளையும் மேற்கொண்டோம். அத்தோடு மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழு ஒன்றினையும் நிறுவி அரசியல் நோக்கங்களுக்கு அப்பால் செயற்பட்டோம். இதேவேளை பெற்றோர்களும் தமது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டில் ஆர்வம் காட்டத் தொடங்கினர். அத்தோடு முற்றாக அழிந்து போன பாடசாலைகளை மீளமைத்தும் பல புதிய பாடசாலைகளை நிறுவியும் எமது கல்வி மேம்பாட்டு செயற்பாட்டை முழு வீச்சுடன் முன்னெடுத்தோம். பௌதீக வளங்களையும் ஆளணி வளங்களையும் இம்மாவட்டத்திற்கு கொண்டு வருவதில் பல சவால்களை எதிர்கொண்டனர். அத்தோடு ஆசிரியர் வளத்தை எமது மாவட்டத்தை நோக்கித் திருப்புவதில் மிகப் பெரும் சாவால்களை எதிர்கொள்ள நேர்ந்தது அதிலும் நாம் துணிச்சலுடன் செயற்பட்டு வெற்றி கண்டோம் என்றார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி கல்வி வலய தமிழ் உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி மருத நாயகம் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் கிருஸ்ணசாமி பாடசாலை முதல்வர் திருமதி மாணிக்கவாசகம் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் உறுப்பினர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# தொழிலாளிகளின் பிரச்சினைக்கு தீர்வுகாண கோரி கையெழுத்து வேட்டை



வரவு செலவு திட்டத்திற்கு முன்னாள் தோட்ட தொழிலாளிகளின் சம்பளப் பிரச்சினை, வீட்டுப் பிரச்சினை, காணிப் பிரச்சினை, சுகாதாரப் பிரச்சினை, மலையகத்தின் படித்தவர்களின் வேலை பிரச்சினை உட்பட்ட பல பிரச் சினைகளுக்கு தீர்வு காணும்படி மனு ஒன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படவுள்ளது.

ஹட்டனில் அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கத்தின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையில் இந்த மனுவில் ஒப்பம் இடும் செயற்திட்டம் நடைபெற்றது.

இந்த மனுவில் தோட்ட தொழிலாளிகளும் ஒப்பம் இட்டனர். இங்கு ஊடகத்திற்கு கருத்து தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரன் இந்த மனுவில் ஒப்பமிடும் செயற்திட்டம் ஹட்டனில் மட்டும்மில்லாமல் இலங்கையில் பல இடங்களில் நடைபெற்றவுள்ளதாக தெரிவித்தார்.

இந்த மனு செயற்திட்டத்தில் நல்ல ஒரு தீர்வை அரசாங்கம் வழங்கத் தவறினால் தொழிற் சங்கம் வீதியில் இறங்கி பல போராட்டங்களை செய்யவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தற்கொலைக்கு முயற்சித்த பெண்ணை காப்பாற்றிய பொலிஸார்

கொழும்பு - புறக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் கடலில் குதித்து தற்கொலை செய்ய முயற்சித்த இளம் பெண் பொலிஸாரால் காப்பாற்றப்பட்டுள்ளார். 19 வயதான இளம் பெண் ஒருவரே இவ்வாறு தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

இவரை பொலிஸார் மூவர் காப்பாற்றியுள்ளனர். குறித்த பெண் சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புறக்கோட்டை பொலிஸார் மேற்கெண்டுள்ளனர்.

# ஆவுஸ்ரேலியா செல்ல முயன்ற 46 பேர் பேருவளையில் கைது

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்குத் தப்பிச் செல்ல முயன்ற 46 பேர் பேருவளை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர். பேருவளை நகர் .சமநல விளையாட்டு மைதானத்திற்கு அருகில் வைத்து நேற்று அதிகாலை 2.40மணி அளவில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 29 ஆண்கள், 07 பெண்கள் மற்றும் 10 சிறுவர்கள் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, வவுனியா, நீர்கொழும்பு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். குறித்த நபர்கள் பயணித்த வான் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# பண்டாரவன்னியனின் நினைவு தினம் வவுனியாவில் கொண்டாட ஏற்பாடு



(வவுனியா)

பண்டாரவன்னியனின் 202ஆவது ஆண்டு நினைவுதினம் எதிர்வரும் 31ஆம் திகதி வவுனியாவில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வவுனியா நகர சபையும் பண்டாரவன்னியன் நற்பணி மன்றமும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் 31ஆம் திகதி காலை 8.30 தொடக்கம் 9.30 மணிவரை வவுனியா மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெறும்.

காலை 9.30 தொடக்கம் பி.ப 1.30 மணிவரை கலை நிகழ்வுகளும் நினைவுப் பேருரைகளும் நகர சபை கலாசார மண்டபத்தில் இடம் பெறும்.

# இராமேஸ்வரம் மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

இராமேஸ்வரம் மீனவர்கள் 20 பேரின் விளக்கமறியல் எதிர்வரும் 21ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ள்து.

குறித்த மீனவர்கள் நேற்று மன்னார் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது விளக்கமறியல் நீடிப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் 20 பேரை இலங்கை கடற்படையினர் கடந்த மாதம் 21ஆம் திகதி கைது செய்தனர். இவர்கள் நீதிமன்ற உத்தரவில் நீர்கொழும்பு சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

ஏற்கனவே விளக்கமறியல் நீட்டிக்கப்பட்ட நிலையில் நேற்று 20 மீனவர்களும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

அவர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து, அவர்கள் நீர்கொழும்பு சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.





பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு பருத்தித்துறை முனையிலிருந்து காலிமுகத்திடல் வரை ஆரம்பமான விழிப்புணர்வூட்டும் வாகனப் பேரணி நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தை சென்றடைந்தது. இந்த வாகனப் பேரணியை வரவேற்கும் நிகழ்வு மட்டக்களப்பு நகரில் உள்ள பொது நூலகக் கட்டடத்திற்கு முன்பாக நடைபெற்றது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் இந்த வரவேற்பு நிகழ்வு நடைபெறுவதை காணலாம்...

# குற்றச் செயல்களை தடுப்பது குறித்து சிவில் பாதுகாப்பு பிரிவுடன் ஆராய்வு

(சண்டிலிப்பாய்)

குற்றச்செயல்கள் இடம்பெறுவதைத் தடுக்க சிவில் பாதுகாப்புக் குழுக்கள் பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறவேண்டும் அதனூடாகவே குற்றச்செயல்களை முற்றாக தடுக்க முடியும் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

சுன்னாகம் பிரதேச சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு சபாபதிப்பிள்ளை வீதியிலுள்ள வாழ்வக கேட்போர் கூடத்தில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துஸ்மந்த தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்ட பொலிஸ் அதிகாரிகள் குற்றச் செயல்கள் தொடர்பாக தெளிவுபடுத்தியதுடன் குற்றச் செயல்களுக்கு துணை போக வேண்டாம் என கேட்டுக் கொண்டனர் சந்தேகத்துக்கிடமானவர்கள் நடமாட்டம் தொடர்பில் விழிப்புடன் இருக்குமாறும் அவ்வாறான நடமாட்டம் இருந்தால் அது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கும் படி கேட்டுக்கொண்டனர்.

பொதுமக்கள் பொலிஸாருடன் இணைந்து செயற்படுவதன் மூலம் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த முடியும் எனவும் கூறப்பட்டது.

அத்துடன் தற்போது அதிகரித்து வருகின்ற சிறுவர் துஷ்பிரயோகம், பருவ வயதினை அடையாத பெண்களுடனான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் குற்றம் புரிவோர் கைது செய்யப்படுவதுடன் கடும் சட்டநடவடிக்கையும் எடுக்கப்படும் என பொலிஸாரால் எச்சரிக்கை வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு குற்றச்செயல்களை தடுப்பது தொடர்பான கையேடும் இலவசமாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெப்றி, உபபொலிஸ் பரிசோதகர் நாணயக்கார, கிராம சேவையாளர்கள், சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (54)

# ஆசிரியர் தின நிகழ்வு

(பருத்தித்துறை)

தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலையின் உலக ஆசிரியர் தினம் நேற்று காலை 9 மணியளவில் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் திருமதி பரமேஸ்வரி ஜெயராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர் பா.ரகுநாதன் கலந்து கொண்டார்.

இதேவேளை இப்பாடசாலையில் 7 பேர் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இதன்படி: இ.ரஜீபன் - 167 புள்ளிகளையும், சி.திருத்தணிகன் -167 புள்ளிகளையும், ம.சிந்துஜன் -163 புள்ளிகளையும் ரா.பிதுஷன் - 160 புள்ளி களையும், க.சிவராஜினி -155 புள்ளிகளையும், சோ. கார்த்திகாயினி - 154 புள்ளிகளையும் பெற்று சித்தியடைந்துள்ளனர். (109)

# பூநகரி கோட்டத்தில் நடைபெற்ற சிறுவர்தினப்போட்டி முடிவுகள்

(முழங்காவில்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி கோட்ட பாடசாலை மாணவர்களிடையே சிறுவர், முதியோர், மாற்றுவலுடையோர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

*கீழ்ப்பிரிவு பேச்சு*

ச.டிலக்கி (கிளி/முழங்காவில் ஆ.வி), து.தர்சிகா(கிளி.பூநகரி ம.வி.)கு. துவாரகா (கிளி/முழங்காவில் ஆ.வி.)

*கட்டுரை*

உ.யதுர்சிகா (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா), ச.சரண்யன் (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா), லக்சனா (கிளி/முழங்காவில் ஆ.வி.)

*மத்தியபிரிவு பேச்சு*

ஞா.அவதானி (கிளி/முக்கொம்பன் அ.த.க.), ச.கீர்த்திகா (கிளி/பூநகரி ம.வி.),மு.கௌசிகா (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா).

*கட்டுரை*

சி.மெல்கி (கிளி/முழங்காவில் ம.வி), வ.பார்த்தீபன் (கிளி/ஞானிமடம் அ.த.க.பா), ர.யதுசன் (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா)

*மேற்பிரிவு பேச்சு*

ம.நேமிகா (கிளி/பூநகரி ம.வி.), ச.சர்மிலா (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா), அன்ரனி யூட் (கிளி.முழங்காவில் ம.வி.).

*கட்டுரை*

க.வேணுகா (கிளி/பூநகரி ம.வி.), செ.நிசாளினி (கிளி/பூநகரி ம.வி.), ர.சாளினி (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா).

*கீழ்ப்பிரிவு பேச்சு*

கி.யாகத் (கிளி/முழங்காவில் ம.வி.), இ.அபிசாயினி (கிளி/பூநகரி விக்கினேஸ்வரா), ச.யதுசன் (கிளி/பரமன்கிராய் அ.த.கா),

*கட்டுரை*

கே.சாளினி (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா), இ.சதுர்யன் (கிளி/சுண்ணாவில் அ.த.க.பா.), ஜெ.ஜெயாயினி (கிளி/முழங்காவில் அ.தா.க.பா).

*மத்தியபிரிவு பேச்சு*

பு.நிறோஜினி (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா), பா.நீலம்பரி (கிளி/பூநகரி ம.வி.), ஜெ.றம்மியா (கிளி/முழங்காவில் ம.வி.)

*கட்டுரை*


ச.சயிஞ்ஜா (கிளி/ஞானிமடம் அ.த.க.பா), ந.அகல்யா (கிளி/முழங்காவில் ம.வி.), பா.சர்மிலா (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா)

*மேற்பிரிவு பேச்சு*

க.பிரவீனா (கிளி/பூநகரி ம.வி.), உ.துவாரகன் (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா) ம.மாறன் (கிளி/முக்கொம்பன் அ.த.க.பா)

*கட்டுரை*

த.ஜெலானி (கிளி/வேரவில் ம.வி.), சனோஜன் (கிளி/முழங்காவில் ம.வி.), ம.மேரிஜெஸ்ரினா (கிளி/ பூநகரி ம.வி.) (தொடரும்...) (112)



நாவற்குழி புகையிரத பால கட்டுமானப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. "சான் பிலிங்" நிறுவனத்தினால் இக்கட்டுமானப் பணிகள் பாரிய தொழில்நுட்ப இயந்திரங்கள் மூலம் இடம்பெற்று வருவதைக் காணலாம். (படங்கள்: ஆர் இராஜகுமார்)

# பதிவிறக்கப் பெட்டகம்

புதுவோன் பின்னைப் போனது நெஞ்சம்
இதுவோ அன்னாய் காமத்து இயற்கை?
– சீத்தலைச் சாத்தனார்

குனிசிலைப் புருவ, வாட்கண்
கொழயிடை, கரிய கூந்தல்,
கனியிதழச் சிறுவெண்மூரல்
காரிகை நலத்தை நாடி
நினைவும் நித்திரையும் போக்கி
நீடொடு குழியினார்ந்த
நனிமதக் களிறு போன்று
வேட்கையி னடுங்கினாரால்
– உமறுப் புலவர்

அண்ணல் அவன்
தன் மருங்கே
அளவிறந்த காதலினால்
உண்ணிறையும்
குணம் நான்கும்
ஒருபுடைச் சாய்ந்தன.
– சேக்கிழார்

கண்ணுக்கின்பம் கண்டால் தீரும்
காதுக்கின்பம் கேட்டால் தீரும்
வாய்க்கின்பம் தின்றால் தீரும்
உடலுக்கின்பம் காமம் ஒன்றே
அத்தனை சுலபமாய்
அடைவதற் கில்லை
இன்னொரு உடலும்
வேண்டுவதாலே
இன்னொரு மனமும்
இசைதல் வேண்டும்
– நாமக்கல் கவிஞர்

யாரும் இல்லை,
தானே கள்வன்!
தான்அது பொய்ப்பின்
யான்எவன் செய்கோ?
தினைத்தாள் அன்ன
சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு,
தான் மணந்த ஞான்றே.
– கபிலர்

கொய்யுமலர்
வண்டெழுந்து
கோகனப்
பூவெனச் செங்
கைம்மலரைச் சுற்ற...
–கூளப்பநாயக்கன் காதல்

நதியினும் குளத்தும் பூவா
நளினங்கள் குவளையோடு
மதிநுதல் வல்லி பூப்ப
நோக்கிய மழலைத் தும்பி
அதிசயம் எய்திப் புக்கு
வீழ்ந்தன அலைக்கப் போகா
புதியன கண்ட போழ்து
விடுவரோ புதுமை பார்ப்பார்.
– கம்பன்

பொன் வண்டொன்று மலரென்று முகத்தோடு மோத
நான் வளை கொண்ட கையாலே மெதுவாக மூட
என் கருங்கூந்தல் கலைந்தோழ மேகங்களாக
நான் பயந்தோழ வந்தேன் உன்னிடம் உண்மை கூற...
– கண்ணதாசன்

போர் வாள்கள் அத்தனையும்
தயாரான நிலையில் ஒரு
மாமன்னனின் கட்டளை போல்
அவள் முகம் பளிச்சென்றிருந்தது.
– ஹிலாரி பெல்லாக்

இவள்
ஆணை வென்று
வீழ்த்துகின்ற
சேனை கொண்ட
காதல் தேவன் கோட்டை
– நா.காமராசன்

போகமாய் விளைந்தோய் நீ
புவனமாய்ப் பொலிந்தோய் நீ
ஏகமாய் இருந்தோய் நீ
எண்ணிறந்து நின்றோய் ந
வானும் நீ – நிலனும் நீ
மதியும் நீ – கதிரும் நீ
ஊனும் நீ – உயிரும் நீ
உளதும் நீ – இலதும் நீ
– மதுரைக் கலம்பகம்

என் காதலில்
உனக்கு எவ்விதத்
தொல்லையும்
உண்டாகாத வண்ணம்
உன்னை நான்
அப்பழக் காதலிப்பேன்
இணைபிரியாது எந்நேரமும்
உன்னுடன் ஒட்டிக்கொண்டு
ஓர் இதயம் இயங்குகிறது
என்பதைத் தவிர.
– ரொஸ்ரோயெவ்ஸ்கி

உன்னைச் சூழ்ந்திருப்பவை
உன்னைத் தொடுபவை
உன்னால் தொடப்படுபவை
உனக்கு மகிழ்ச்சி தருபவை
உன்னைச்
சிந்திக்க வைப்பவை
எல்லாம் நலம் பெறுவதாகுக.
– பவுஸ்தோல்ஸ்கி

தண்ணிலவு தேனிறைக்க
தாழைமடல் நீர் தெளிக்க
கன்னிமகள் நடைபயின்று
வந்தாள்... இளம் காதலனை
கண்டு நாணி நின்றாள்
– மாயவநாதன்

தனிமையின் குளிர்வாடை
என்னை ஆரத்
தழுவியபோது
உன்னைத் தேடினேன்
ஒளிவருடங்களுக்கு
அப்பால் நின்று நீ
கண் சிமிட்டினாய்
நானோ உன் நினைவைப்
போர்த்திக்கொண்டு
உறங்குகிறேன்.
– வேதாந்தி

நீ எவ்வளவுதான் சிரித்தாலும்
உன் இதழ்களின் புன்னகை
குறையவா போகிறது?
– வயலார் ராமவர்மா

பார்த்தால் பசி தீரும்
உன் பங்கஜ வதன
செங்கனி வாய்ச்சிரிப்பை
பார்த்தால் பசி தீரும்
– பாபநாசம் சிவன்




# முட்டாளும் புத்திசாலியும்

மழை! ஓயாத மழை! ஏரி நிறைந்து வழியும் அளவுக்கு மழை. அந்த ஏரி நீர் குளிர்ச்சி அடைந்து விட்டது. அந்தக் குளிரைத் தாங்க முடியாத ஒரு தவளை, மழை ஓய்ந்ததும் சற்று தூரத்திலுள்ள ஒரு கிணற்றுக்கு வந்தது. கிணற்று நீர் வெது வெதுப்பாக இருக்குமே என்பதால் கிணற்றுக்குள் குதித்தது.

அந்தக் கிணற்றில் பல காலமாக வாழ்ந்து வந்த ஒரு தவளை இந்தப் புதிய தவளையை வரவேற்றது. "நான் வெகுநாட்களாகப் பேச்சுத் துணைக்குக்கூட ஆளில்லாமல் தவித்துக் கொண்டிருந்தேன். உன்னைக் கண்டதும் எனக்கு மகிழ்ச்சி" எனக் கூறிப் பொந்தில் வைத்திருந்த உணவு வகைகளைப் புதிய தவளைக்கு கொடுத்தது.

இரண்டு தவளைகளும் பேசிக் கொண்டிருந்தன. கிணற்றிலிருந்த மற்ற தவளைகளுக்குப் புதிய தவளை வந்தது பிடிக்கவில்லை. "இங்கே கிடைக்கும் உணவு நமக்கே போதவில்லை. இதில் புதிய விருந்தாளி வேறு" எனக் கவலைப்பட்டன. புதிய விருந்தாளியை எப்படியும் துரத்திவிட முடிவு செய்தன.

இரண்டு தவளைகளும் பேசிக்கொண்டிருப்பதை அருகே சென்று வேடிக்கை பார்த்தன. அப்போது அக்கிணற்றுத் தவளை ஏரித் தவளையிடம், "நண்பனே! நீ இத்தனை நாளும் எங்கே தங்கியிருந்தாய்?" எனக் கேட்டது.

"நான் ஏரியில் தங்கி இருந்தேன்" என்றது ஏரித் தவளை.

"ஏரியா? அப்படியென்றால் என்ன?" எனக் கேட்டது கிணற்றுத்தவளை.

"இந்தக் கிணற்றைப் போன்ற பெரிய நீர் நிலை. அதில் மீன், ஆமை, முதலை ஆகியவை உண்டு" என்றது ஏரித்தவளை.

"இந்தக் கிணற்றைப் போன்றதில் அவ்வளவு உயிரினங்களா?" என்று கேட்டது கிணற்றுத் தவளை.

"இந்தக் கிணற்றைவிட மிகப்பெரியது ஏரி" என்றது ஏரித்தவளை.

கிணற்றுத்தவளை நம்பவில்லை. "நண்பா நீ பொய் சொல்லுகிறாய். இந்தக் கிணற்றைவிட பெரிய நீர் நிலை உலகத்தில் இருக்க முடியாது" என்றது.

ஏரித்தவளை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், கிணற்றுத் தவளை நம்பவில்லை. கூட இருந்த மற்றத் தவளைகளும் நம்பவில்லை.

எல்லாத் தவளைகளும் ஏரித் தவளையைப் பார்த்து "நீ பொய்யன், புரட்டன், உன்னை நம்பி இங்கே வைத்திருந்தால் ஆபத்து" என்று கூறி ஏரித்தவளையைத் தாக்க முயன்றன.

அப்போது, கிணற்றிலிருந்து நீர் எடுக்க ஒரு பெண் தோண்டியை இறக்கிய போது, அதனுள் தாவிச் சென்று குதித்த ஏரித் தவளை, தோண்டித் தண்ணீருடன் மேலே சென்றது. தாவிக் குதித்து ஏரி நோக்கிச் சென்றது.

முட்டாள்களிடம் வாதாடுவதை விட அவர்களிடமிருந்து ஒதுங்கிச் செல்வதே சிறந்தது.

# ஆன்மீக சிந்தனைக்கு!.....



* முன்னேறிக் கொண்டே இருங்கள். முறையற்ற ஒரு செயலைச் செய்து விட்டதாகவே நினைத்தாலும் திருப்பிப் பார்க்காதீர்கள். தவறு நடந்திருந்தால் திருத் திக் கொள்ளுங்கள்.

* மற்றவர்களுக்கு நன்மை செய்வது தான் தர்மம். மற்றவர்களுக்குத் தீமை செய்வது பாவம்.

* உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய மூன்றையும் கொண்ட மனிதனை நசுக்கக் கூடிய ஆற்றல் யாருக்கும் கிடையாது. இந்த பிரபஞ்சமே எதிர்த்து நின்றாலும் அவனால் சாதிக்க முடியும்.

## அறிந்து கொள்ளுங்கள்...

1. அறம் செய விரும்பு
நீ தருமத்தை (கடமையை)ச் செய்ய ஆவல் கொள்.
2. ஆறுவது சினம்
கோபம் தணிக்கப்பட வேண்டியதாகும்.
3. இயல்வது கரவேல
உன்னால் கொடுக்கக்கூடிய பொருளை யாசிப்பவர்க்கு ஒளிக்காது கொடு.
4. இயல்வது கரவேல்
உன்னால் கொடுக்கக்கூடிய பொருளை யாசிப்பவர்க்கு ஒளிக்காது கொடு.
5. ஈவது விலக்கேல்
ஒருவர், மற்றவர்க்கு கொடுப்பதை, வேண்டாமென்று தடுக்காதே
6. உடையது விளம்பேல்
உன்னிடத்திலுள்ள பொருளை அல்லது இரகசியங்களை பிறர் அறியுமாறு சொல்லாதே.
6. ஊக்கமது கைவிடேல்
எப்போதும் முயற்சியைக் கைவிடக் கூடாது.
7. எண் எழுத்து இகழேல்
எண்ணும் எழுத்தும் மக்களுக்கு இன்றியமையாதன் ஆகவே, அவற்றை வீணென்று இகழ்ந்து கற்காமல் விட்டு விடாதே.
8. ஏற்பது இகழ்ச்சி
இரந்து வாழ்வது இழிவானது. அதனால் யாசிக்கக்கூடாது.
9. ஐயம் இட்டு உண்
யாசிப்பவர்கட்கு கொடுத்து பிறகு உண்ண வேண்டும்.
10. ஒப்புரவு ஒழுகு
உலக நடையை அறிந்துகொண்டு, அத்தோடு பொருந்துமாறு நடந்துகொள்.





## போறறிப பாடும போது "ஓம" எனபது ஏன?

108 போற்றி, 1008 போற்றி சொல்லும்போது, சுவாமியின் பெயரின் முன்னால் "ஓம்" சேர்க்கிறோம். முடியும் இடத்தில் "போற்றி" என்கிறோம். உதாரணத்துக்கு "ஓம் முருகா போற்றி". "ஓம்" என்னும் மந்திரத்திற்கு பல விளக்கங்கள் உள்ளன. அதில் ஒன்று :

"ஆதிபகவானாகிய இறைவனே! ஜீவனாகிய என்னை சேர்த்துக்கொள், "என்பது இதன் பொருள். ஒவ்வொரு தடவையும் "ஓம்" என்று சொன்ன பிறகு, விஷ்ணுவே, சிவனே, சக்தியே, விநாயகா, ஐயப்பா, முருகா என்றெல்லாம் அவரவர் இஷ்ட தெய்வத்தை அழைக்கிறோம். அப்படி சொல்லும்போது, அந்தந்த தெய்வங்களிடம் "என்னை உன்னோடு சேர்த்துக்கொள்" என்று பொருள். தெரிந்தோ, தெரியாமலோ கெஞ்சுகிறோம். காலம் வரும்போது, இந்த மந்திரம் சொன்னதற்குரிய பலன் உறுதியாக கிடைக்கும். பிறப்பற்ற நிலையும் பரமாந்தமும் ஏற்படும்.

## நம் உடலைப் பற்றிய வியத்தகு உண்மைகள்



♥ குழந்தை பிறக்கும்பொழுது அதன் உடலில் 300 எலும்புகள் இருக்கும். ஆனால் வளர்ந்து பெரியவனானதும் மொத்தம் 206 எலும்புகளே இருக்கும். நமது உடலில் உறுதியான எலும்பு தொடை எலும்பு, அது கொங்கிறீட்டை விட வலிமையானது.

♥ நமது உடல் எடையில் 7 வீதம் இரத் தம் ஆகும். தினத்தோறும் 450 கேலன் இரத்தம் சிறுநீரகத்தால் சுத்தப் படுத்தப்படுகிறது.

♥ human body 370 பெண்களுக்கு சராசரியாக 4.5 லீற்றர் இரத்தம், ஆண்களுக்கு சராசரியாக 5.6 லிற்றர் இரத்தம் இருக்கும். நமது உடலில் உள்ள இரத்த சிவப்பணுக்களின் ஆயுட்காலம் 120 நாட்கள், அதுபோல் ஒவ்வொரு நொடியில் சுமார் இரண்டு மில்லியன் இரத்த சிவப்பணுக்கள் நமது உடலில் இறக்கின்றன.

♥ நமது உடலில் உள்ள இரத்தக் குழாய்களின் நீளம் சுமார் 600,000 மைல்கள். அதாவது இந்த தொலைவில் நாம் இரண்டு முறை உலகத்தை சுற்றி வந்துவிடலாம்.

♥ நமது கண்களின் எடை சராசரியாக 28 கிராம்.
நமது கண்களுக்கு 500 விதமான ஒளிகளை பிரித்தறியும் சக்தியுண்டு.
நமது கண்களில் உள்ள கருவிழி மட்டும் தான் இரத்த நாளம் இல்லாத உயிருள்ள திசு.

♥ முதல் 8 வாரம் வரை குழந்தைகளின் கண்களில் கண்ணீர் வராது.
மனித இதயம் சராசரியாக ஒரு வருடத்திற்கு 35 மில்லியன் முறை துடிக்கிறது.

♥ ஒரு சராசரி வாழ்வில் இதயமானது 2.5 பில்லியன் முறை துடித்து 1 மில்லியன் பரல் இரத்தத்தை இரத்த குழாயில் செலுத்துகிறது. இதயத்தில் உள்ள இரத்த அழுத்தமானது, இரத்தத்தை 30 அடிவரை பீய்ச்சி அடிக்கும் சக்தி 'கொண்டது.

♥ மனித மூளையில் சுமார் 100,000,000,000 (100 பில்லியன்) நரம்பு செல்கள் உள்ளன.

♥ ஒரு மனிதன் 35 வயது அடைந்தது முதல் மூளையில் தினமும் 7000 நரம்பு செல்கள் இறக்கின்றன.

♥ நாம் சுவாசிக்கும் மொத்த ஒக்சிசனில் 20 வீதம் மூளைக்கு செல்கிறது.

♥ நமது மூளை 80 வீதம் நீரால் ஆனது.
நமது மூளையின் செயல்திறன் பகலைவிட இரவில் அதிகமாக இருக்கும்.
நமது உடலில் வேகமாக வளரக்கூடிய திசு முடிதான்.


♥ மனித தலையில் சராசரியாக 100,000 தலைமுடிகள் இருக்கும்.
பெண்கள் கருத்தரிக்கும் பொழுது, கர்ப்பப்பையானது, அதன் சாதாரண நிலையை விட 500 முறை விரிவடைகிறது.
மனித உடலில் உள்ள கல்லீரலானது 500 விதமான வேலைகளை செய்கிறது.

## அறிந்து கொள்ளுங்கள்...

ஷேக்ஸ்பியர்: பிறந்த நாளும், இறந்த நாளும் ஒரே திகதியில் தான்.
23-04-1564 இறந்தது 23-04-1616.

கிரேக்க மெகஸ்தனிஸ்:
சிறந்த பேச்சாளராக இருந்து சரித்திரத்தில் ஓர் உன்னதமான இடம் பெற்றாலும் , இளம் வயதில் அவருக்குத் திக்குவாய் ! இழுத்து, இழுத்துத் தடுமாறித்தான் பேச முடியும். !

லியோ டால்ஸ்டாய் பிறந்த வருடம் :- 1828.
எகிப்து நாட்டின் கடைசி மன்னன் :-- பஷருக்.
இங்கிலாந்தின் சரித்திரத்தை இயற்றியவர் :- மெக்காலே
ஏசுவின் முதல் சீடர் :- செயிண்ட் ஆண்ட்ரு.
முதன் முதலில் உலகப்படம் வரைந்தவர் :- தொலமி.
நெல்சன் நெப்போலியனை இறுதியாக :- வாட்டர லூபோரில் தோற்கடித்தார்.
வெடி மருந்தைக் கண்டுபிடித்தவர் :- ஆல்பிரட் நோபல்.
முதன் முதலில் கட்டப்பட்டதும்,
மிகப் பழமையானதுமான கலங்கரை விளக்கம் :- எகிப்தில் உள்ளது.
காலரா என்ற கொள்ளை நோய்க்கான
கிருமியைக் கண்டவர் :- ஜேர்மானியர் ராபர்ட் கோச்
இயேசுவைக் காட்டிக் கொடுத்த சீடர் :- ஜூடாஸ் இஸ்காரியட்.



தன்னம்பிக்கை
இல்லாமல்
பயத்துடன்
வாழும்
வாழ்க்கையும்,
உயிருடன்
கல்லறையில்
உறங்குவதும்,
ஒன்றே!!!

# க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2013

# கல்வி முரசு

விஞ்ஞானம்

பகுதி - I - II

2 மணி



## பகுதி II

01. கலக்கொள்கையில் உள்ளடக்கப்படாத கூற்று பின்வருவனவற்றுள் எது?
1. அங்கிகள் யாவும் ஒரு கலத்தை அல்லது பல கலங்களை கொண்டவை.
2. அங்கிகளின் அடிப்படை கட்டமைப்புக்குரிய அலகு கலமாகும்.
3. கலங்கள் யாவும் நுண்ணியவை.
4. அங்கிகளின் அடிப்படை தொழிற்பாட்டு அலகு கலமாகும்.

02. தாவர, விலங்குக் கலங்களுக்கு பொதுவானது பின்வருவனவற்றுள் எது?
1. பச்சையயுருமணி  2. புன்மையத்தி
3. இழைமணி  4. கலச்சுவர்

03. ஒருவித்திலை தாவர வகுப்பின் ஒரு சிறப்பியல்பாக அமையாதது பின்வருவனவற்றுள் எது?
1. இடம்மாறிப்பிறந்த வேர்கள் இருத்தல்
2. இலைகளில் சமாந்திர நரம்பமைப்பு இருத்தல்
3. பூவின் பகுதிகள் மூன்றின் மடங்குகளாக இருத்தல்
4. தண்டில் மையவிழையம் இருத்தல்.

04. மாசடைந்த வளியை உட்சுவாசிக்கும் போது ஏற்படத்தக்க நோய் நிலைமை,
1. ஈரலழற்சி  2. சிபிலிசு
3. கொலரா  4. சுவாசப்பை அழற்சி

05. மனிதனின் நடுச்செவியை நிரப்புவது,
1. நெய்ச் சுரப்பு  2. வளி
3. நிணநீர்  4. குருதி

06. நரம்புத்தொகுதி தொடர்பான தவறான கூற்றை தெரிவு செய்க,
1. நரம்புத்தொகுதியின் கட்டமைப்பு அலகு நரம்புக் கலமாகும்.
2. முள்ளந்தண்டு விலங்குகளின் நரம்புத்தொகுதியின் தொழிற்பாட்டு அலகு தெறிவில் ஆகும்.
3. இதன் தெறிவில் இயக்கநரம்புக்கலம், புலன்நரம்புக்கலம் என்பனவற்றை மாத்திரம் கொண்டது.
4. நரம்புத்தொகுதியின் இயக்க நரம்புக்கலம் பல உட்காவு நரம்புமுளைகளை கொண்டது.

07. மனிதனின் உடலில் மூன்று பிரதான தசைகளாகிய வன்கூட்டுத்தசை, மழமழப்பான தசை, இதயத்தசை என்பன பற்றிய சரியான கூற்று,
1. வன்கூட்டுத்தசைகள் ஒருபோதும் இளைப்படைவதில்லை.
2. இதயத்தசை, மழமழப்பான தசைகள் இச்சையின்றிய தொழிற்பாடு உடையன.
3. அவை யாவும் வரிகள் கொண்டவை.
4. இதயதசை, வன்கூட்டு தசைகள் பல கருக்களை கொண்டவை.

08. பின்வரும் சுவைகளுள் எதனை மனித நாக்கினால் கண்டுபிடிக்க முடியாது?
1. கசப்பு  2. (பாண்டல்)
3. இனிப்பு  4. புளிப்பு

09. அவரை இனத் தாவர வேர் முடிச்சுக்களில் உள்ள பற்றீரியாக்களுக்கும் தாவரத்திற்கும் இடையிலான தொடர்பு,
1. ஒன்றிய வாழ்வு  2. ஒட்டுண்ணி
3. மேலொட்டி  4. ஒரட்டில் உண்னல்.

10. மனிதக் கண் தொடர்பான பின்வருவனவற்றுள் தவறானது,
1. அதன் விழித்திரையில் ஒளியை உணரக்கூடிய கலங்கள் காணப்படும்.
2. கணணின் பிசிர்த்தசை மூலம் கண்வில்லையின் குவியத்தூரம் மாற்றப்படுகிறது.
3. கதிராளியின் மூலம் கண்ணினுள் உட்புகும் ஒளியின் செறிவு கட்டுப்படுத்தப்படும்.
4. கண் இரு படைகளைக் கொண்டது.

11. ஒளித்தொகுப்புடன் தொடர்புபட்ட பின்வரும் கூற்றுக்களுள் பிழையானது எது?
1. ஒளி இருக்கும் போது மாத்திரம் ஒளித்தொகுப்பு நடைபெறும்.
2. ஒளித்தொகுப்பின் விளைபொருளாக ஒட்சிசனும் ,குளுக்கோசும் உற்பத்தி செய்யப்படுகின்றன.
3. பச்சைத் தாவரங்களிலும், அல்காக்களிலும் மாத்திரமே ஒளித்தொகுப்பு நடைபெறும்.
4. ஒளித்தொகுப்பானது ஒரு உட்சேபத் தாக்கமாகும்.

12. மனிதனின் குருதியினம் O எனின், அவருக்கு பின்வரும் எந்தக் குருதியினத் தையுடைய வழங்கியின் குருதியைப் பாய்ச்ச முடியும்?
1. O  2. B  3. AB  4. A

13. மனித உடலில் உள்ள நொதியங்களுள் பெரும்பாலானவை நடுநிலை pH பெறுமானத்திலேயே தொழிற்படுகின்றன. கீழ்க்காணும் நொதியங்களுள் எது இக் கூற்றுக்கு விலக்காகும்?
1. பெப்சின்  2. அமிலேசு  3. திருப்சின்  4. இலிப்பேசு

14. முறையே ஒரு அமிலம், ஓர் உப்பு, ஒரு மூலம் ஆகியன முறையே இடம்பெறும் விடைத்தொகுதி?
1. $HNO_3$, $CuSO_4$, NaOH  2. $CuSO_4$, $HNO_3$, $Ca(HCO_3)_2$
3. NaCl , HCl, NaOH  4. $H_2SO_4$, $CaSO_4$, NaOH

15. பலாப்பாலினை நீரினால் கழுவி அகற்ற முடியாது. ஆனால் தேங்காய்யெண்ணை எனும் கரைப்பானை பயன்படுத்தி அதனை எளிதாக அகற்றலாம். இதற்கேற்ப அவற்றில் சம முனைவியல்புகளைக் கொண்டுள்ளது என முடிவு செய்யலாம்?
1. நீரும் , பலாப்பால்  2. பலாப்பாலும் தேங்காய்யெண்ணையும்
3. நீரும், தேங்காய்யெண்ணையும் 4. நீர், பலாப்பால், தேங்காய்யெண்ணை என்பன.

16. லெமன்-நீர்க்கரைசல் ஒன்றின் அமைப்பு 5.0% V/V என குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் கருதப்படுவது,
1. நீரின் 10 $cm^3$ இல் 5 $cm^3$ லெமன் உள்ளது என்பதாகும்.
2. 95$cm^3$ நீரில் 5$cm^3$ லெமன் உள்ளது என்பதாகும்.
3. 10 $cm^3$ நீர்க்கரைசலில் 0.5$cm^3$ லெமன் உள்ளது என்பதாகும்.
4. 95 $cm^3$ நீர்க்கரைசலில் 5$cm^3$ லெமன் உள்ளது என்பதாகும்,

17. சில உலோகங்களை பிரித்தெடுக்க பயன்படும் முறைகள் பற்றி கருதுக.
A. உருகிய குளோரைட்டை மின் பகுப்பு செய்தல்.
B. உலோக ஒட்சைட்டை காபனுடன் வன்மையாக ஒட்சியேற்றுதல்.
C. தாதுவை வளியில் வறுத்தல்.
D. உலோக சல்பைட்டை வளியில் வறுத்தல்.
இம் முறைகளில் Na பிரித்தெடுப்புக்கு பொருத்தமானது,
1. A  2. B  3. C  4. D

18. மாறா அமுக்கத்தில்(P) உள்ள மாறா வாயுத்திணிவின் வெப்பநிலைக்கும்(T), கனவளவுக்கும்(V) இடையிலான தொடர்புகளில் சரியானது,
1. $V \alpha P$  2. $V \alpha P$
3. $V_1T_1 = V_1T_2$  4. $V \alpha 1/T$

19. சோடியம் பிரித்தெடுப்பில் பக்க விளைவாக பெறப்படும் வாயுவின் பயன்பாடாக அமையாதது,
1. வெளிற்றும் தூள் தயாரிப்பு
2. தொற்று நீக்கியாக பயன்படும்.
3. சில பல்பகுதியங்கள் தயாரிப்பு
4. மின்குமிழ்களில் நிரப்புவதற்கு பயன்படும்,

20. காபனின் சமதானி அணுவில் உள்ள புரோத்திரன்,நியூத்திரன், இலத்திரன் ஆகியவற்றின் எண்ணிக்கை முறையே,
1. 6, 6, 7  2. 6, 7, 6
3. 7, 6, 6  4. 7, 7, 6


21. ஒரு மூவலுவளவுள்ள உலோகம் A ஆனது,ஓர் இரு வலுவளவு அல்லுலோகம் B யுடன் உண்டாக்கும் சேர்வையின் சார்மூலக்கூற்று திணிவை காண்க? (மூலக்கூற்றுத் திணிவுகள் முறையே A=40, B= 12).
1. 144  2. 132  3. 116  4. 52

22. பின்வரும் கூற்றுக்களிடையே பொய்யான கூற்றை தெரிந்தெடுக்க,
1. நீரில் கரையத்தக்க, அயன்சேர்வைகளும், கரையாத அயன்சேர்வைகளும் மண்ணில் உள்ளன.
2. உலோகங்கள் மட்டுமே மின்னைக் கடத்தும்.
3. மண்ணில் உள்ள பல்வேறு உப்புக்கள் கரைந்த கரைசலாக மண்ணீரை கருதலாம்.
4. ஆவர்த்தன அட்டவனையில் ஐதரசன் தவிர்ந்த கூட்டம் 1 மூலகங்கள் யாவும் உலோகங்களாகும்.

23. மின்வழங்கி கம்பியாக பயன்படுத்தப்படும் உலோகத்தில் கட்டாயம் இருக்கவேண்டிய இயல்பு,
1. தடைத்திறன் குறைவாக இருத்தல்
2. இலேசானதாக இருத்தல்
3. வளியில் அரிப்புக்கு உட்படாமல் இருத்தல்.

24. வாகன கதிர்த்திகளை குளிர்வடையச் செய்வதற்கு நீரை அதிகளவு பயன்படுத்தக் காரணமாக அமைவது,
1. நீர் மிக எளிதாக கிடைக்கின்றமை.
2. நீரின் தன்வெப்ப கொள்ளளவு குறைவு என்பதனால், அதிக வெப்பத்தை தாங்கிக்கொண்டு - ஆவியாகாமல் இருத்தல்.
3. நீரின் தன்வெப்ப கொள்ளளவு அதிகம் என்பதனால், அதிக வெப்பத்தை தாங்கிக்கொண்டு ஆவியாகாமல் இருத்தல்.
4. நீரின் தன்வெப்ப கொள்ளளவு குறைவு என்பதனாலும், அது இலகுவாக கிடைக்கின்றமையாலும்.

25. முழு அலைச் சீராக்கத்தின்போது 4 இருவாயிகளைப் பயன்படுத்தும் சீராக்கல் பாலத்தின் சரியான இணைப்பை காட்டுவது,




1)  2)  3)  4)

26. குழிவாடிகளில் உண்டாகும் விம்பங்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் பொய்யானது,
1. குழிவாடியில் எப்போதும் உருச்சிறுத்த விம்பங்களையே அவதானிக்கலாம்.
2. குழிவாடிகளில் சில வேளைகளில் மெய்விம்பங்களை அவதானிக்கலாம்.
3. குழிவாடியில் சில சந்தர்பங்களில் உருப்பெருத்த விம்பங்கள் கிடைக்கும்.
4. குழிவாடிகளில் சிலவேளைகளில் மெய்விம்பங்களும், சில வேளைகளில் மாய விம்பங்களும் கிடைக்கும்.

## பகுதி II

01)




i) இங்கு மின்கலங்கள் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது?

.............................................................................

ii) மின்சுற்றில் மின்குமிழ்களின் சமவலு தடை யாது?

.............................................................................

iii) அதிக பிரகாசத்துடன் ஒளிரும் மின்குமிழ் எது?

.............................................................................

iv) உமக்கு அம்பியர்மானி, வோல்ற்மானி என்பன தரப்பட்டால் அவற்றை எங்கு இணைப்பீர்?
PQ இற்கு இடையில்
QR இற்கு இடையில்


v) மின்சுற்றில் பாயும் மின்னோட்டம் யாது?

.............................................................................


vi) இங்கு மேலே நீர் பயன்படுத்திய விதியை தருக.

.............................................................................

vii) மேற்படி விதியைப் பரிசோதிக்க அமைத்த பரிசோதனை அமைப்பு ஒன்றின் வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது.
மின்குமிழுக்கிடையிலான அழுத்த வேறுபாடு அளக்கப்பட்டது.
இங்கு XY, PQ ஆகியவற்றுக்கிடையில் எவ் மின்சாதனங்களை இணைப்பீர் எனக் குறித்துக் காட்டுக. அதிலே + ,m - முடிவிடங்களை குறித்துக் காட்டுக.




viii) இப் பரிசோதனையின் போது பெறப்பட்ட வாசிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளது. தரப்பட்ட அச்சுக்களுக்கிடையே பெறுமானங்களைக் குறித்து வரைபு வரைக.



| XY ற்கு இடையிலுள்ள உபகரண வாசிப்பு | PQ ற்கு இடையிலுள்ள உபகரண வாசிப்பு |
|---|---|
| 0.25 | 1.5 |
| 0.50 | 3.0 |
| 0.75 | 4.5 |
| 1.00 | 6.0 |

ix) தரப்பட்ட மின்குமிழ் ஒன்றின் திறன் 40% ஆகும். இதனூடு 2 A மின்னோட்டம் 230 V அழுத்த வேறுபாட்டில் 5 நிமிடம் செல்லும்போது வெப்பமாக இழக்கப்பட்ட சக்தி யாது?

.............................................................................

.............................................................................

x) புவிக்கம்பி ஒன்று 7/0.67 எனக் குறிக்கப்படும் இதன் கருத்து யாது?

.............................................................................


.............................................................................

.............................................................................

.............................................................................

## கட்டுரை வினாக்கள் - B

01) A_ இரு வித்திலைத் தாவர இலையின் குறுக்குவெட்டு முகம் உருவில் தரப்பட்டுள்ளது.



i) உருவில் A,B,C,D என்பவற்றைப் பெயரிடுக


b) சூரிய ஒளி உள்ளபோது தாவர இலையில் ஒட்சிசன் உற்பத்தி செய்யப்படுகின்றது. இச் செயன்முறை எவ்வாறு அழைக்கப்படும்.

ii) a) இலை மெல்லிய தட்டையான அமைப்பாகும். இவ்வாறான அமைப்பை இலை கொண்டிருப்பதனால் தாவர தொழிற்பாடு தொடர்பான அனுகூலங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

b) கலப்படை C,D ற்கு இடையிலான வேறுபாடு ஒன்று தருக.

c) தாவரத்திற்குத் தேவையான நீர் கனியுப்பை உள்ளெடுக்க வேர்களில் காணப்படும் விசேட கட்டமைப்பைப் பெயரிடுக.

iii) தாவரங்களில் ஆவியுயிர்ப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றிய பரிசோதனையில் உறிஞ்சல் மானி எனும் உபகரணம் பயன்படுத்தப்படுகின்றது. உறிஞ்சல் மானியைப் பயன்படுத்தி தயார் செய்த உபகரண ஒழுங்கமைப்பு உருவில் காணப்படுகின்றது.



a) ஒரு தாவரத்தின் கிளையை வெட்டி இவ் உபகரணத்தில் பொருத்தும் போது கவனம் செலுத்த வேண்டிய 2 விடயங்களை எழுதுக.

b) வளிக்குமிழானது A யிலிருந்து B ற்குச் செல்ல 3 நிமிடநேரம் எடுத்தது. AB ற்கு இடையிலான தூரம் 9 cm எனின் வளிக்குமிழ் அசைந்த கதியை சென்ரி மீற்றர் / நிமிடத்தில் காண்க.


c) ஆவியுயிர்ப்பை தடுக்க அலரித் தாவரத்தில் காணப்படும் இசைவாக்கம் எது?

b)

i) a) மனித சுவாசபொறிமுறையை விளக்க அமைப்புக் கீழே உள்ளது. இவை எச்சுவாச செயன்முறையுடன் தொடர்புடையன?

b) மேற்படி சுவாச செயன்முறைகளில் உயிர்ப்பான செயன்முறை எது என குறிப்பிடுக.

c) மனிதனிலே சுவாச புற்றுநோய் ஏற்படுத்தும் பிரதான காரணி யாது?



02) ஓட்டப்போட்டியில் பங்குகொள்ளும்போது இதயத்துடிப்பு அதிகரித்து கலங்களுக்குள் செல்லும் குளுக்கோசு, ஒட்சிசன் என்பவை அதிகரிக்கின்றன.

1) கலங்களுக்கு குளுக்கோசு, ஒட்சிசன் வழங்களை மேற்கொள்ள உதவும் உடலில் உள்ள மிகக் கிட்டிய தொடர்புகொண்டு செயற்படும் இரண்டு தொகுதி களைக் குறிப்பிடுக.


2) யாதேனும் தொழிலை மேற்கொள்ள உடலிலுள்ள அவயங்களும் தொகுதிகளும் கிட்டிய தொடர்புடன் செயற்படுவதை எவ்வாறு அழைப்பர்.

3) ஓட்டப்போட்டியில் சுவாசவேகம், இதயத்துடிப்பு அதிகரிப்பதனால் கிடைக்கும் நன்மை யாது?

4) அ) கலத்தினுள் குளுக்கோசு, ஒட்சிசன் எச்செயன்முறை மூலம் உட்செல்கின்றன.
ஆ) கலச்சுவாசத்தின் போது நடைபெறும் இரசாயனச் சமன்பாட்டை எழுதிக் காட்டுக.
இ) இச்செயன்முறை கலத்தில் காணப்படும் எப்புன்னங்கள் மூலம் நடைபெறுகின்றது.


5) போட்டியாளர்கள் போட்டி ஆரம்பிப்பாளரின் வெடிச்சத்தத்தைக் கேட்டவுடன் ஓட ஆரம்பித்தனர்.
அ) தூண்டல் ஆ) வாங்கி
இ) துலங்கள் என்பவற்றைக் குறிப்பிடுக.

03) தாவர வேர் தொகுதியின் படம் கீழே தரப்பட்டுள்ளது. அதில் வேர் முடிச்சுகள் இருப்பதைக் காணலாம.




1) அ) இந்த வேர்த்தொகுதி பூக்கும் தாவரத்தின் எவ்வகைக்குரியதெனக் கூறுக.
ஆ) வினா அ) வில் வேரின் அமைப்பை எவ்வியல்பைக் கொண்டு இனங்காண்பீர்.

2) அ) வேர் முடிச்சிகளைக் கொண்ட தாவரங்களைக் குறிப்பிடுக.
ஆ) அவ்வேர் முடிச்சிகளில் வாழும் பற்றீரியா வகை எது?
இ) வேர் முடிச்சிகள் கொண்ட தாவரம் காணப்படுவதனால் மண் எவ்வாறு வளம் பெறுகின்றது?
ஈ) வேர் முடிச்சில் உள்ள பற்றீரியாவுக்கும் தாவரத்திற்குமான தொடர்பை எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது.



வட மாகாணத்தின் முதலமைச்சராக முன்னாள் நீதியரசர் சீ.வி விக்னேஸ்வரன் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். அலரி மாளிகையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, ரவூப்ஹக்கீம், டலஸ் அழகப்பெரும, டக்ளஸ் தேவானந்தா, வாசுதேவ நாணயக்கார, வினாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் டியூ குணசேகர, திஸ்ஸ விதாரண, வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர்களான பீ.திகாம்பரம், பிரபா கணேசன், ஜோன் அமரதுங்க, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, விக்னேஸ்வரனின் குடும்பத்தினர் ஆகியோர் கலந்து கொண்ட போது.....

# இராஜினாமா செய்யும் எண்ணத்தை கைவிட்டார் செல்வம் அடைக்கலநாதன்



டெலோ அமைப்பின் தலைமைப் பதவியை இராஜினாமா செய்யும் தீர்மானத்தை பலருடைய வேண்டுகோள்களை ஏற்று கைவிடுவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடமாகாண சபையில் வன்னி மாவட்டத்திற்கென அமைச்சுப் பதவியொன்று வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

எனினும் கட்சித் தலைமை அந்தப் பதவியை யாழ்.மாவட்டத்திற்கு வழங்குவதற்குத் தீர்மானித்திருந்தது. கட்சியின் முடிவுக்குக் கட்டுப்பட்ட போதிலும் வன்னி மாவட்ட மக்களுக்குப் பொறுப்பு கூறும் வகையில் தலைமைப் பதவியை இராஜினமா செய்ய உத்தேசித்திருந்தேன்.

ஆனால், எனது இந்த நடவடிக்கை கட்சியின் செயற்பாட்டுக்கும் மாகாண சபையின் செயற்பாடுகளுக்கும் ஆரோக்கியமாக இருக்கமாட்டாது என்று சுட்டிக்காட்டி எனது இராஜினாமா யோசனையைக் கைவிடுமாறு பலரும் கேட்டுக் கொண்டதையடுத்து அந்தக் கோரிக்கையில் உள்ள நியாயத்தன்மைமையை உணர்ந்து எனது இராஜினாமா தீர்மானத்தை கைவிட்டுள்ளேன் என மேலும் தெரிவித்தார்.

# இஸ்ரேல் பெண்ணை துன்புறுத்திய இலங்கைப் பெண் கைது

(கொழும்பு)

இஸ்ரேல் பெண்ணொருவரை உடல் மற்றும் உள ரீதியாக துன்புறுத்தியதாக கூறப்படும் இலங்கைப் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இஸ்ரேலின் கோகெவ்யார் என்ற பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. 80 வயதான இஸ்ரேல் பெண்ணைப் பராமரித்து வந்த 30 வயதான இலங்கைப் பெண்ணே அந்த இஸ்ரேலிய பெண்ணை துன்புறுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

வயதான இஸ்ரேல் பெண்ணை பராமரித்து வந்த இலங்கை பெண் அவரை துன்புறுத்துவதையும் தாக்குதல் நடத்துவதையும் அந்த பெண்ணின குடும்பத்தினர் வீடியோவில் பதிவுசெய்துள்ளனர்.

எனினும் விசாரணைகளின் போது இந்தக் குற்றச்சாட்டுகளை இலங்கைப் பெண் மறுத்துள்ளதுடன் தன்னையே இஸ்ரேல் பெண் துன்புறுத்தியும் தாக்கியும் வந்துள்ளதாக கூறியுள்ளார்.

தான் பணியில் இருந்து விலக வேண்டும் எனவும் பெண்ணின் குடும்பத்தினரின் கோரிக்கை காரணமாக தான் தொடர்ந்தும் தங்கியிருப்பதாகவும் இலங்கைப் பெண் குறிப்பிட்டுள்ளார்.

# கல்வயல் விவசாயிகளுக்கு மானிய உர விநியோகம்

(சாவகச்சேரி)

கல்வயல் விவசாய சம்மேளனத்தின் அங்கத்தவர்களுக்கான மானிய உரவிநியோகம் நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

புத்தூர் சந்தியிலுள்ள கமநல சேவைகள் நிலையத்தில் வரிப்பணம் செலுத்திய பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 2.30 மணி வரை மானிய உரத்தினை பெற்றுக்கொள்ளுமாறு கல்வயல் விவசாய அமைப்பின் தலைவர் கா.வேதநாயகம் அறிவித்துள்ளார். (இ)

# மயானக்காணி அத்துமீறல் எதிரொலி: மாவட்ட செயலகம் முன்பு ஆர்ப்பாட்டம்




(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு முன்னால் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

ஆரையம்பதி பிரதேசத்திலுள்ள இந்து மயானக் காணிகளை காத்தான்குடியைச் சேர்ந்த சிலர் அத்துமீறி பிடித்துள்ளதாகவும் அதை மீட்டுத்தருமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டம் நேற்று நடைபெறவிருந்த நிலையிலேயே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது. இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆரையம்பதி பிரதேச மக்கள் மாவட்ட செயலகத்தின் பிரதான கதவுகளை மூடினர்.

அத்துடன் மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்திற்கு வருகை தந்த பிரதியமைச்சர்கள், நாடளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளே செல்ல முடியாதவாறு வழிமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டடிருந்தோர் தமது பொது மயான காணியை அத்துமீறி காத்தான் குடியை சேர்ந்த சிலரினால் பிடிக்கப்படுவதாகவும் இதனால் தமக்கு சடலங்களை அடக்கம் செய்ய இடமில்லாது இருப்பதாகவும் கோசங்களை எழுப்பியதுடன் சுலோகங்களையும் தாங்கியிருந்தனர்.

இதையடுத்து அங்கு வருகை தந்த பொலிஸார் மூடப்படடிருந்த மாவட்ட செயலக கதவுகளை உடைத்து அரசியல் பிரமுகர்களையும் அதிகாரிகளையும் அழைத்துச் சென்றனர் இது விடயமாக கவனமெடுப்பதாக அங்கு வந்த அரசியல்வாதிகள் உறுதியளித்தனர்.

# கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு கட்டடம் அமைக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வசாவிளான் கிராமத்திற்கு பொது மண்டபம் ஒன்று இல்லாததால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக கிராம அபிவிருத்தி சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

தற்போது மிள்குடியேறியுள்ள 75 குடும்பங்கள் தமது தேவைகள் தொடர்பாக கிராம அபிவிருத்தி கூட்டங்களை கூடி கலந்தாலோசிப்பதற்கு ஒரு பொது நோக்கு மண்டபம் இல்லாமல் மரநிழலில் கூடுவதாக மேலும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தனியார் நிறுவனம் ஒன்றால் அபிவிருத்தி சங்கத்திற்கென கொடுக்கப்பட்ட கதிரைகளினை வைப்பதற்கு இடம் இல்லாமல் பொது நபர்களின் வீட்டில் வைப்பதாகவும் இதனால் தாம் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாக அபிவிருத்தி சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

# விபச்சார நிலையம் முற்றுகை



(கொழும்பு)

மருதானையில் விருந்தினர் விடுதி என்ற பெயரில் இயங்கி வந்ததாகக் கூறப்படும் நிலையம் ஒன்றிலிருந்து 7 பெண்கள் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளர்.

கொழும்பு, வலப்பனை, வெல்லம்பிட்டிய வவுனியா, திருகோணமலை ஆகிய பிரதேச ங்களைச் சேர்ந்த 21 முதல் 40 வயதிற்கு இடைப்பட்ட பெண களே கடந்த சனிக்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# தெங்கு அமைச்சிற்கு வீடியோ தொழில்நுட்பம்

தெங்கு அபிவிருத்தி அமைச்சிற்கு வீடியோ தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்றுக் காலை தெங்கு அபிவிருத்தி, தோட்ட மக்கள் அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்பகுமார தலைமையில நடைபெற்றது.

தெங்கு அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி குறைந்த சேவையாளர்களைக் கொண்டு கூடிய பயன் பெறுவது குறித்து விளக்கமளிக்கப்பட்டது. அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களிடையிலான மாதாந்த கூட்டத்தின் போது இப்புதிய தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது.

தெங்கு அபிவிருத்தி மற்றும் தோட்ட மக்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நிஹால் சோமவீர உட்பட பல அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஈராக்கில் தீவிரவாத தாக்குதல்; 130 பேர் உடல் சிதறி பலி



ஈராக்கில் கடந்த 5 நாட்களாக நடந்த தொடர் தீவிரவாத தாக்குதலில் 2 நிருபர்கள், புனித பயணம் மேற்கொண்ட யாத்திரிகர்கள் உட்பட 130 பேர் பலியானார்கள். பலர் படுகாயம் அடைந்துள்ளனர். இதனால் பதற்றம் அதிகரித்துள்ளது. ஈராக்கில் சன்னி , ஷியா முஸ்லிம் பிரிவினருக்கு இடையில் தொடர்ந்து மோதல் நடக்கிறது. மேலும் ஈராக்கில் இருந்து அமெரிக்க படை வாபஸ் பெற்றதில் இருந்து தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. கடந்த சில மாதங்களாக தொடர்ந்து வன்முறைகள் அதிகரித்துள்ளன. பாக்தாத் வடபகுதி அதாமியா பகுதியில் ஷியா பிரிவினரின் இமாம் முகமத் அல் ஜவாத் மசூதி உள்ளது. ஈராக்கின் பல பகுதிகளில் இருந்தும் இந்த மசூதியில் பிரார்த்தனை செய்ய ஏராளமானோர் புனித பயணம் மேற்கொள்கின்றனர்.

மசூதி அருகே நேற்று முன்தினம் திடீரென குண்டு வெடித்ததில் 49 பேர் பலியானார்கள். 75இற்கும் மேற்பட்டோர் பலத்த காயம் அடைந்தனர். அதேபோல முசோல் பகுதியில் செய்தி சேகரிக்க சென்ற டிவி நிருபர் முகமது கரீம் அல் பத்ரானி, கேமராமேன் முகமது ஜகானம் ஆகியோரை மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டு கொன்றனர். பலாத் நகரத்தில் உள்ள சிற்றுண்டி விடுதியில் தற்கொலை படை தாக்குதலில் 12 பேர் இறந்தனர். 35 பேர் காயம் அடைந்தனர். முதாதியா, பாயா பகுதியில் நடந்த கார் குண்டு வெடிப்பில் 3 பேர் பலியானார்கள். 13 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

பாக்தாத் வட மற்றும் தென் பகுதியில் பாதுகாப்பு படைக்கும், தீவிரவாதிகளுக்கு இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் 7 தீவிரவாதிகள் சுட்டு கொல்லப்பட்டதாக ஈராக் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஈராக்கில் கடந்த 5 நாட்களில் நடந்த பல்வேறு தீவிரவாத தாக்குதலில் 130 பேர் பலியாகி உள்ளனர். இந்த ஆண்டில் இதுவரை 4800 பேர் பலியானதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இதனால் மக்கள் பீதியில் உள்ளனர்.


# எகிப்தில் மீண்டும் வன்முறை; ஆதரவாளர்கள் 51பேர் பலி



எகிப்தில் நேற்று முன்தினம் நாடு முழுவதிலும் எழுந்த வன்முறையில் 51பேர் பலியாகி உள்ளனர். எகிப்து தலைநகர் கெய்ரோவில் 1973ஆம் ஆண்டு அரேபிய - இஸ்ரேலிய போர் தினத்தை இராணுவ ஆதரவாளர்கள் விழாவாக கொண்டாடினார்கள். அப்போது முன்னாள் அதிபர் முர்சியின் ஆதரவாளர்கள் மத்திய கெய்ரோ சதுக்கத்தில் போராட்டம் நடத்துவதற்காக குவிந்தனர். எகிப்து பாதுகாப்பு படையினருக்கும் அதிபர் முர்சி ஆதரவாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 51 அப்பாவிப் பொதுமக்கள் பலியாகினர். கெய்ரோவில் தொடங்கிய வன்முறை நேரம் செல்லச் செல்ல மற்ற பகுதிகளுக்கும் பரவியது.

முர்சி ஆதரவாளர்கள் தீப்பந்தம் மற்றும் பெற்றோல் குண்டுகளை பொலிஸார் மீது எறிந்தனர். பின்னர் வன்முறையை கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

# அணு ஆயுத சோதனையில் பிருதிவி ஏவுகணை வெற்றி



(புவனேஸ்வரம்)

இந்தியாவின் பாதுகாப்புக்காக பிருதிவி ரக ஏவுகணைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் பிருதிவி- 2 ரக ஏவுகணைகள் சுமார் 350 கிலோ மீற்றர் தொலைவுக்கு பாய்ந்து. சென்று தாக்கும் திறன் கொண்டது.

பிருதிவி-2 ரக ஏவுகணைகள் இராணுவ பயன்பாட்டுக்கு சேர்க்கப்பட்டு விட்டது. இந்த ரக ஏவுகணையில் சுமார் 500 கிலோ முதல் 1000 கிலோ வரை எடை கொண்ட வெடி மருந்துகளை வைத்து பயன்படுத்த முடியும். குறிப்பாக இந்த ஏவுகணைகளில் அணு ஆயுதங்கள் பயன்படுத்த முடியும்.

இரட்டை என்ஜின்கள் கொண்ட பிருதிவி-2 ரக ஏவுகணைகளில் நவீன தொழில் நுட்பத்துக்கு ஏற்ப மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து பிருதிவி-2 ரக ஏவுகணைகள் அடிக்கடி சோதித்து பார்க்கப்பட்டு வருகின்றன.

கடைசியாக கடந்த ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி பிருதிவி-2 ரக ஏவுகணை சோதித்துப் பார்க்கப்பட்டது. இந்த நிலையில் இன்றும் இந்த ஏவுகணை சோதனை நடந்தது.

ஒடிசா மாநிலம் சந்திப்பூரில் இருந்து அந்த ஏவுகணை செலுத்தப்பட்டது. அந்த ஏவுகணை குறிப்பிட்ட இலக்கை காலை 9.14 மணிக்கு தாக்கியது. இதன் மூலம் நேற்று நடந்த பிருதிவி-2 ஏவுகணை சோதனை வெற்றி பெற்றது.

பிருதிவி-2 ஏவுகணை சோதனை இராடார்கள் மூலம் கண்காணிக்கப்பட்டது. குறிப்பிட்ட இலக்கை ஏவுகணை தாக்கியதும் காட்சிகளாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சோதனை மூலம் எத்தகைய திடீர் போரையும் சந்திக்கும் திறமை இந்தியாவுக்கு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# இளவரசர் ஹரியை பிடிக்க ஆப்கான் தீவிரவாதிகள் முயற்சி

(லண்டன்)

ஆப்கானிஸ்தானில் பிரிட்டிஷ் இளவரசர் ஹாரியைப் பிடிக்க தீவிரவாதிகள் முயற்சித்ததாக செய்திகள் தெரிவித்தன. ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள நேட்டோ படையில் இங்கிலாந்து இராணுவமும் இடம்பெற்றுள்ளது.

எனவே இங்கிலாந்து விமானப் படையில் பணிபுரியும் இளவரசர் ஹாரி ஆப்கானிஸ்தான் சென்றார். அங்கு முகாமிட்டுள்ள இங்கிலாந்து இராணுவத்தின் ஹெலிகொப்டர் விமானியாக அவர் பணிபுரிந்தார். அங்கு முகாமிட்டிருந்த தலிபான், முஜாகுதீன் தீவிரவாதிகளை வெடி குண்டு வீசி அவர் அழித்தார். பின்னர் அவர் இங்கிலாந்து திரும்பி விட்டார்.

இந்நிலையில் ஆப்கானிஸ்தான் குன்னார் மாகாணத்தின் தலிபான் தீவிரவாதிகளின் கமாண்டர் குவாரி நஸ்ருல்லா டெய்லி மிர்ரர் பத்திரிகைக்கு அறித்த பேட்டியில் கூறியதாவது:

ஆப்கானிஸ்தானில் தங்கி இருந்த ஹாரி தான் எங்களது முதல் இலக்கு. அவரை எப்படியாவது பிடிக்க வேண்டும் என்று திட்டம் தீட்டி குறி வைத்தோம். இதற்கான தீவிர முயற்சியில் ஈடுபட்டோம். ஆனால் அவர் தப்பி விட்டார்.



இளவரசர் ஹாரி இங்கிலாந்துக்கு வேண்டுமானால் இளவரசராக இருக்கலாம். ஆனால் எங்களைப் பொருத்தவரை அவர் சாதாரண இராணுவ வீரர் தான் என்று நஸ்ருல்லா கூறினார்.

## உலகச் செய்திகள்

# குடியுரிமை கோரி அமெரிக்காவில் பேரணி



(நியூயோர்க்)

குடியேற்ற சட்டத்தில் திருத்தம் செய்யக்கோரி, அமெரிக்காவில், ஆயிரக்கணக்கான மக்கள் பேரணி நடத்தினர்.

அமெரிக்காவில், உரிய விசா இல்லாமல், 1 கோடிக்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் வசிக்கின்றனர். நியூயோர்க்கில் மட்டும், 5 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள், உரிய குடியுரிமை ஆவணங்கள் இல்லாமல் உள்ளனர். எனவே, குடியேற்றச் சட்டத்தில் உரிய திருத்தம் செய்து, தங்கள் வாழ்வாதாரத்தை நிலைப்படுத்தக்கோரி, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த, உரிய குடியேற்ற விசா இல்லாதவர்கள், 160 நகரங்களில், நேற்று முன்தினம் பேரணி நடத்தினர். இப் பேரணியில், ஆசியநாட்டவர்கள், ஸ்பெயின் மற்றும் அரபு நாட்டவர்கள்; 1.30 இலட்சம் பேர் பங்கேற்றனர்.



# சொத்தை அபகரிக்க முயற்சி அண்ணன் மீது ரோஜா புகார்

(சென்னை)

சொத்து அபகரிக்க திட்டமிட்டுள்ளதாக, தனது சகோதரர் மற்றும் மேலாளர் மீது பொலிசில் புகார் கொடுத்துள்ள நடிகை ரோஜா, தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சியின் மகளிர் அணி நிர்வாகியும், பிரபல நடிகையுமான ரோஜா அனந்தபூர் மாவட்டம் ராயதுர்கம் பொலிசில் நேற்று முன்தினம் அளித்த புகாரில் கூறியிருப்பதாவது: ரியல் எஸ்டேட் அதிபரும், எனது அண்ணனுமான ராம்பிரசாத் ரெட்டி, எனது மேலாளர் பிரசாத் ராஜு ஆகியோர், கடந்த சில நாட்களாக தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதாக கூறி, என்னிடம் பணம் கேட்டுத் தொல்லை கொடுத்து வந்தனர்.

எனது அண்ணனின் நடத்தை சரியில்லாததால், கடந்த 2 ஆண்டுகளாக அவருடன் நான் பேசுவதில்லை. நான் சினிமாவில் நடித்து சம்பாதித்த பணத்தை இருவரும் பறித்துக் கொண்டதால், இப்போது டிவியில் நடித்து சம்பாதித்து வருகிறேன். இந்நிலையில், கடந்த 3ஆம் திகதி ராம்பிரசாத் ரெட்டி, பிரசாத் ராஜு ஆகியோர் என்னிடம் வந்து, உனது சொத்தை எங்களது பெயருக்கு மாற்றி எழுதித் தரவேண்டும். இல்லையென்றால், உன்னை ஒழித்துவிடுவோம் என்று மிரட்டி விட்டுச் சென்றனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த புகாரில் கூறப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, ராயதுர்கம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பாலகோட்டி கூறுகையில், நடிகை ரோஜா கொடுத்த புகாரின் பேரில் இருவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும், இருதரப்பினரும் சமாதான பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர் என்றார்.

# டெங்கு ஒழிப்பு வாரம் ஆரம்பம்; மன்னாரில் விழிப்புணர்வு பேரணி

(மன்னார்)

தேசிய நுளம்பு கட்டுப்பாடு மற்றும் டெங்கு ஒழிப்பு மன்னாரில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்.பரீட் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சினால் ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதியான ஒரு வார காலத்தினை தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தியுள்ள நிலையில் குறித்த நிகழ்வு மன்னாரில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் பிராந்திய சுகாதார திணைக்களத்தின் ஏற்பாட்டில் காலை 9.00 மணியளவில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று மன்னார் நகரில் இடம்பெற்றது.

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன் குறித்த விழிர்ப்புணர்வு பேரணி ஆரம்பமானது.

இதன் போது நுளம்பு கட்டுப்பாட்டு பிரிவினர், இலங்கை செஞ்சிலுவைச்சங்க பணியாளர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது குறித்த பேரணி வைத்திய சாலை வீதியூடாக மன்னார் பஸார் பகுதிக்குச் சென்று அங்கிருந்து மன்னார் மாவட்டச் செயலகத்தை சென்றடைந்தது.



இதன் போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தேசப்பிரிய குறித்த விழிப்புணர்வு ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கு ஆதரவு தெரிவித்து பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து குறித்த ஊர்வலம் பிரதான வீதியூடாக சென்று மீண்டும் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினை சென்றடைந்தது.

இதன் போது மன்னார் நகர சபை தலைவர், மன்னார் பொது வைத்தியசாலையின் நிர்வாக அலுவலகர் எஸ்.என்.எம்.சஜானி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

## மாணவர்களுக்கு திரிபோஷா பிஸ்கட்

புதிய போஷாக்கு உணவாக 2014 முதல் பாடசாலை மாணவர்களுக்கு திரிபோஷா பிஸ்கட்டுக்கள் அறிமுகம் செய்யப்படும்.

கந்தானையிலுள்ள திரிபோஷா நிறுவனம் 90 வீத உற்பத்தியை தற்போது மேற்கொள்கிறது. இது முன்னர் 60 வீதமாக இருந்தது.

இதனை 2014 முதல் 100 வீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரு திரிபோஷா பக்கெட்டுக்களுக்குப் பதிலாக நான்கு திரிபோஷா பக்கெட்டுக்கள் பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

இந்தப்போஷாக்கு பிஸ்கட்டை கந்தானை தொழிற்சாலையில் உற்பத்தி செய்வதற்கு ஆதரவளிக்க முன்னணி பிஸ்கட் உற்பத்தியாளர்கள் உறுதியளிதத்துள்ளனர்.

## கொட்டாஞ்சேனையில் கிருஷ்ணர் ஆலயம் நிர்மாணம்

(யாழ்.நிருபர்)

சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகத்தினால் கொட்டாஞ்சேனை புதுச்செட்டித் தெருவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் ஸ்ரீராதா கிருஷ்ண ஆலய திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இவ்ஆலய திருப்பணி வேலைகளுக்கு உதவ விரும்புவோர் ஒரு செங்கல்லுக்காக 3000 ரூபா செலுத்தி உங்கள் பெயரைப் பதிவுசெய்து கொள்ள முடியும்.

செங்கல்லின் முன்புறம் உங்கள் பெயரும், மறுபுறத்தில் ஹரே கிருஷ்ணா நாமமும் பதிவு செய்யப்படும். இதனால் ஆலய கட்டடத்தில் உதவிபுரிவோர் பெயரும் இரண்டறக் கலந்து என்றென்றும் நிலைக்கும் என சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம் தெரிவித்துள்ளது. (10)

## கசிப்பு உற்பத்தி உச்சம்; தடுத்து நிறுத்த கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கோணாவில் புதியகுடியிருப்பு பகுதியில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் தொடர்ந்தும் அதிகரித்து வருவதாகவும் இதனைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள கோணாவில், யூனியன்குளம், புதியகுடியிருப்பு ஆகிய பகுதிகளில் தற்போது சட்டவிரோத கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுகின்றது எனவும் இதனைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கிராமங்களில் கடந்த காலங்களில் அதிகரித்துக் காணப்பட்ட சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனை என்பன அங்கு மேற்கொள்ளப்பட்ட அதிரடி நடவடிக்கைகளைத் தொடர்ந்து ஓரளவு குறைவடைந்து காணப்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், இச்சட்டவிரோத செயற்பாடுகள் தற்போது மேலும அதிகரித்துக் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு சட்டவிரோத மதுபான விற்பனை தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக இளம் விதவைப் பெண்ணொருவரின் வீடு இரு தடவைகள் எரியூட்டப்பட்ட சம்பவம் ஒன்றும் இடம் பெற்றதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனைகளைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேணடும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### அரசியல்...

முதல்வராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள சி.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதியிடம் பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளாரென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

விக்னேஸ்வரன் ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் சத்தியப் பிரமாணம் செய்துகொள்வது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயே இருந்த சர்ச்சை பற்றி குறிப்பிட்ட சம்பந்தன், முதலமைச்சராகத் தேர்வு செய்யப்பட்டவர் ஜனாதிபதியிடம் பதவி பிரமாணம் ஏற்பதில் பெரிய உள்ளர்த்தம் பார்க்கவேண்டிய அவசியம் இல்லை, அவர்கள் பதவிப்பிரமாணத்தை எங்கு செய்து கொண்டாலும், இதே வாசகத்தைத்தான் பயன்படுத்த வேண்டும்.

இலங்கையில் மத்திய அரசுடன் மோதி மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுவது கடினமாக இருக்கும், ஏனென்றால், மாகாண சபை தற்போதுதான் பிறந்த ஒரு குழந்தை, அது வளரவேண்டும் என்று கூறிய சம்பந்தன், மாகாண சபையை நடத்துவதற்கு ஒரு அலுவலகக் கட்டடம் கூட இல்லாத யதார்த்தத்தை நினைத்துப் பார்க்கவேண்டும் என்றார்.

ஆனால் இந்த நல்லெண்ண சமிக்ஞையை சிங்கள அரசியல் தலைமை சரியாக ஏற்றுக்கொண்டு, தமிழர்களுக்கு சரியான தீர்வைத் தராவிட்டால், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பு என்றார் சம்பந்தன்.

### அர்த்தமுள்ள...

பூரண ஒத்துழைப்பு வழங்கும்.

மீனவர் பிரச்சினை மனிதாபிமான அடிப்படையில் நோக்கப்பட வேண்டியது வன்முறைகளை கையாள்வது பொருத்தமாக அமையாது என அவர் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளினதும் மீனவர்களும் இணைந்து பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் பிச்சினைகளை தீர்க்க முடியும்.

பிரதமர் மன்மோகன் சிங் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்பது குறித்து பின்னர் அறிவிக்கப்படும். உரிய நேரத்தில் இந்தியப் பிரதமரின் பிரசன்னம் குறித்து அறிவிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதிலும், இந்தியவெளியுறவு அமைச்சகத்தின் சார்பில் தான் அதில் கலந்துகொள்வேன் என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் நேற்றுப் பிற்பகல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்தித்தார். இந்தச் சந்திப்பு பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்றது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான சமூக மற்றும் பொருளாதார விவகாரங்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இந்தியாவின் உதவியுடன் வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டம் தொடர்பாகவும் அபிவிருத்திப் பணிகள் பற்றியும் இரு நாட்டு அமைச்சர்களும் தகவல்களை பரிமாறிக்கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சிங்ஹா, இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம், வட மாகாணத்தின் மீள்குடியேற்றம், அபிவிருத்தி, பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணிக் குழுவின் செயலாளர் எஸ்.பி. திவாரட்ண உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

### வடக்கு...

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்குப் பரிசாக வழங்கினார்.

அதேவேளை, பதவியேற்பு நிகழ்வு முடிந்த பின்னர், வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் மற்றும் பிரமுகர்களுக்கு ஜனாதிபதி தேநீர் விருந்தளித்தார்.

### ஜனாதிபதி...

பங்கேற்கவில்லை.

அரச தரப்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பிரதமர் டீ.எம்.ஜயரத்ன, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, டியூ குணசேகர, ராஜித சேனாரத்ன, மைத்திரீபால சிறிசேன, திஸ்ஸ விதாரண, ரவூப் ஹக்கீம், ஏ.எல்.எம்.அதாவுல்லா, டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும், பிரபா கணேசன், ஏ.எச்.எம். அஸ்வர் உளளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கலந்துகொண்டனர்.

### பதவிப்...

அவரை சந்தித்து வாழ்த்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டமையானது சிறந்த சமிக்ஞையாகும். இதேபோன்று மாகாணசபையையும் முன்னெடுத்துச் சென்று மக்களுக்கான சேவைகளைச் செய்வதில் இவ்வாறான செயற்பாடகள் உதவுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### நடைமுறைக்கு...

யோசனைக்கு அமைய மக்களுக்கு இருக்கும் மனித உரிமைகளை வலுப்படுத்தும் நோக்கில் இந்த கல்வித்திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் பிரதிபா மஹாநாமஹேவா தெரிவித்தார்.

முக்கியமாக வடக்கில் புதிதாக ஸ்தாபிக்கப்பட உள்ள மாகாண சபையின் மக்கள் பிரதிநிதிகளுக்கு மனித உரிமைகள் தொடர்பில் தெளிவுபடுத்துவது குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக் குழு கவனம் செலுத்தி வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

### அரசுடன்...

ஜனாதிபதி. என்னுடைய பணி அனைத்து மக்களுக்கும் உரித்தானது. ஆகையினால் எக்காரணம் கொண்டும் எவ்விதமான பாரபட்சத்தையும் நான் எவருக்கும் காட்டமாட்டேன்.

உதவி, அபிவிருத்தி என்பன அனைத்து பிரதேசங்களுக்கும் ஒரே மாதிரியே முன்னெடுக்கப்படும். ஆனால், அந்தந்த உதவிகள் உரியவர்களுக்கும் உரிய பிரதேசத்திற்கும் கிடைக்க வேண்டுமானால் சம்பந்தப்பட்டவர்கள் அரசாங்கத்துடன் சுமுகமாக நடந்துகொள்ள வேண்டும்.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அரசாங்கத்துடன் ஒத்துழைத்து நடந்துகொள்ளுமானால் அபிவிருத்தி, மேம்பாடுகள் வழமைபோல் சுமூகமாக நடைபெறும் என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### இன சந்தேகத்தை...

பார்க்கின்றோம் என்ற எமது மனோநிலையை எடுத்துக் காட்டக் கூடியதாய் அமைந்துள்ளது.

போருக்குப் பின்னரான எமது மக்களின் தேவைகளை காலதாமதம் இன்றி பூர்த்தி செய்வதான கிட்டிய நோக்கை உதவுவதாகவும் எமது செயற்பாடு அமைந்துள்ளது.

சிங்கள மக்கள், பாதிக்கப்பட்ட எமது தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கையில் விடிவை ஏற்படுத்த தம்மாலான சகலதையும் தமது பிரதிநிதிகள் மூலம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

உள்ளக சுயநிர்ணயம் ஒருநாட்டை பிரிவுபடுத்தாமல் ஒற்றுமைப்பாதையில் கொண்டு செல்லக்கூடும் என்ற உண்மையை எமது சிங்கள சகோதர, சகோதரிகள் தமது அரசியல்வாதிகளுக்கு இடித்துரைக்க முன்வரவேண்டும்.

சிங்களமொழியும் பாரம்பரியங்களும் சிங்கள மக்களுக்கு எந்த அளவு முக்கியமோ அதே அளவு எமது மொழியும் எமது பாரம்பரியங்களும் எமக்கும் முக்கியம் என்பதை சிங்கள மக்கள் உணர்ந்து செயலாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இங்கு வன்முறைக்கு இடமில்லை. பலாத்காரத்திற்கு இடமில்லை. புரிந்துணர்வு ஒன்றே எம்மை சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் நோக்கிச் செல்ல வழிவகுக்கும்.

எனவே என்னுடைய இன்றைய செயற்பாடு இரு இன பொது மக்களையும் ஒன்றுபடுத்த உறுதுணையாக அமைவதாக இறைவன் ஆசி சகலருக்கும் கிடைப்பதாக எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லைக்கும் அமைச்சுப்பதவி வேண்டுமென இன்று ஆர்ப்பாட்டம்

## தமிழரசுக் கட்சிக்கு தொடர்பில்லையென அறிவிப்பு

(முல்லைத்தீவு)

முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நினைவூட்டி கடந்த மாகாணச்பைத் தேர்தலில் வாக்குகளைப் பெற்றுவிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணிப்பது எந்த வகையில் நியாயம் எனத் தெரிவித்து இன்றைய தினம் முல்லைத்தீவு நகரில் ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நடத்தப்படவுள்ளது.

வடமாகாணசபைக்குரிய நான்கு அமைச்சுப் பதவிகளையும் கட்சி அடிப்படையா அல்லது மாவட்ட அடிப்படையிலா வழங்குவது என்ற குழப்ப நிலை நீடிக்கிறது.

தமிழரசுக்கட்சி இரண்டு அமைச்சுக்களை தனது கட்சியைச் சேர்ந்த கிளிநொச்சி, வவுனியா ஆகிய உறுப்பினர்களுக்கு வழங்க முடிவெடுத்துள்ள நிலையில், எஞ்சிய இரு அமைச்சுக்களில் ஒன்று மன்னாருக்கும் மற்றையது யாழிற்கும் வழங்கப்படவுள்ளது.

இதனால் இறுதி யுத்தத்தில் வெகுவாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு விடுபட்டுள்ளது. இந்த நிலையில் முல்லைத்தீவிற்கும் அமைச்சுப்பதவி வேண்டுமென தெரிவித்து இன்றைய தினம் முல்லைத்தீவு நகரில் முற்பகல் 10.00 மணிக்கு ஆர்ப்பாட்டமொன்று இடம்பெறவுள்ளது.

இதேவேளை இன்றைய ஆர்ப்பாட்டத்திற்கும் இலங்கை தமிழரசுக் கட்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லையெனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் வெற்றி பெற்ற ஒருசிலர் தமது சொந்த சுயலாபத்திற்காகவே இதனைச் செய்வதாகவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற அன்ரனி ஜெகநாதன் தினமுரசுக்குத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் தமக்கு அமைச்சுப்பதவியை பெறும்போது அதனை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஒதுக்கு வதற்கு ஏன் பின்னடிக்கின்றன எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

அத்துடன் ஜனாதிபதி முன்னிலையில் முதலமைச்சர் பதவிப் பிரமாணம் செய்துகொண்டமை எவ்வித தவறும் இல்லை எனவும் அரசுடன் ஒத்துழைப்பதன் மூலமே மாகாணசபையை திறம்பட நடத்தமுடியும் எனவும் தெரிவித்தார்.

# பொதுநலவாய மாநாட்டில் அவுஸ்ரேலியா பங்கேற்கும்

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வுகளை புறக்கணிக்கப் போவதில்லை என அவுஸ்ரேலிய பிரதமர் டோனி அப்போட் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை காரணிகளுக்காக இலங்கை அமர்வுகளை புறக்கணிக்கும் உத்தேசம் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கனேடிய பிரதமர் அமர்வுகளை புறக்கணிப்பதாக அறிவித்துள்ள நிலையில் அப்போட் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

எபெக் என்னும் சர்வதேச தலைவர்கள் அமர்வில் பங்கேற்பதற்காக கனேடிய பிரதமர் ஸ்டீவன் ஹார்பரும், அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அப்போட்டும் தற்போது இந்தோனேஷியாவிற்கு விஜயம் செய்துள்ளனர். இருவரும் இந்தோனேஷியாவின் தீவு ஒன்றில் நடைபெற்றுவரும் அமர்வுகளில் பங்கேற்றுள்ளனர்.

ஹார்பரின் தீர்மானம் பற்றி கருத்து வெளியிட முடியாது எனவும் அது அவரது சுயாதீன தீர்மானம் எனவும் அப்போட் தெரிவித்துள்ளார்.

அமர்வுகளில் பங்கேற்கப் போவதாகவும் ஆக்கபூர்வமான யோசனைகளை முன்வைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பொதுநலவாய நாடுகள் அமைப்பு மிகவும் முக்கியமான ஓர் சர்வதேச அமைப்பு எனவும், பழைய நண்பர்களை கைவிடத் தயாரில்லை எனவும் அவர குறிப்பிட்டுள்ளார்.

# பொதுநலவாய மாநாட்டிற்கு கனேடிய பிரதமர் வரார்

இலங்கையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லையென கனேடிய பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமைகளை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானத்தை தாம் எடுத்துள்ளதாக கனேடிய பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை நடத்துவதற்கு இலங்கை தெரிவுசெய்யப்பட்ட சந்தர்ப்பத்தில், இலங்கை அரசாங்கம் நாட்டின் மனித உரிமை நிலைமைகளை முன்னேற்றமடையச் செய்வதற்கும், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் கனடா நம்பியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும், துரதிஷ்டவசமாக இலங்கை அரசாங்கம் அவ்வாறு செயற்படவில்லை என ஸ்டீபன் ஹார்பர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பில், தொடர்ந்தும் உன்னிப்புடன் அவதானித்து வருவதாகவும் ஸ்டீபன் ஹார்பர் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரம், ஜனநாயகம், மனிதாபிமானத்திற்கான கௌரவம் என்பன பொதுநலவாய அமைப்பின் அடிப்படைக் கொள்கைகளாக அமைந்துள்ள நிலையில், இலங்கை அரசாங்கம் அதனை நிலைப்படுத்துவதற்கு தவறியுள்ளதாகவும் கனடா குற்றஞ்சாட்டியுள்ளது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு கனடா தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கும் எனவும் ஸ்டீபன் ஹார்பர் தெரிவித்துள்ளார்.

கனடாவின் வெளிவிவகாரம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான அமைச்சரின் நாடாளுமன்ற செயலர் தீபக் ஒப்ராய், இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் கனடாவை பிரதிநிதித்துவப்படுத்துவார் எனவும் கனேடிய பிரதமர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பயணிகள் பஸ்வண்டிகளில் முதியோருக்கு தனி ஆசனம்

## ஸ்ரிக்கர் ஒட்டும் நிகழ்வு நாளை

(வவுனியா)

வவுனியா மாவட்ட முதியோர் தின விழிப்புணர்வு செயல்திட்டத்தின் ஒரு அங்கமாக அரச மற்றும் தனியார் பஸ் வண்டிகளில் ஸ்ரிக்கர்கள் ஒட்டும் நிகழ்ச்சி வவுனியா பஸ் நிலையத்தில் நாளை புதன்கிழமை காலை 09 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வவுனியா மரவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான எம்.கே பந்துல ஹரிச்சந்திர, வவுனியா நகர பிரதேச செயலக பிரதேச செயலாளர் மு.உதயராசா, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அதிபர் ஆ.ளு. பத்மநாதன், வவுனியா வர்த்தக சங்க தலைவர் இராஜலிங்கம், நிறுவனத்தின் சமுதாய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பத்மினி பாலச்சந்திரன், இலங்கை போக்குவரத்து சபைசாலை முகாமையாளர் சந்திரன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொள்ள உள்ளனர்.

மேலும் சமூக சேவை உத்தியோகத்தர்கள், முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் இவ்விழிப்புணர்வு நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

# மூன்று பேராசிரியர்களுக்கு மருத்துவத்திற்கான நோபல் பரிசு



மருத்துவத்துறைக்கான நோபல பரிசு, மனித செல்கள் (கலங்கள்) குறித்த உரியியல் ஆய்வுகளைச் செய்த மூன்று பேராசிரியர்களுக்கு கூட்டாக வழங்கப்படுகின்றது.

இரசாயனங்களை உடலில் உள்ள செல்கள் கொண்டு செல்லும் முறை குறித்த இவர்களது ஆய்வுகளுக்காக இந்த பரிசு அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

அமெரிக்கர்களான ஜேம்ஸ் றொத்மன், ராண்டி ஷெக்மன் மற்றும் ஜேர்மனியில் பிறந்த தோமஸ் சுதோவ் ஆகியோருக்கு இது வழங்கப்படுகின்றது.

நொதிமங்கள் மற்றும் ஹோர்மோன்கள் போன்ற மனித செல்களினால் தயாரிக்கப்படும் மூலக்கூறுகள், வெசிக்கல்ஸ் என்ற சிறு பொதிகளாக உரிய நேரத்தில் உரிய இடத்துக்கு எவ்வாறு கொண்டு செல்லப்படுகின்றன என்பதை இவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

நீரிழிவு மற்றும் மூளை குறைபாடுகள் போன்ற நோய்கள் குறித்த ஆய்வுகளுக்கு இந்த கண்டுபிடிப்பு உதவும் என்று நம்பப்படுகின்றது.

# கைக்குண்டு மீட்பு

யாழ். மருதனார்மடம் பிரதேசத்தில் கைக்குண்டொன்று நேற்று இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

யாழ். மருதனார்மடம் சந்திக்கு அருகிலுள்ள இராமநாதன் மகளிர் கல்லூரிக்கு முன்பாக உள்ள கே.கே.எஸ். வீதியில் வெடிக்காத நிலையில் இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த இராணுவம் முகாம் தற்போது அகற்றப்பட்டுள்ளது. அந்த இடத்திற்கு முன்னாலேயே மேற்படி கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# மரண அறிவித்தல்



## சின்னப்பொடி தங்கத்துரை

(வ.பி.போ.சபையின் ஓய்வுபெற்ற சாலைப்பரிசோதகர் யாழ்.கோண்டாவில்சாலை)

வடமராட்சி - அல்வாய் வடக்கு தெகனையைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் மற்றும் திருகோணமலை லிங்கநகரைப் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடி தங்கத்துரை 07.10.2013 திங்கட்கிழமை திருகோணமலையில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடி கண்ணகை தம்பதியினரின் அருமை மகனும், காலஞ்சென்ற க. முருகேசு ( அதிபர்) மற்றும் கமலவேணி தம்பதியினரின் பெறாமகனும், காலஞ்சென்ற செல்லர் தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும், திருமதி.இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, அருளானந்தம், புனிதவதி மற்றும் தர்மநாதன் (கிளிநொச்சி) ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.10.2013 புதன்கிழமை காலை 8.30 மணிக்கு திருகோணமலை இல்லத்தில் நடைபெற்று வடமராட்சி அல்வாய் வடக்குக்கு எடுத்துச் செல்லப்பட்டு இளங்கோசனசமூக நிலையத்தில் அஞ்சலிக்காக பிற்பகல் 3.30 மணிக்கு வைக்கப்பட்டு அல்வாய் தெற்கு இந்து மயானத்திற்கு தகனக் கிரயைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொ.இல.071 827 5392, 077 614 072

(இ)

தகவல் : குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்



## வெள்ளையர் கணேசலிங்கம்

(அரச வர்த்தகத் திணைக்கள முன்னாள் ஊழியர் )

கைதடி நவபுரத்தைப் பிறப்பிடமாகவும், நீண்ட காலம் சென்னையில் வசித்து வந்தவருமாகிய வெள்ளையர் கணேசலிங்கம் 2013.10.07 திங்கட்கிழமைகாலமானார்.

அன்னார் திரு,திருமதி வெள்ளையர் மாதினி தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வனும், இராசலிங்கம், சண்முகலிங்கம், சுபதா (இலண்டன்), தறுமலிங்கம் (சென்னை) ஆகியோரின் அருமைச் சகோதரரும், மல்லிகா, ஜெயந்தி, இராசமோகன் (இலண்டன்), சுமித்திரா (சென்னை), ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08.10.2013 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கைதடி கிழக்கு ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத் தருகின்றோம்.

கைதடி நவபுரம்.

(இ)

தகவல் : குடும்பத்தினர்.


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஒக்ரோபர் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.